விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 02 சனிக்கிழமை (14.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 057

## நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும்!

### போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் வலியுறுத்து


(கொழும்பு)

இலங்கையில் நடந்துள்ள வன முறைகளுக்கு நிவாரணம் அளிப் பதற்கும் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களை புரிந்தவர்களுக்கு எதிராக சுதந்திர மானதும் நம்பகத்தன்மை உள்ளது மான விசாரணைகளை நடத்து வதற் கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போரினால் பாதிக்கப்பட்டுளள பெண்களின் அமைப்புகள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட பெண் களும் 20 பொது அமைப்புக்களும் இணைந்து கையெழுத்திட்டு தங் களின் கோரிக்கையை ஜனாதி பதிக்கு மகஜர் வடிவில் அனுப்பி யுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகளில் நேரடியாகப் பாதிக கப்பட்டவர்கள் என்ற ரீதியிலும் பல் வேறு ஆணைக்குழுக்கள் மற்றும் விசாரணைகளில் பங்கெடுத்தவர் கள் என்ற வகையிலும் தாங்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ள தாக அவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் நல்லிணக்கம் மற் றும் பொறுப்புக்கூறல் என்பன தொடர் பில் நீண்ட 23 ஆம் பக்கம் பார்க்க....



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையில் இருக்கின்ற வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் உயர்ஸ்தானி கர்கள் ஆகியோரை நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து உரையாடியதை படத்தில் காணலாம்.

## பசிலின் மோசடிகள்; இன்டர்போல் உதவி

(கொழும்பு)

சர்வதேச பொலிஸான இன்டர போலின் உதவியுடன் முன னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச் சர் பசில் ராஜபக்ஷவின் மோசடி கள் குறித்து விசாரணை நடத்தப் படும் என அரசாங்கம் அறிவித் துள்ளது.

அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன சீன ஊடகமொன்றுக்கு இந்த தகவலை வெளியிட்டுள் ளார். 24 ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியை வரவேற்க மோடி ஆர்வம்

(புது டில்லி)

இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தூதுக்குழுவினரை வர வேற்க இந்திய அரசும் மக்களும் ஆவலுடன் காத்திருப்பதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித் தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி யை கோலாகலமாக வரவேற்பதற்கு அனைத்து 23 ஆம் பக்கம் பார்க்க....

# உள்நாட்டு விசாரணை பலனளிக்க போவதில்லை

### சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்ற செயல்கள் தொடர்பில் முற்று முழுதான உள்நாட்டு விசாரணைப் பொறி முறையை நம்பியிருப்பது ஒருபோதும் பலனளிக்க போவதில்லை என சர்வ தேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரி வித்துள்ளது. (23 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை வாழ்விடமாகும் காங்கேசன் துறைமுகம்



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகம் இராணுவ மயமாக்கப்பட்டு முழு வதும் இராணுவ தேவைக்குட்படுத் தப்பட்டுள்ளது. 23 ஆம் பக்கம் பார்க்க....

## கைவெழுத்து போராட்டம்




(யாழ்ப்பாணம்)

காணாமல்போனவர்கள், கடத்தப் பட்டவர்களுடைய விபரங்களை உடன் வெளியிடு, அரசியல் உரிமை களைப் பறிக்காதே என்ற கோரிக் கைகளை முன்வைத்து யாழ். மத் திய பேருந்து நிலையத்தில் கை யெழுத்துப் போராட்டம் ஒன்று முன் னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 11.00 மணியள வில் நடைபெற்ற இப் போராட்டத் தினை முன் 24 ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தாவிடம் தொடர் விசாரணை வாக்குமூலமும் நேற்று பெறப்பட்டது

(கொழும்பு)

இராணுவப் புரட்சிக்கு முயற் சித்தமை, இரகசிய ஆயுதக் களஞ் சியசாலை நடத்தியமை, ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டு கள் தொடர்பாக முன்னாள் பாது காப்பு செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ குற்றப் புலனாய்வுப் பிரிவி னரால் நேற்று விசாரணை செய் யப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப் பட்ட விசாரணை மாலை 6.00 மணி வரை நடைபெற்றது. எனி னும் இது 24 ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாண சபைத் தீர்மானத்தால் தேசிய ஒற்றுமைக்கு பலத்த அடி

### கூறுகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

வட மாகாணசபைத் தீர்மானம் தேசிய ஒற்றுமைக்கு விழுந்த பலத்த அடியாகும் என ஜாதிக ஹெல உறு மய கட்சியின் பிரசார செயலாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித் துள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்ப வங்களை அடிப்படையாகக் கொண்டு வட மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப் 24 ஆம் பக்கம் பார்க்க....

## நொதேர்ன் பவர் மீது தடை நீடிப்பு உத்தரவு

(சுன்னாகம்)

மல்லாகம் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை ஆட்சேபித்து நொதேர்ன் பவர் நிறுவனத்தினரால் யாழ்.மேல் நீதிமன்றில் செய்யப்பட்ட முறை யீட்டை விசாரித்த நீதிமன்று அந்த தடையை தொடர்ந்து அமுல் படுத்த உத்தரவிட்டது.

சுன்னாகம், தெல்லிப்பழை பகுதி களில் கிணறுகளில் கழிவு ஒயில் கலந்த விவகாரம் தொடர்பில் பொது மக்களால் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் நொதேர்ன் பவர் நிறு வனத்தை தற் 23 ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**



**விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?**
**இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்**

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000/- -35,000/- வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

**0766398366**

(9513)


## மரண அறிவித்தல்



## கந்தையா ஆறுமுகம்

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் நேற்று (13.02.2015) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான கந்தையா - கற்பகத்தின் மகனும், செல்லத்துரை - திலகவதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இரதிதேவியின் பாசமிகு கணவனும், துஷ்யந்தி, தர்மதன், கேதீஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்கு அவரது இல்லத்தில் நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளியவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:-4ஆம் வட்டாரம், முள்ளியவளை.
தொலைபேசி:-024-3249440
077-5593377

தகவல்:
குடும்பத்தினர்

(9517)

## 74 படகுகள் விடுவிப்பு

(கொழும்பு)
பாதுகாப்பு பிரிவினரின் கட்டுப்பாட்டிலிருந்த தமிழக மீனவர்களின் 74 படகுகளையும் விடுவிக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ் ராஜா உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன நாளை ஞாயிற்றுக்கிழமை 15-ம் திகதி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் விடுவிக்கப்பட்ட இராமநாதபுரம், புதுக்கோட்டை,நாகை பூம்புகார் காரைக்கால் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவ படகுகளை இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கவும் நீதிபதி ஆணை பிறப்பித்துள்ளார்.(செ-11)

## மரண அறிவித்தல்



## ஞானசம்பந்தர் தையல்நாயகி

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசம்பந்தர் தையல்நாயகி நேற்று (13.02.2015) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்ற செல்லத்துரை - சொர்ணம்மா தம்பதிகளின் மகளும், காலம் சென்றவர்களான நாகலிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் மருமகளும், ஞானசம்பந்தரின் (விவாகப் பதிவாளர், சமாதான நீதவான்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஞானசம்பந்தர் (கணவர்)
நடேசபிள்ளை (சகோதரன்)
021 225 5764

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(9515)


**யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ-து)**
**Jaffna District Fishermen's Co-operative Society Unions' Federation (Ltd)**

T.P:021 222 2347
Fax:-021 222 9797
Reg-No:J/57 of 20.10.2003
E-mail:-Jadfcauf@live.com
CABLE: YARLCOFISH

இல.100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
த.பெ.இல.41.

No.100, Main Street,
Jaffna, Srilanka.
P.O.Box.41


**1.1 பதவியின் பெயர்-பொது முகாமையாளர்**

1.2 சம்பளக்குறி இல-101/9
1.3 சம்பள அளவுத்திட்டம்-10950-130X10-140X10-13650 (66/2006 இன்படி
1.4 அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ)கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்ட முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது மூன்று (03) ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்ட முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது (06) ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டுகால அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதர பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் மூன்று (03) ஆண்டுகால அனுபவம்/ க.பொ.த உயர்தராதர பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்த/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது நான்கு (04) ஆண்டுகால சேவையாற்றிய அனுபவம்.

**2.பதவி-காசாளர்**

2.1 சம்பளக்குறி இல-306/15
2.2 சம்பள அளவுத்திட்டம்-9450-75X10-80X10-11000 (66/2006 இன்படி
2.3 அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
2.4 வயதெல்லை-18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்கள்.

அ)கூட்டுறவு பணியாளர் 16வது சம்பளத்திட்ட பதவியொன்றில் இரண்டு (02) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் அல்லது

ஆ) கூட்டுறவு பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவு சங்கம் ஒன்றில் காசாளர் அல்லது வியாபார நடவடிக்கைகள் பற்றி ஒரு (01) ஆண்டுகளுக்குக்குறையாத அனுபவம்.

**3.பதவி-இலிகிதர்**

3.1 சம்பளக்குறி இல-302/14
3.2 சம்பள அளவுத்திட்டம்-9700-80X10-85X10-11350 (65/2006 இன்படி
3.3 அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவு பணியாளர் 15வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் (02) இரண்டு ஆண்டுகளுக்குக்குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் அல்லது வர்த்தக எண் கணிதம்.

ஆ)க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது பத்திரப் பரீட்சையில் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**4 பதவி-அலுவலக உதவியாளர்**

4.1 சம்பளக்குறி இல-317/16
4.2 சம்பள அளவுத்திட்டம் -9200-70X10-75X10-10650 (66/2006 இன்படி
4.3 அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ)கூட்டுறவு பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் 01 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன் 05-ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்

ஆ)08-ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 20.02.2015 அன்று காலை 10 மணிக்கு முன்னதாக தலைவர் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சம்மேளனம் (வ.து) இல.100 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் (ஏற்கெனவே கடமையிலுள்ள சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது)

(சி-113)


# திருகோணமலை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் தேவஸ்தான
## புனராவர்த்தன பஞ்சவிம்ஸத் (25) குண்டபக்ஷ பிரதிஷ்டா
# மஹா கும்பாபிஷேகம்



ஜய வருடம் பங்குனி 11 ஆம் நாள் (25.03.2015) புதன்கிழமை
காலை 9.30 முதல் 11 மணிவரை
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருமுதல்வர்
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்**
அவர்கள் தலைமையில் நடைபெறும்.

(9514)

தம்பலகாமம். தேவஸ்தான [illegible] சபை, கும்பாபிஷேக விஷேட திருப்பணிக்குழுவினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**

**021 321 0815, 021 567 1532**


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



## அமரர் பூபதி இராசையா

**நாகர்கோவில் கிழக்கு**

17.01.2015 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அந்திமகால நோயுற்ற வேளை மருத்துவ சேவை புரிந்தவர்களுக்கும் வேறு பல வழிகளிலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் குடும்பம் சார்பில் உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு... அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (16.02.2015) அதிகாலை கீரிமலையிலும் வீட்டுக்கிரியைகள் நண்பகல் 11.30 மணியளவில் தற்காலிக வசிப்பிடத்திலும் நடைபெறும். ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன உபசாரத்திலும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் , அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி
குடத்தனை வடக்கு,
குடத்தனை.

(சி/111)

**குடும்பத்தினர்.**

---

**கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.(வ.து)**
**kodikamam Palm Development Co-Operative Society (Ltd)**
කොඩිගාමම් තල් පොල් සම්පත් සංවර්ධන සමුපකාර සංගමය (සීමිත)

பதிவு இல - J/1595 - 11.03.1972

021 205 0215

**எழுதுநர் பயிற்சியாளர்களை நியமித்தல்**

மேற்குறிப்பிடப்படும் பதவிக்கு கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் தகைமையுள்ள ஆண், பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.பதவி- எழுதுநர் (பயிற்சியாளர்)
2.சம்பளம்- 66/2006 சுற்றறிக்கைக்கு அமைவாக வேலை செய்யும் நாளொன்றுக்கு ரூபா . 315.00
3. வயதெல்லை- 18-45 வரை
4.தகைமை- க.பொ.த. (சாதாரணம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி.

அங்கத்தவரின் பிள்ளைகளுக்கும் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமும் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலம் 27.02.2015 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பத்துடன் தகைமைச் சான்றிதழ்களின் நிழல் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

திகதி:-13.02.2015

பொதுமுகாமையாளர்,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கொடிகாமம்.

(9512)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடுகள்/ கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய 1500 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பெரிய், நடுத்தர வீடுகள்/ கட்டடங்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகம் அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 27.02.2015 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது மேல் மூலையில் "மாணவர்களின் விடுதிக்கான வீடு/கட்டடம்" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.

(சி-106)

---


அன்பு வாசகர்களே!

**உங்கள் வலம்புரியில் வாசகர்களின் அபிமானத்திற்குரிய**

**வலம்புரி** வாரமலர்

# சங்குநாதம்

**15.02.2015 (ஞாயிற்றுக்கிழமை) முதல் ஒவ்வொரு ஞாயிறும் கவிதை, சினிமா, விதுரனின் அதிரடி அரசியல் கட்டுரைகள், ஆலடி மாநாடு, வியாசர் பதில்கள், சிறுவர் பகுதி... என இன்னும் இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களுடன் வெளிவரும்.**

**வாசிக்கத் தவறாதீர்கள்.**


---

## இராசி பலன்

*14.02.2015*
*(மாசி 02, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு*
*தசமி பிற்பகல் 3.46 மணிவரை*
*கேட்டை பிற்பகல் 1.29 மணிவரை*
*இராகுகாலம் 9.33-11.03 மணிவரை*
*சுபநேரம் 3.33-5.03 மணிவரை*
*சர்வதேச காதலர் தினம்*

**வளவன்**

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், நம்பிக்கைகள் நடைபெறும் நாள்.

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள்.

**இடபம்:** சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, பிள்ளைகள் தொடர்பில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, திருடர் பயமுண்டு.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பழைய கடனை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் ஏற்படும் நாள், உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** எண்ணங்கள் நிறைவேற அதிக பிரயாசை எடுப்பீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு.

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், திடீர் பயணங்களால் வளக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வாகன பழுதுச் செலவுகள் குறையும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 146**

அதேபோன்று, கீழான உணர்வான இச்சையை நம்மால் முடிந்த மிகவும் உயர்வான ஒரு உணர்வான அன்பாக மாற்றுவதும் ஒரு இரசவாத முறைதான். அதுவே இறுதியான இரசவாதமாகும்.

நான் இமயமலையில் அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது எனக்கு நடந்த ஒரு உண்மையான நிகழ்ச்சியை உங்களுக்கு விளக்குகின்றேன்.

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

இமய மலையில் நான் வெறுமனே மனம் போனபடி நடந்துகொண்டிருப்பேன். என்னுடைய பொருட்கள் என்று சொல்லத்தக்கவை மிகவும் சொற்பமானதுதான். அலைந்து திரிந்து விட்டு இரவு எங்கு வேண்டுமானாலும் தூங்கிவிடுவது வழக்கம். அந்தச் சமயத்தில் நிறைய சாதுக்களைச் சந்தித்தேன். அதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில் மிகவும் குறைவான உடைகளுடன் சடைமுடியுடன் தீவிரமான தோற்றத்துடன் ஒரு சாதுவைச் சந்தித்தேன். அவர் ஒரு நாகா பாபா- சாதுக்களில் நாகா எனப்படும் பிரிவைச் சேர்ந்தவர். நான் எப்படியோ அவரால் ஈர்க்கப்பட்டு அவரிடம் சென்றேன். அப்பொழுது எனக்கு அவ்வளவாக ஹிந்தி பேச வராதாயினும் அவரிடம் உடைந்த ஹிந்தியில் பேசிச் சமாளித்தேன். அவருடன் சில நாட்கள் இருந்தேன். நாள் முழுதும் அவர் அவருடைய ஹுக்காவைப் புகைத்துக் கொண்டிருப்பார். நான் அவரைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர் செய்வதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அவருடைய ஹுக்காவில் இரண்டு தாமிரக் காசுகளை போட்டு சிறிது நேரம் புகைத்துவிட்டு அந்தக் குழாயில் இருப்பதைக் கீழே கொட்டினால் அதிலிருந்து இரண்டு தங்கக் காசுகள் வெளியே வந்துவிழும்! அவர் கடைத் தெருவிற்குச் சென்று அந்த இரண்டு தங்கக் காசுகளை விற்றுவிட்டு இன்னும் நிறைய தாமிரக் காசுகளை வாங்கிக் கொண்டு வந்து இதே முறையைத் திரும்பவும் செய்வார்! நான் அவரிடம் இது எவ்வாறு நிகழ்கிறது என்று கேட்டேன்; அவர் பதில் சொல்லவில்லை. ஆனால், வெறுமனே அந்தக் குழாயை என்னிடம் கொடுத்தார். ஆனால், புகையிலையின் மணம், மது ஆகியவை எப்பொழுதும் என் உடலுடன் ஒத்துப்போகாததால், நான் சில அடிக்குப் பின்னால் நகர்ந்தேன். நான் இமயமலைக்கு வந்தது தியானத்திற்காகவும் ஞானத்திற்காகவும்தானே தவிர, புகை பிடிப்பதிலோ தங்கக் காசுகளின் மீதோ எனக்கு ஆர்வம் இல்லை என்று நான் அவரிடம் சொன்னேன். அவர் என்னைப் பார்த்து முதன் முறையாகத் தமிழில் பேசினார். அங்கம் பழுத்தால் தங்கம் பழுக்கும்- உங்கள் இருப்புத் தன்மை பழுக்குமானால் தங்கம் பழுக்கும். நான் வார்த்தையற்றுப் போனேன். அவர் விளையாட்டாக என் முகத்தில் புகை வளையங்களை ஊதி விட்டுச் சென்றார். அதன் பிறகு மூன்று நாட்கள் நான் ஆழமான



தியானத்தில் திளைத்திருந்தேன்.

தாமிரத்தைத் தங்கமாக மாற்றுவது ஒரு இரசவாத முறை. அது வெளியுலக இரசவாத முறை. உள் உலகத்தில் இரசவாதம் என்பது நமது கீழ்நிலையிலுள்ள சக்திகளை உயர்நிலை ஆன்மீக சக்தியாக மாற்றுவது. கீழ்நிலைச் சக்திகளை உயர்நிலை ஆன்மீக சக்தியாக மாற்றும் கலையில் நீங்கள் தேர்ச்சி பெற்றுவிட்டால், உங்களால் தாமிரத்தைத் தங்கமாக மாற்ற முடியும். அது ஒன்றும் பெரிய விடயமல்ல, உள் இரசவாத முறையில் தேர்ச்சி பெற்றுவிட்டால், வெளி இரசவாதமெல்லாம் ஒன்றுமேயில்லை. அவை உங்கள் கைகளில் வெறும் குழந்தையின் விளையாட்டைப் போலாகிவிடும்.

நான் இந்தச் சம்பவத்தை உங்களிடம் சொன்னதன் காரணம், உங்களுக்கு இரசவாதத்தின் தத்துவத்தைப் புரிய வைக்கத்தானே தவிர நீங்கள் வெளியுலக இரசவாதத்தைப் பின் தொடர்வதற்காக அல்ல! அதைப் புரிந்து கொள்ளுங்கள். வெளியுலக இரசவாதங்கள் சாதாரணமானவை. உள்ளுலக இரசவாதமே உங்களை ஒரு உண்மையான குருவாக்குகிறது.

உலோகங்களுடனான இரசவாத முறையில் உண்மையில் என்ன நிகழ்கிறது? முதலில் கீழான உலோகத்தின் இருக்கும் மாசுகள் அகற்றப்படுகின்றன. பிறகு சில பொருட்கள் சேர்க்கப்பட்டு பக்குவப் படுத்தப்படுகிறது. அதன் இறுதியில் கீழான உலோகம் உயர்ந்த உலோகமாக மாறிவிடுகிறது. நமது மிருக உணர்ச்சிகள் தெய்வீக உணர்ச்சிகளாக மாற்றப்பட வேண்டும். நம்மிடம் மிருக உணர்ச்சியாக இச்சை இருக்கிறது.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

---

# அதிசய உலகம்

### இறக்கைகளுடன் ராட்சத மச்சம்!
### குட்டி தேவதை போல் உலாவும் அதிசய குழந்தை

பிரித்தானியாவில் பறவைகளின் இறக்கைகள் போல் முதுகில் ராட்சத மச்சத்துடன் குழந்தை ஒன்று வாழ்ந்து வருவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரித்தானியாவின் பென்ஸ்டாண்டன் என்ற நகரில் மாட்-ஸ்டீபனி பரவுன் என்ற தம்பதியினருக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒலிவர் என்ற ஆண் குழந்தை பிறந்தது.

இக்குழந்தையை ஆசையோடு தூக்கிய பெற்றோர்கள், அதன் முதுகில் ரத்த வடிவத்தில் ஒரு பெரிய் மச்சம் இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதை பற்றி மரு த்துவர்களிடம் விசாரித்ததில், அது Congenital Melano cytic Naevi



என்று அழைக்கப்படும் ஒரு வித மச்சம் அல்லது பிறவி குறியீடு என்றும் உலக அளவில் 1 சதவித குழந்தை கள்தான் இதுபோன்ற மச்சத்துடன் பிறக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது 2 வயதை அடைந்துள்ள ஒலிவர் குறித்து அவன் பெற்றோர்கள் கூறுகையில், சக குழந்தைகளை போல் ஒலிவரும் ஆரோக்கியமாக இருக்கிறான். அவன் முதுகில் உள்ள மச்சம் இறக்கைகள் போல் உள்ளதால் ஒரு குட்டி தேவதையாக காட்சியளிக்கிறான்.


இந்த அரிய மச்சமானது கண் இமைகளில் கூட தோன்றி பெரும் சிரமத்தை ஏற்படுத்தி விடும்.

ஆனால், ஒலிவருக்கு முதுகில் அமைந்துள்ளதால், அவன் மிக அதிர்ஷ்டசாலி என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர். எனினும் ஒலிவர் இளம் பருவத்தை அடையும்போது, அவனது உருவத்தை குறித்து சங்கடப்படவானோ என தாங்கள் கவலைப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

---

# சமைப்போம் சுவைப்போம்

## தே.பொருட்கள்:- தக்காளி இனிப்பு பச்சடி



நன்கு பழுத்த தக்காளி- 1/4 கிலோ,

விதை நீக்கிய பேரீச்சை- 5,

பொடியாக நறுக்கிய

பைனாப்பிள் துண்டுகள்-

4 டேபிள் ஸ்பூன்,

சர்க்கரை- 75 கிராம்,

ஏலக்காய்த்தூள் ஒரு சிட்டிகை,

விதையில்லா திராட்சைப் பழம்- 10, ஆரஞ்சு நிற ஃபுட் கலர் ஒரு சிட்டிகை.

**செய்முறை:-**

அடிகனமான பாத்திரத்தில் பேரீச்சையை சிறிய துண்டுகளாக நறுக்கிப் போட்டு, சர்க்கரை சேர்த்து, அரை டம்ளர் நீர் விட்டுக் கலந்து கொதிக்க விடவும். ஒரு கொதி வந்ததும் பைனாப்பிள் துண்டுகள், நறுக்கிய தக்காளி சேர்த்து... ஏலக்காய்த்தூள், ஃபுட் கலர் சேர்த்து மீண்டும் இரண்டு கொதி வந்ததும் இறக்கி, திராட்சைப் பழத்தைச் சேர்க்கவும். எல்லாவற்றையும் நன்றாகக் கலந்துவிடவும். இந்தப் பச்சடி... பண்டிகை நாட்களிலும், பார்ட்டிகளிலும் செய்து அசத்த ஏற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்த, கோத்தபாயவிடம் கேள்வியெழுப்ப சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு காத்திருப்பு





முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவரிடமும் கேள்விகளை கேட்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்காக காத்திருப்பதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, ஒரு சதி முயற்சியை மேற்கொண்டனர் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்துவதற்கான ஆலோசனையே பெற்றுக்கொள்ளப்பட விருக்கின்றன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளதாவது,

இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணை கோப்புகள் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த கோப்புகள் மீதான அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணை க்களத்தின் ஆலோசனை பெற்றுக் கொள் ளப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் இராணு வத்தளபதி லெப்டி னன் ஜெனரல் தயா ரத்னாயக்க, கடற்படைத்தளபதி வைஸ் அட் மிரல் ஜயந்த பெரேரா மற்றும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோ ரிடம் பொலிஸார் வாக்கு மூலங்களை ஏற்கனவே பதிவு செய்துள்ளனர்.

இந்த சதிப்புரட்சி முயற்சியில் ஈடுபட்டதாக கூறப்படும் முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸிடமும் பொலிஸார் வாக்கு மூலத்தை பெற்றுள்ளனர். ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்று விட்டால் தேர்தல் நடைபெற்ற ஜனவரி 8 ஆம் திகதி மறுநாள் புரட்சியை ஏற்படுத்தி அவ் வாட்சியை கவிழ்ப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி. பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்டோர் சதிமுயற்சிகளை மேற்கொண்டனர் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர. பொலிஸில் கடந்த மாதம் முறைப்பாடொன்றை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (இ-5)

# பேசும் படம் - 26




நோ பாங்கிங்கில் தான் நாங்க பாக் பண்ணுவம்...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.


மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

## போரில் மனிதப் படுகொலைகள் இடம்பெறவில்லை

# இனவாதத்தை தூண்டி நன்மை பெற விக்னேஸ்வரன் முயற்சிப்பது பிழை!

## சரத் பொன்சேகா கூறுகிறார்





(கொழும்பு)

**வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி இனவாதத்தை தூண்டி அரசியல் இலாபங்களைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இனவாதத்தை தூண்டி அதன் ஊடாக நன்மை பெற்றுக் கொள்ள முயற்சிப்பது பிழையானது என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

மக்களுக்கு பிழையான தகவல்களை வழங்கி இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தால் அது விக்னேஸ்வரன் செய்யும் பிழை. நான் அதனை அவருக்கு ஞாபகப்படு த்துகின்றேன்.

தரைவழி போரை நானே வடிவமைத்து திட்டமிட்டேன். படையணிகளுக்கு நானே உத்தரவு பிறப்பித்தேன். கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு நானே ஆணை வழங்கினேன். இந்த போராட்டத்தை நன்றாக கண்காணித்தேன்.

எனவே. மனித படுகொலைகள் இடம்பெறவில்லை என்பது எனக்குத் தெரியும்.

சிவில் மக்களை பாதுகாக்க நாம் முன்னின்று செயற்பட்டோம்.

275 ஆயிரம் மக்களை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்தோம்.

சிவில் போர்களின் போது பொது மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது என்ற போதிலும் எல்லா காரணிகளையும் கருத்திற் கொண்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் போர் செய்தோம்.

விக்னேஸ்வரன் மீண்டும் இனவாதத்தை தூண்ட முயற்சித்தால் அதனையிட்டு நான் வருந்துகின்றேன். வடக்கு மக்களின் நலனில் விக்னேஸ்வரன் கரிசனை கொண்டிருந்தால், தெற்கு மக்களின் மனதில் சந்தேகம் எழக்கூடிய வகையில் செயற்படக் கூடாது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)







மக்கள் கலை இலக்கியப் பெரு மன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையின் நினைவஞ்சலி நிகழ்வு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பேராசிரியர் சிவச்சந்திரன் தலைமையுரை நிகழ்த்துவதையும் ஆசிரியர் ஈ.ஆர். திருச்செல்வம் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் முடிவு தற்கொலையா?

என் அன்புக்கினிய காதலர்களுக்கு வணக்கம்! உங்களுக்கு கடிதமெழுத வேண்டுமென்று நீண்ட நாள் விருப்பம். இருப்பினும். அதற்கான காலம் இன்றே கனிந்துள்ளது.

காதலர் தினமான பெப்ரவரி 14 அன்று எழுதினால்தான் நீங்கள் படிப்பீர்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. ஏனென்றால் தங்களின் நினைப்புப்படி காதல் என்பதற்கு இன்றுதான் அர்த்தம் விளங்கிக்கொள்வீர்கள் என்பது என் சிற்றறிவில் தென்படுகிறது.

இன்றையதினம்தான் நீங்கள் வீதிகளில், வீட்டுமதில்களில் யாரும் இல்லாத நேரம் பார்த்து கிடைத்த பெயின்ரைக் கொணடு இதயம் கீறி அதற்கு அம்புவிட்டு அருகில் உங்கள், உங்களுக்குப் பிடித்தவரின் பெயரை எழுதிவிட்டு ஓடிவிடுவீர்கள். அதன் பின் அந்தப் பெயர்களையும் அந்தச் செயலையும் எத்தனை பேர் இழிவாய்ப்பார்க்கிறார்கள் என உங்களுக்குப் புரிவதில்லை என்பதும் எனக்கு நன்கு தெரியும். ஏனெனில் நானும் உங்கள் வயதில் இருந்து உங்களைப் போல் உங்கள் வழிவந்த வன்தான்.

காதல் என்ற ஒன்றுக்காய் எதுவும் செய்யத்துணிந்த உலகில் விலை மதிப்பில்லாத உயிர்களை இழப்பதற்கு எப்படி முனைகின்றோம் என எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன் முடியவில்லை.

என் அன்புச் சகோதர, சகோதரிகளே! நான் இப்போது சொல்லப் போகும் விடயம் உங்களுக்கு வியப்பாய் இருக்கலாம். சில வேளை நம்பிக்கையின்றிக் கூட இதைப்படிப்பீர்கள். ஆனால் நான் சொல்வதெல்லாம் உண்மை.

இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் உங்களைப் போல் நானும் ஓர் இளைஞன். அதே மிடுக்கு, துடிப்பு, பட்டாம்பூச்சி சிறகடிக்கும் அந்த வயதில் காதல் வயப்பட்டேன். காதல் என்பதன் மொழிபெயர்ப்பு கவிதை என்பதை அதன் பின்பு தான் புரிந்துகொண்டேன்.

உயிர், மொழி, உலகம், அசையும், அசையாப்பொருட்கள் அத்தனையும் காதலால்தான் என உணர்வுக்குள் ஊறிப்போய்க்கிடந்தன.

காதலிதான் இந்த உலகின் இயக்கமாகிறாள் எனில் என் இதயம் அவள்தான் என நான் நினைப்ப தில் சற்றும் தவறில்லையே என எனக்கு நானே என் மனத் தராசை சரி செய்து கொண்டிருந்தேன்.

உண்ண உணவிருந்தும் பசி இருக்காது. இப்படி காதலிக்கும் அத்தனை பேருக்கும் இருக்க வேண்டிய அத்தனை அறிகுறியும் எனக்கும் இருந்தது.

காதலித்து, கவிதைகளைக் காதலித்து கவிதையாய் அவளை நினைத்து; கவிதைகளில் அவளைத் தேவதையாய் என் இதய அரண்மனையில் அமரவைத்தேன்.

எதிர்ப்பு! தாங்கள் காதலித்து திருமணம் செய்தாலும் தன் மகன் அல்லது மகள் காதலிப்பதறிந்தால் அ(டி)டைத்து வைப்பது தானே பெற் றோரின் வழக்கம்.

## காதலர்களுக்கு மட்டும்

அடைத்தார்கள் என்னையல்ல, அவளை!எண்ணம்,செயல், சிந்தனை அத்தனையிலும் நிறைந்தவளை பிரிந்து எப்படி? இதயத்தை யாரோ பிடுங்கி எடுப்பதாய் உணர்ந்தேன்.



**நீயின்றிய வாழ்வை**
**என்னால் நினைக்க**
**முடியவில்லை**
**ஆதலால்...**
**என் வாழ்வை**
**முடிக்கிறேன்...**

இதுதான் நான் இறுதியாய் எழுதிய கவிதை. அவளின்றிய என் எண்ணம் தற்கொலையைத் துண்டியது. முடிவெடுத்தேன்என்னை அழித்துவிட.

நடந்தேன் கடலை நோக்கி. ஓ... கடல் தாயே காதலருக்கெல்லாம் நீதான்மரண தண்டனையை நிறை வேற்றுகிறாயோ? இதோ எனக்கும் தண்டனையைக் கொடுத்து விடு என்று கூறியபடி என் கால்கள் கரையைத் தொட்டன...

என்ன அதிசயம்! என் மனம் எதையோ பார்க்கவேண்டும்போல ஈர்க்கப்பட்டேன்.

அங்கே ஓர் குப்பைக்கூடையல் இருந்த கடதாசிகளை ஒருவன் சேகரித்துக் கட்டிக்கொண்டிருந்தான். என் எண்ணங்கள் எதையோ சிநதிக்கத் தொடங்கியன. பாரதத்தில் கண்ணன் சொன்ன கீதையை அந்தக் கடதாசி பொறுக்குபவன் தன் செயலினூடே எனக்குச் சொலலி விட்டான்.

ஆம்... எதற்குமே பிரயோசனம் இல்லை என்று குப்பைக்கூடையில் எறியப்படும் அந்தக் கடதாசி இன்னொருவன் வாழ்க்கைக்கு எவ்வளவோ உதவுகிறதே. எதற்குமே பயன்படாது என நான் நினைக்கும் எனது வாழ்க்கை யாரோ ஒருவருக் கேனும் பயனபடும் என நம்பிக்கையூட் டியது.

எதற்கு இந்தத் தற்கொலை, எதற்கு இந்த முட்டாள்த்தனம் எனச் சிந்திக்க ஆரம்பித்தேன்.

நீரில் இருந்து என் கால்கள் பின் வாங்கின. மீண்டேன்.. . அதன் பின் வாழ்ந்தேன்...

இப்போது என் வாழ்க்கையை அருமையாக, இனிமையாக அனுபவிக்கிறேன்.

அந்த முடிவை மாற்றியதன் பின் எனக்கு என்னைப் புரிந்து கொள்ளக்கூடிய எனக்காய் எதையும் விட்டுத்தரக்கூடிய அன்பான மனைவி கிடைத்தாள். நான் படித்த படிப்பிற்கேற்ப நல்ல வேலை கிடைத்தது. அன்பான இரண்டு மழலைச் செல்வங்கள் கிடைத்தன. இன்று நான் தனித்தவன் அல்ல.என் குடும்பம் ஒரு அழகிய தோப்பு.

கொட்டப்பட்ட குப்பையிலும் மற்றவருக்குப் பயன்படும் ஏதோ ஒன்று உண்டென்பதைப் புரியவைத்த அந்த ஒருவனை இப்போதும் அந்தக் கடற்கரையில் தேடுகிறேன். அவனைக் காணுவதே இல்லை...

வாழுங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதிதான் காதல். காதல்தான் மொத்த வாழ்க்கையல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் காதலின் முடிவு தற்கொலையல்ல.

*கற்பனையுடன் சில யதார்த்தங்களை இணைத்து அன்புடன்*

**-மாவை. நா.கஜேந்திரன்-**

# பொதுத் தேர்தலில் சு.கட்சிக்கு ஒரு ஆசனம் கூட கிடைக்காது

(கொழும்பு)

**ஆளும் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்த லில் புதிய ஜனநாயக முன்னணியின் கீழ் போட்டியிட்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உதவியற்ற நிலைமைக்கு தள்ளப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

ஆளும் கட்சி புதிய ஜனநாயக முன்னணியின் கீழ் போட்டியிட்டால், சுதந்திரக் கட்சி ஒரு ஆசனத்தை கூட கைப்பற்ற முடியாமல் போகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.அளுத்கமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போதைய ஆளும் கட்சிக்கும் அதன் 100 நாள் வேலைத்திட்டத்திற்கும் ஆதரவு வழுங்கினால் அந்த கட்சி வலுவாகும் என்பதுடன் பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பலத்தை தற்காத்து கொள்ளும்.

புதிய ஜனநாயக முன்னணியில் பெரும்பான்மை பலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கிடைக்கும். ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் உத்வேகத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி தனது பொதுத் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கும் எனவும் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து போட்டியிடும் என அந்த கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி வந்தவர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து புதிய ஜனநாயக முன்னணியை ஏற்படுத்தியது என்ப குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பெண்ணின் கைப்பையை பறித்த இளைஞன் பொலிஸாரால் கைது

பெண் ஒருவரின் கைப்பையைப் பறித்துக் கொண்டு ஓடிய இளைஞனை அப்பகுதியால் சென்ற இளைஞர்கள் துரத்திப் பிடித்து நையப் புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைததுள்ளனர்.நேற்று மதியம்இடம்பெ ற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை தம்பசிட்டி முதலாம் கட்டையிலுள்ள கல்வி வலயத்திற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த பிரஸ்தாபப் பெண்ணைப் பின்தொடர்ந்த இளைஞன் கைப்பையைப் பறித்துக் கொண்டு ஓடியுள்ளான்.

இதனால் கூக்குரலிட்ட பெண்ணின் சத்தத்தைக் கேட்டு அப்பகுதியால் வந்த மூன்று இளைஞர்கள் பிரஸ்தாப இளைஞனைத் துரத்திப் பிடிதது நையப்புடைத்து பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்த னர்.

மேற்படி இளைஞன் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவா என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்ற சம்பவங்களில் இந்த இளைஞன் ஏற்கனவே ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதியும் இந்த மாதம் முதலாம் திகதியும் வேறு பெண்கள் இருவரிடம் இவ்வாறு கைப்பையைப் பறித்துக் கொண்டு ஓடியதாக விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது.

இதில் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் கடமையாற்றும் பெணணொருவர் 17 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 37 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி என்பவற்றை பறிகொடுத்துள்ளதுடன் பிரஸ்தாப பெண் இளைஞனை அடையாளம் காட்டியும் உள்ளார்.

இதேவேளை மேலும் பல திருட்டுச சம்பவங்களுடன் இந்த இளைஞனுக்கு தொடர்பிருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த இளைஞனிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-60)

# மகிந்தவின் ஊழல் நிறைந்த அரசாங்கத்தினால் மைத்திரிக்கு வெற்றி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றது எவ்வித அதிசயத்தினாலும் இடம்பெற்ற ஒன்றல்ல என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊழலுக்கு எதிரான தேசிய இயக்க மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் எங்களுக்கு தெரியும் நிறைய பேர் மகிந்த ராஜபக்சவிற்கு கிடைத்த 58 இலட்ச வாக்குகள் தொடர்பாகவே பேசுகிறார்கள்.

பாரிய பணம் செலவு செய்து நடத்தப்பட்ட தேர்தல் வியாபாரத்தின் மூலமே அவ்வளவு வாக்குகளை பெற்றுக்கொள்ள முடிந்தது.

சகல ஊடக நீதிகளையும் உடைத்து பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்றது. அப்படியெல்லாம் செய்தும் எப்படி தோல்வியுற்றார் என்பதே இன்னமும் சிலருக்கு நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

மைத்திரிபால தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் வெற்றி பெற்றார், முஸ்லிம் மக்களின் வாக்குகள் மூலம் வெற்றி பெற்றார், ஐ.தே.க மூலம் வெற்றி பெற்றார், ஜே.வி.பியினரால் வெற்றி பெற்றார்கள் என்று சிலர் பேசுகிறார்கள் அவர்கள் அனைவரது ஆதரவும் கிடைத்தது அது உண்மை.

ஆனாலும் மகிந்த 57 இலட்ச வாக்குகள் தேர்தல் வியாபாரத்தின் மூலம் பெற்றுக்கொண்டும் தோல்வியடைந்ததன் காரணம் இந்த ஊழல் மோசடி தொடர்பாக மக்களினுள் ஏற்பட்ட சமூக கோட்பாட்டினாலேயே, விசேடமாக வல்லுனர்களின் சமூக கோட்பாட்டினாலேயே என அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள சகோதரர்களின் மனச்சாட்சிக்கு ஒரு விண்ணப்பம்

# வடக்கு மாகாண சபையின் தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

## த ஹிந்துவின் ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கைத் தமிழர் பிரச்சினையைச் சர்வதேச விவாதமாக்கும் நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறார் அந்நாட்டின் வடக்கு மாகாண முதல்வரான சி.வி.விக்னேஸ்வரன். இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகள் இனப் படுகொலைக்குக் காரணமாக இருந்ததுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம் விசாரணை நடத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் அவர் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என த ஹிந்து தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கையின் அனைத்துச் சமூகங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று அடுத்தடுத்து வலியுறுத்திவரும் இலங்கை அரசு, அதற்கான நடவடிக்கைகளை உளப் பூர்வமாக இதுவரை எடுக்கவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். 1956இல் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று சட்டம் இயற்றப்பட்டு, தமிழர்களுக்கு எதிரான தாக்குதல் தீவிரமாகத் தொடங்கப்பட்டது. இறுதியாக, முள்ளிவாய்க்காலில் உயிருக்குப் பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகுந்த தமிழர்களில் 40ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் பார்வையாளர்களே மதிப்பிட்டுள்ளனர்.

இப்போதும் இலங்கையின் வடக்குப் பகுதியிலிருந்து இராணுவம் விலக்கப்படவில்லை. தமிழர்கள் முழு அளவில் அவர்களுடைய முந்தைய வசிப்பிடங்களில் குடியமர்த்தப்படவில்லை. தமிழர்களின் பறிக்கப்பட்ட நிலங்களும் இதர சொத்துகளும் அவர்களிடத்தில் முழுமையாகத் திரும்ப ஒப்படைக்கப்படவில்லை.

அயல்வாழ் தமிழர்கள் தாயகம் திரும்பினால் அவர்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதற்கான நிச்சயங்கள் ஏதும் இல்லை. போர் படிப்பினை மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கான குழுவை நியமித்த பிறகும்கூட, நிலைமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது அனைவரும் அறிந்ததுதான். இப்படி 1956 முதலாக தமிழர்களை இன அடிப்படையில் ஒடுக்க இலங்கை அரசு எடுத்துவரும் குடிமைச்சமூக - இராணுவ நடவடிக்கை களையும் சிங்கள, இராணுவமயமாக்கல் செயல் திட்டங்களையுமே முன்வைத்துப் பேசுகிறது இந்த 11 பக்க அறிக்கை. அதன் அடிப்படையில் நியாயம் கேட்கிறது.

இலங்கையில் இப்போதுதான் புதிய அரசு பொறுப்பேற்றிருக்கும் சூழலில், விக்னேஸ்வரனின் இந்த அறிக்கை, பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இதுகுறித்து கருத்து தெரிவிக்கவில்லை. ஆனால், இலங்கை அரசு இந்த விவகாரத்தை அணுகும் திசை கிட்டத்தட்டத் தெளிவாகிவிட்டது. சுகாதார அமைச்சரும் இலங்கை அமைச்சரவையின் ஊடகத் தொடர்பாளருமான ராஜித சேனாரத்ன "இந்தத் தீர்மானம், வடக்கு மாகாண சபை கடுமையான நிலையை எடுத்திருப்பதைக் காட்டுகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். மனித உரிமை மீறல்கள்குறித்து, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட - உள்நாட்டு அமைப்பின் விசாரணைக்கு உத்தரவிட நட வடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித் திருப்பதைச் சுட்டிக் காட்டியிருக்கும் அவர், " போரின்போது நடந்த மனிதவுரிமை மீறல் கள் தொடர்பான மாகாண சபையின் கவலை நியாயமானது.

ஆனால், அதை இனப் படுகொலை என்று அழைத்துவிட முடியாது" என்று கூறியிருக்கிறார். இதற்கிடையே, "இது தேசவிரோதத் தீர்மானம். வடக்கு மாகாண சபையைக் கலைத்து வட்டு, அதன் உறுப்பினர்களைக் கைது செய்ய வேண்டும்" என்று சில சிங்கள அடிப்படைவாதிகள் பேச ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்திய அரசு இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தரும் சமிக்ஞைகள் தென்படவில்லை. சர்வதேசச் சமூகமும் அமைதி காக்கிறது. இலங்கை நிலவரத்தையும் விக்னேஸ வரனையும் நெருக்கமாகக் கவனித்து வருபவர்களுக்கு, ஒரு விடயம் புரியும்: எப்படியும் இது அவசரத்தில் அள்ளித் தெளிக்கப்பட்ட கோலம் அல்ல. தம் சொந்த மக்கள் பெரும் தேவையோடு ஒவ்வொரு நாளும் அணுகும் சூழலில், ஒருவர் எந்த அதிகாரமும் இல்லாத பதவியில் உட்கார்ந்துகொண்டு வெறுங்கையை விரித்துக்காட்ட எத்தனை நாட்கள் முடியும்? வடக்கு மாகாண சபை நிர்வாகிகளின் நிலை இதுதான். ஆட்சி மாறியது என்னவோ உண்மை அரசின் அணுகுமுறை மாறவில்லையே. குறைந்தது இராணுவமயமாக்கலிலிருந்து அவர்களை விடுவிக்கும் நடவடிக்கையைக்கூடப் புதிய அரசு எடுக்கவில்லையே?

முதல்வர் விக்னேஸ்வரனுக்கு அரசியல் - சட்ட நுணுக்கங்களை யாரும் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. இலங்கை உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவி வகித்தவர் அவர். 2014 ஜனவரியில், இப்படியொரு தீர்மானத்தை வரைவு வாசகமாகத் தயாரிக்கப்பட்டபோது, "அறிக்கையில் 'இனப் படுகொலை' என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம்" என்று கூறிய விக்னேஸ்வரன்தான், இன்றைக்கு அதே வார்த்தைகளைச் சேர்த்துத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார் என்றால், எந்த அளவுக்கு அவர் மனம் நொந்திருப்பார் விரக்திக்கும் ஏமாற்றத்துக்கும் ஆளாகியிருப்பார் என்பதை நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

சொல்லொணா வலியில் ஒருவர் துடிக்கும்போது, நாம் கவனம் கொடுக்க வேண்டியது அவர் என்ன வார்த்தையைப் பயன்படுத்துகிறார், எப்படி அழைக்கிறார் என்பதற்கு அல்ல் அவருடைய வலிக்குக் காரணம் என்ன? நாம் அவருடைய துயரத்தை எப்படித் தீர்க்க முடியும் எனும் கவனமே நம்முடைய அக்கறையை உணர்த்த முடியும். வலியைப் பற்றி புத்தரைப் படிப்பவர்களுக்கு வெளியிலிருந்தும் போதனைகள் வேண்டுமா, என்ன? "இனப் படுகொலையைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்ற வேண்டுகோள், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலுக்கு மட்டுமல்ல் இலங்கையில் உள்ள சிங்கள சகோதர, சகோதரிகளுக்கும் சேர்த்து விடப்பட்ட வேண்டுகோள் தான்" என்று கூறியிருக்கிறார் விக்னேஸ்வரன். இந்த அறிக்கையை பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் அப்படி அணுகினால், இந்தப் பிரச்சினை தீருவதோடு அல்லாமல், இலங்கையின் எதிர்காலத்துக்கும் நன்மை பயக்கும்.

இலங்கைப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுகள் அந்தத் தீவுக்குள்ளேயே இருக்கின்றன. ஆனால், வீட்டுக்குள்ளிருக்கும் சக மனிதரின் வலியும் துயரங்களும் அலறல்களும் ஒரு மனிதருக்குக் கேட்காவிட்டால், உயிர் உதவிக்கு வெளியிலிருந்து ஆள் அழைப்பதை எப்படித் தவறாகக் கொள்ள முடியும்? இலங்கை அரசும் பெரும்பான்மை சிங்களச் சமூகமும் தம் சகோதரர்கள் சுமக்கும் பொறுக்க முடியா வலியை உணர வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)



சுற்றுலா விசாவில் அவுஸ்திரேலியா சென்ற சமயம் மெல்பேர்ன் றொக்பாங்கில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு குன்றத்துக்குமரன் ஆலயத்தில் கந்தசஷ்டி காலப்பகுதியில் கந்தபுராணம் படித்து செந்தமிழில் பொருள் கூறியமைக்காக தா.உதயரட்ணம் அவர்களுக்கு ஆலய அறங்காவற் சபையாலும் அவுஸ்திரேலியா வாழ் தமிழ் பேசும் மக்களாலும் அண்மையில் தங்கப்பதக்கம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.


### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில், அமைந்துள்ள 128,130 எனும் இலக்கமுடைய கடை விற்பனைக்கு உண்டு. (9507)

தொடர்புகளுக்கு:- 021 222 8875

### காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு செல்வபுரத்தில் உள்ள 20 பேஜஸ் காணி வீடு, மலசலகூடம், கிணறு என்பவையுடன் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசி தீர்க்கப்படும். அரச குவாட்டசுக்கு அருகாமை. (9509)

தொடர்புகளுக்கு:-

077 1516 271, 077 1940 481

### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 56 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ கணக்காளர்<br>தொ.இ: B/264 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 108 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/512 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 29 1/2 செவ் 2இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/273 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 71<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/513 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 32 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: ACCA, BSC, MSC, MBA/ கணக்காளர் (லண்டன்)<br>தொ்.இ: B/274 | பிறப்பு: 1961 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 29 சூரிசெவ் 11இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/516 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MSC/ பொறியியலாளர் (லண்டன் PR)<br>தொ.இ: B/280 | பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 26<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/517 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை 119 க்கு அழைத்ததால் தனையனுக்கு 18வரை மறியல்

119 என்ற அவசர தொலைபேசி இலக்கத் துக்கு அழைப்பை ஏற்படுத்தி தந்தை கொடுத்த முறைப் பாட்டை அடுத்து அவரது மகன் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் கர வெட்டி கிழக்கு கிளான் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இந்தச் சம் பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

திருமணம் முடித்து மட்டக்களப்பில் வசி க்கும் தனது மகன் வீட்டிற்கு வந்து நகை மற்றும் 50 ஆயிரம் ரூபா பணத்தை எடுத் துச் சென்றதாக தந்தை செய்த முறைப் பாட்டை அடுத்தே மகன் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த முதலாம் திகதி கரவெட்டி கிழக்கிலுள்ள பிரஸ்தாப தந்தையின் வீட்டிற்கு சென்ற அவரது மகன் 50 ஆயிரம் ரூபா பணம் உட்பட நகைகளை எடுத் துச் சென்றதாகவும் கடந்த 11 ஆம் திகதி தந்தை கொழும்புக்குச் சென்ற வேளை மீண்டும் மகன் தந்தையின் வீட்டிற்குச் சென்றுள்ளார். இந்நி லையில் தந்தை கொழும்பிலிருந்து வீட்டிற்கு வந்துள்ளார். வீட்டிற்கு வந்த மகன் வீட்டுக் கதவைதிறந்து கொண்டிருந்த நேரம் அங்கு வந்த தந்தை 119 என்ற அவசர தொலைபேசி இலக் கத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்துள்ளார்.

உடனடியாக அங்கு சென்ற நெல்லியடிப் பொலிஸார் மகனைக் கைது செய்து பருத்தி த்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இந் நிலையில் மகனை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)



## பரிசில் நாள் நிகழ்வு

கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தின் பரிசில் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப 2 மணி க்கு தச்சன்தோப்பு பிரதேசசபை வளாகத்திலுள்ள கந்தையா கன கம்மா நினைவாலயத்தில் தங்க ராசா பிரசாந்த் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விரு ந்தினராக நல்லூர் பிரதேச்சபை ஓய்வுநிலை உதவியாளர் சதா சிவம் பிரேம்குமார் கலந்து கொள் ளவுள்ளார்.

விசேட விருந்தினராக தென் மராட்சி கல்வி வலய தொழில் வழி காட்டல் ஆலோசனை அதிகாரி கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் கல ந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்.வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 14 ஆம் திகதி சனிக்கிழமை கல் லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி. வி.சண்முகரட்ணம் தலை மையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி பகுதியை சேர்ந்த செல்வி. இராதை அருளம்பலம் கலந்து கொள்ள வுள்ளார். (இ)

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி க்கு கல்லூரி முதல்வர் திருமதி எம்.விமலநாதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது. இந் நிகழ்வில் மேலதிக வடக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் செல்வின் இரேனியஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள வுள்ளார். (இ)




## அதிபர் அறிவிப்பு

யாழ்.கொக்குவில் இந்துக் கல் லூரியில் இவ்வாண்டு இரண்டாம் தடவையாக க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் கள் பாடசாலைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் னர் பூரணப்படுத்தி ஒப்படைக்கு மாறு பாடசாலை அதிபர் அறிவி த்துள்ளார். (இ-3)

# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியூடாக வடக்கு இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க யாழில் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**காங்கேசன்துறை துறைமுகத்தினை அபி விருத்தி செய்து இளை ஞர் யுவதிகளிற்கு வேலை வாய்ப்புக்களை வழங் குவதன் மூலம் வடக் கின் பொருளாதாரத் தினை கட்டியெழுப்ப முடியுமென துறைமுக ங்கள் மற்றும் கப்பற் துறை அமைச்சர் அர்ஜுனா ரணதுங்க தெரிவித்தார்.**



நேற்றைய தினம் யாழ்.வந்த அமைச்சர் முற்பகல் 11.30 மணிய ளவில் காங்கேசன் துறைக்குச் சென்று அங்குள்ள துறைமுகத்தினை பார் வையிட்டிருந்தார்.

இதன்போது துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் காங்கே சன் துறை கடற்படை பொறுப்பதிகா ரியிடம் கலந்துரையாடி பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

காங்கேசன் துறை துறைமுகத் தின் அபிவிருத்தி தொடர்பில் ஆரா ய்வதற்காக நான் இன்றைய தினம் (நேற்று) யாழ்ப்பாணம் வந்துள் ளேன்.

இத்துறைமுகத்தினை அபிவி ருத்தி செய்து வடக்கு மாகாண இளை ஞர் யுவதிகளிற்கு வேலைவாய்ப்புக் கள் வழங்குவதன் மூலம் வடக்கு மாகாணத்தில் பொருளாதார மாற் றத்தினையேற்படுத்த முடியும்.

கீரிமலையில் உள்ள காணிகள் அரசினால் ஏற்கனவே விடுவிக் கப்பட்டுள்ளன. அங்குள்ள சில இடங் களில் மக்களினை மீள்குடியேற்றா மல் இராணுவத்தினர் நிலை கொண் டுள்ளனர்.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ர மசிங்க ஆகியோருடன் கலந்தா லோசித்து முடிபுகள் எடுக்கப்படும் என்றார். இதேவேளை காங்கேசன் துறை துறைமுக அபிவிருத்திகள் தொடர்பில் கருத்து தெரிவித்த அமை ச்சர் துறைமுகத்தினை மக்கள் பயன் பாட்டுக்கு அனுமதிப்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லையென் பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## அண்ணமார் ஆலயத்தில் மகாசிவராத்திரி

தெல்லிப்பழை சித்தியம்புளியடி சித்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ அண் ணமார் தேவஸ்தான மகாசிவராத்திரி விழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு அன்றைய தினம் இரவு நான்கு யாமப் பூசையும் சமய கலை நிகழ்வுகளும் அதிகாலையில் அண்ணமார் பெருமான் வெளி வீதி வலம் வரும் காட்சியும் மகேஸ்வர பூஜையும் அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வழங்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள் ளது.

இந் நிகழ்வில் அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்க ளின் சமய கலை நிகழ்வுகளும் மயிலிட்டி வடக்கு ஸ்ரீ கலை அம்பாள் நாடக மன்றத்தினரின் நவீன காத்த்வராயன் நாடகமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பா ணம் பாஷையூ ரைச்சேர்ந்த விக் ரர் நிஷாந்தன் றனி அரச அங் கீகாரம் பெற்ற தமிழ்-ஆங்கில மொழி பெயர்ப் பாளராக யாழ்.மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலை யில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிக இளமாணிப்பட்டத்தைப் பெற்றுள்ளார்.

தற்போது வியாபார முகாமை த்துவ முதுமாணி கற்கை நெறி யைத் தொடர்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இரு குறும்படங்கள் ராஜா திரையரங்கில்

யாழில் உருவாகி விருதுகளை பெற்ற பை மற்றும் FTKPE ஆகிய இரு குறும்படங்கள் யாழ். ராஜா திரையரங்கில் திரையிடப்படவுள் ளன. ராஜா திரையரங்கில் நாளை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கும் 4 மணி க்கும் இரு காட்சிகளாக திரையிடப் படவுள்ளன. முதல் காட்சி நுழைவு சீட்டின் பெறுமதி 200 ரூபாய், இர ண்டாம் காட்சியின் நுழைவு சீட்டின் பெறுமதி 100 ரூபாயாகும். ஈழத்து இயக்குனர் ஆனா சிவராஜ் இயக் கத்தில் வெளியான பை குறும்படம் விருதுகளை வென்ற குறும்படம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சதுரங்க போட்டி இன்று இடம்பெறும்

(மானிப்பாய்)

இலங்கை சதுரங்க சம்மேள னத்தின் ஆரம்ப நிலையினரு க்கான சதுரங்கப் போட்டி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. யா/இந்து ஆரம்ப பாடசாலையில் காலை 9 மணிக்கு ஆர ம்பமாக வுள்ள இந்த போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் வயது வேறு பாடின்றி கலந்து கொள்ள லாம் என தெரிவிக்கப்பட்டுள் ளது. மேலும் போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகர ணங்களுடன் போட்டிக்கான கட்டணமாக 400 ரூபாவுடன் சமுகளிக்குமாறு கேட்டுக் கொள் ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள், காலை 9 மணிக்கு பின்னர் சமுகமளிப்பவர்கள் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படமாட் டார்கள் எனவும் ஏற்பாட்டாள ர்கள் அறிவித்துள்ளனர். (இ-23)

# மீள்குடியேறிய மக்களின் திறனை கட்டியெழுப்பும் விசேட செயற்றிட்டம் சண்டிலிப்பாயில் ஆரம்பிப்பு




(மானிப்பாய்)

மீள்குடியேறிய மக்களின் மீள் திறனை கட்டியெழுப்பல் என்னும் செயற்றிட்டம் சேவாலங்கா அமை ப்பினால் வலி.தென் மேற்கு சண்டி லிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து இடம்பெற்று வருகின்றது.

இதன் முதல் அங்கமாக இர ண்டு நாட்கள் கொண்ட தலை மைத்துவக் கருத்தரங்குகள் இடம் பெற்று வருகின்றன.

இதன்படி இளவாலை மத்தி இளைஞர் கழகத்திற்கான தலை மைத்துவக் கருத்தரங்கு இள வாலை திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் இடம்பெற்றன.

இந் நிகழ்வின் இறுதி நிகழ்வில் இளவாலை மத்தி இளைஞர் கழக த்தின் அழைப்பின் பேரில் பாரா ளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீ தரன் பிரதேச இளைஞர் பாராளு மன்ற உறுப்பினர் க.உஷாந்தன் இளவாலை இளைஞர் கழகத்தின் தலைவர் தே.லக்ஸ்மன் உள்ளிட்ட அங்கத்தவர்கள் கலந்து கொண்ட னர். (இ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கொடை தினத்தன்று மல்லாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த இலங்கை வங்கியின் ஓய்வுநிலை முகாமையாளர் சி.விக்கினராசா 5 இலட்சம் ரூபாவை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி மகளிர் இல்ல திருமண வைபவங்களுக்கென அன்பளிப்பாக கையளிக்கப்பட்ட போது....

# வடக்கு சபையின் பிரேரணை மீளப்பெறப்பட வேண்டுமாம்

## • எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



**(கொழும்பு) யுத்த காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் இனப்படுகொலை குறித்து வடமாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

அத்துடன், இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டு வருவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரமில்லையெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இவ்வாறான விதிமுறைகளுக்குப் புறம்பான செயற்பாட்டினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்டியெழுப்பப்படவுள்ள தேசிய நல்லிணக்கத்தை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையாகவே தாம் கருதுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நிமால் சிறிபாலடி சில்வா மேற கண்டவாறு கருத்து வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஷிரந்தியின் வங்கிக்கணக்கு பற்றிய தகவல்களை வெளியிட்ட அதிகாரிகள் பின் தொடரப்படுகின்றனர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின் பாரியார ஷிரந்தி ராஜபக்ஷவின் சிறிலிய சவிய என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் வங்கி கணக்கு பற்றிய தகவல்களை வெளியிட்ட வங்கி அதிகாரிகள் பின் தொடரப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலிய சவிய என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கியின் கிளையொன்றில் வங்கி கணக்கு ஒன்று நடைமுறையில் இருந்து வருவதுடன் அந்த கணக்கை ஆரம்பிக்க போலியான தேசிய அடையாள அட்டை இலக்கம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்தன.

இந்த நிலையில், அந்த தகவல்களை கசிய விடப்பட்டமை குறித்து வங்கி நிர்வாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாக தெரியவருகிறது.

இப்படியான சட்டவிரோத செயல் சம்பந்தமாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களமோ வேறு பொறுப்பு வாய்ந்த நிறுவனமோ அது பற்றிய விசாரணைகளை நடத்தாமல், தகவல் வெளியிட்டாளர்கள் என்று சந்தேகத்தின் பேரில் வங்கி அதிகாரிகளை பின் தொடர்வது பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-5)

## புதிய அரசிற்கு எதிராகவும் வீதியில் இறங்க நேரிடும்

### காணி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டால் இந்த அரசாங்கத்திற்கு எதிராகவும் வீதியில் இறங்கி போராட்டம் நடத்த நேரிடும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண முதலமைச்சர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற நிக ழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்ச்சியாக நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த அநீதி அழுத்தங்கள் காரணமாகவே நான் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிர்ப்பை வெளியிட்டு வெளியே வந்தேன்.

இளைஞர்கள்,அரச ஊழியர்கள் புத்திஜீவிகள் மூன்று வேளை உண்ண உணவில்லாதவர்கள். நாட்டில் கோரிய மாற்றத்திற்கு பங்களிப்பு வழங்கினோம்.

ஆட்சி மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும்நன்றிபாராட்டுகின்றேன். இன்று சிலர் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

எனினும் அந்தக் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இவர்களை ஐந்து சதத்திறகேனும் மதிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மைத்திரிபால சிறிசேனவை இழிவுபடுத்திய போது நாம் நாட்டுக்கு தேவையான மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற போது வடக்கு கிழக்கு உள்ளிட்ட முழு நாட்டையும் ஆயுத பலத்தினால் அடக்குமுறைக்கு உட்படுத்த முயற்சிக்கப்பட்டது.

நாம் அந்த அனைத்து திட்டங்களையும் முறியடித்தோம். ஆயுத பலத்தை மக்கள் பலத்தினால் தோற்கடிக்கச் செய்தோம் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## 8 வயது மாணவி மரணம்

பலாங்கொடை, ஹுங்கம மகா வித்தியாலத்தில் தரம் மூன்றில் கல்வி பியிலும் 8 வயது மாணவி, நேற்று வெள்ளிக்கிழமை காலை மரணமடைந்துள்ளார். பாடசாலையில் நடைபெற்ற காலைக் கூடடத்திலேயே இந்த மாணவி மயங்கி விழுந்துள்ளார். அவரை, பாடசாலை நிர்வாகம் உடனடியாக வைத்தியாலைக்கு எடுத்து சென்ற போதிலும் வழியிலேயே அவர் உயிரிழந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் பாடசாலை நிர்வாகமும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. இதேவேளை, அம் பலாங்கொடை பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் இல்லங்களுக்கு இடையில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் பங்கேற்ற 15 வயது மாணவன் ஒருவன் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

### பாலசிங்கம் சிற்றம்பலம்



யாழ்.புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சிற்றம்பலம் கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணி தொடக்கம் பி.ப 12 மணிவரை Grace Convenant Church, 1800 Ellesmere Road, Scarborough, ON M1H 2VS, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி செல்லப்பா பாக்கியம்



யாழ்.மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Berlin ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பாக்கியம் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் Krematorium Berlin Ruhleben, Am Hain 1, 13597 Berlin, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### செல்லன் சின்னத்தம்பி



யாழ்.கைதடி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் சின்னத்தம்பி கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஊத்தல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி யோகராஜா அமுதாம்பிகை



யாழ். அல்வாய் மோட்டுஞ் சீமாவைப் பிறப்பிடமாக வும், கனடா Torontoவை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா அமுதாம்பிகை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணியளவில் Bowmanv lle Crematorium, 1200 Haines Street, Bow manvlle, ON L1C 3K5, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### தம்பையா இரத்தினசபாபதி



நல்லூரை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இரத்தின சபாபதிகடந்த9 ஆம்திகதிஅன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணியளவில் Elgin Mills Cemetery, Crematorium and Visitation Centre, 1591 Elgin Mills road East, Richmond Hill, On L4S 1M9, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்

### பிலிப்பையா அந்தோனிப்பிள்ளை



யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா அந்தோனிப்பிள்ளை கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் நடைபெற்று பின்னர் திருவுடல் மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### பொன்னையா சந்திரேஸ்வரன்



யாழ்.கொக்குவில் கிழக்கு உடையார் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Saint-Maurice ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சந்திரேஸ்வரன் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் காலை 9.15 மணியளவில் Crematorium du Pere Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராமு சுயநலவாதியா?

வீட்டின் வரவேற்பறையை அவன் மருத்துவ சாலையாகப் பயன்படுத்தி வந்தான். வாயிலிலே நின்று, சன்னியாசி உள்ளே நடப்பதை கூர்ந்து கவனித்தார். ராமு ஓர் ஏழை நோயாளியை சோதித்துக் கொண்டுஇருக்கையில், தடபுடலாக வந்துஇறங்கிய ஒரு பணக்கார ஆசாமி, "வைத்தியரே! முதலில் என்னை கவனியுங்கள். எத்தனை பணம் வேண்டுமானாலும் தருகிறேன்!" என்றார்.

அவரை ஒருமுறை கூர்ந்து பார்த்த ராமு, "ஐயா! இப்போது என்னை இந்த நோயாளியை சோதிக்க அனுமதியுங்கள். உங்களுடைய முறை வரும்போது உங்களைக் கூப்பிடுகிறேன்" என்றான். தற்செயலாக வாயிலில் காத்துக் கொண்டிருந்த சன்னியாசியை நோக்கிய ராமு, "சுவாமி! நீங்கள் சிகிச்சைக்காக வரவில்லை என்று நினைக்கிறேன். தயவு செய்து என்னுடன் அமர்ந்து சாப்பிட்டு விட்டுச் செல்லுங்கள்" என்றான்.

அதற்கு சன்னியாசி, "அவசரம் இல்லையப்பா! நீ எல்லா நோயாளிகளையும் கவனித்து விட்டு வரும் வரை நான் காத்திருக்கிறேன்!" என்றார். அதன்படியே, ராமு எல்லா நோயாளிகளையும் கவனிக்கும் வரை பொறுமையாகக் காத்திருந்த சன்னியாசி, பிறகு அவனுடன் போஜனம் செய்ய அமர்ந்தார். உண்டு முடித்த பிறகு அவர் ராமுவை நோக்கி, "மகனே! நீ சிகிச்சை செய்யும் முறையை ஆரம்பத்தி லிருந்தே கூர்ந்து கவனித்தேன். சுயநல நோக்கு சிறிதுமின்றி, நீ தொழில் புரிந்த விதம் என்னை மிகவும் கவர்ந்து விட்டது.



மந்திரங்கள் அடங்கிய ஓலைச் சுவடிகளைப் பெறத் தகுதியானவன் தான் நீ! உடனே, நீ வேதாரண்யம் சென்று அவற்றைப் பெற்றுக் கொள!" என்றார்.

அவர் தன் குருநாதர் வைத்தியானந்தா அனுப்பி வைத்தவர் என்று ராமு புரிந்து கொண்டான். வேதாரண்யம் செல்வதைப் பற்றித் தன் மனைவியுடன் கலந்தாலோசித்து விட்டு வந்தவன் சன்னியாசியிடம், "சுவாமி! என்னைத் தேடி தினமும் இங்கு நோயாளிகள் வந்த வண்ணம் இருக்கின்றனர். நான் இல்லாமற்போனால் அவர்கள் கஷ்டப்படுவார்கள். என்றைய தினம் நோயாளிகள் யாரும் வரவில்லையோ, அன்று வேதாரண்யம் செல்வேன்!" என்றான் ராமு.

இதற்கிடையில் மன்னரின் தாயார் நோய்வாய்ப்பட, அரண்மனையிலிருந்து ஆட்கள் அவனை அழைத்துச் செல்ல வந்தனர். அவர்களிடம், "நான் விஜயபுரியை விட்டுச் சென்று அரண்மனையில் தங்கி மன்னரின் தாய்க்கு வைத்தியம் செய்தால், என்னை நம்பியுள்ள நோயாளிகள் திண்டாடிப் போவார்கள். அதனால், மன்னரின் தாயை இங்கு அனுப்பி வையுங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டான்.

அதையறிந்த சன்னியாசி மீண்டும் ராமுவிடம் வந்து, "மன்னரின் தாய் என்று அறிந்தும், அவருடைய அதிகாரத்திற்குத் தலை வணங்காமல நீ உன்னுடைய நோயாளிகளின் நிலைமையே மிகவும் முக்கியமாகக் கருதினாய். நீ தலைசிறந்த மருத்துவனாக மாறத் தகுதியானவன். ஆகவே, நீ உடனே சென்று உன் குருவை சந்தித்து ஓலைச்சுவடிகளைப் பெறுவாய்!" என்றார். அப்போது ராமு மறுத்து விட்டான்.

ராமுவின் மனைவி மனோரமா நாளாவட்டத்தில் கவலையுற்றாள். நோயாளிகள் ராமுவை நாடி வராத நாட்களே இல்லை. இப்படியே சென்றால், ராமு எப்போது தான் தன் குருவிடம் சென்று ஓலைச்சுவடிகளைப் பெறுவார்? மந்திர சிகிச்சையும் தன் கணவன் கற்றுக் கொண்டால், இன்னும் பல நோயாளிகள் பலம் அடைவார்கள் எனத் தோன்றியது.

ராமுவை வேதாரண்யம் செல்லுமாறு பலமுறை கூறத் தொடங்கினாள். ஆனால் ராமு மறுத்து விட்டான்.

மனோரமா சன்னியாசியை அழைத்து ராமுவை எவ்வாறு வேதாரண்யத்திற்கு அனுப்புவது என்று ஆலோசிக்க, அவருடைய யோசனைப்படி தான் நோய்வாய்ப் பட்டது போல் பாசாங்கு செய்தாள்.

ராமு தனக்குத் தெரிந்த எல்லா மருந்துகளை அளித்தும், அவள் குணமாகாதது போல் நடித்தாள். சன்னியாசி ராமுவை அழைத்து, "உன் மனைவியின் நோய் மருந்தினால் தீராது மந்திரத்தினால் தான் தீரும்! இப்போதாவது நீ உடனே உன் குருவிடம் சென்று ஓலைச்சுவடிகளைப் பெற்று வா!" என்றார்.

ராமுவும் உடனே வேதாரண்யம் சென்று தன் குருவிடமிருந்து ஓலைச்சுவடிகளை வாங்கி வந்தான்.

அவற்றைக் கற்றுத் தேர்ந்து தன் மனைவியின் நோய்க்கு மந்திரம் ஓத, அவளும் குணமானது போல் நடித்தாள். அன்று முதல் ராமு மருந்தினால் தீராத நோய்களையும் மந்திரத்தினால் தீர்த்து வைத்து, அந்தப் பகுதியில் தலைசிறந்த வைத்தியனாகத் திகழ்ந்தான்.....

(முற்றும்)




- 1779 - ஹவாயில் ஆதிவாசிகளால் கப்டன் ஜேம்ஸ் குக் கொல்லப்பட்டான்.
- 1876 - எலீஷா கிறே மற்றும் அலெக்சாண்டர் கிரகம் பெல் இருவரும் வேறு வேறாக தொலைபேசிக் காண காப்புரிமம் பெற விண்ணப்பித்தனர்.
- 1879 - சிலியின் இராணுவப்படைகள் பொலீவியா வின் அன்டோபகாஸ்டா நகரைக் கைப்பற்றி னர்.
- 1900 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்கா வில் ஒரேஞ்ச் மாநிலத்தை 20,000 பிரித்தானியப் படைகள் ஆக்கிரமித்தன.
- 1918 - சோவியத் ஒன்றியம் கிரெகோரியின் நாட் காட்டியை ஏற்றுக் கொண்டது
- 1919 - போலந்து-சோவியத் போர் ஆரம்பமானது.
- 1924 - ஐ.பி.எம் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூரில் பசிர் பஞ்சாங்க் என்ற இடத்தில் ஜப்பானியர்களின் தாக்குதல் ஆரம்பித்தது.
- 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணினி அறிமுகமானது.
- 1956 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- 1961 - 103 ஆவது தனிமம் லோரென்சியம் கலிபோர் னியா பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1966 - அவுஸ்திரேலியாவில் முன்னர் பாவனையிலிருந்த அவுஸ்திரேலிய பவுண்டிற்குப் பதிலாக அவுஸ்திரேலிய டொலர் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1979 - ஆப்கானிஸ்தானுக்கான ஐக்கிய அமெரிக்கா வின் தூதுவர் அடொல்ஃப் டப்ஸ் காபூலில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் காவற்றுறையினருக்கும் கடத்தல்காரருக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் அகப்பட்டு இறந்தார்.
- 1987 - தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி நிதர்சனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1989 - ஜிபிஎஸ் திட்டத்தின் 24 செய்மதிகளில் முதலாவது விண்ணில் ஏவப்பட்டது.
- 1989 - யூனியன் கார்பைட் நிறுவனம் 1984 போபால் அழிவிற்காக இந்திய அரசிற்கு 470 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்ட ஈடாக வழங்க சம்மதித்தது.

**பிறப்புகள்**

- 1483 - ஸாகிருதீன் பாபர், முகலாயப் பேரரசர் (இ. 1530)
- 1869 - சார்ல்ஸ் வில்சன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர், (இ. 1959)
- 1917 - ஹேர்பேர்ட் ஹோப்ட்மன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க கணிதவியலாளர்


**இறப்புகள்**

- 1779 - ஜேம்ஸ் குக், பிரித்தானிய கப்பற் தளபதி, நாடு காண்பயணி (பி. 1728)
- 1968 - அ. ந. கந்தசாமி, ஈழத்து எழுத்தாளர் (பி. 1924)

**சிறப்பு நாள்**

- காதலர் தினம்

## காதலர் தினம்



புனித வேலன்டைன் நாள் அல்லது பொதுவாக வேலன்டைன் நாள். உலகம் முழுவதிலுமுள்ள மிக நெருங்கிப் பழகும் மக்கள் பலரா லும் பெப்ரவரி 14 அன்று கொண்டா டப்படும் ஒரு கொண்டாட்ட நாளாகும்.

இந்நாளில் காதலர்கள் தங்கள் காதலை தெரிவித்துக் கொள்வது மரபாக இருக்கிறது. வாழ்த்து அட்டைகள், இனிப்புகள், மலர்கள் ஆகியவற்றை இந்நாளில் காதலர்கள் பரிமாறிக் கொள்கிறார்கள். வேல ண்டைன் என்ற பெயருடைய இரு கிறித்துவத் தியாகிகளின் பெயர்களை அடுத்து இந்நாள் வேலன்டைன் நாள் என்றும் காதலர்களே பெரும்பாலும் இந்நாளைக் கொண்டாடுவதால் காதலர் நாள் என்றும் காதலர் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.

காதலர்கள் தவிர பலரும் தங்கள் அன்பை தெரிவித்துக் கொள்ளும் நாளாகவும் இது இருப்பதால் அன்பர்கள் நாள் என்றும் அழைக்கப்படுகிறது.

தோற்றத்தில் இது மேற்கத்திய உலகக் கொண்டாட்டமாக இருந்தாலும், அண்மைக் காலங்களில் உலகெங்கும் இந்நாளை கொண்டாடும் போக்கு இளைஞர்களிடையே கூடி வருகிறது.

"வாலண்டைன்கள்" வடிவத்தில் காதல் குறிப்புகளை ஒருவருக் கொருவர் பரிமாறிக்கொள்ளுவதோடும் இந்த நாள் நெருக்கமாக சம்பந்தப்பட்டிருந்தது. இதய வடிவலான உருவம், புறாக்கள் மற்றும் சிறகுகளுள்ள தேவதையின் உருவம் ஆகியவை நவீன காலத்திய காதலர்தின குறியீடுகளில் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...

.....ரஜினி அன்புடன் நெருங்கி வரும்போது, போய் குளித்து விட்டு வாருங்கள். ஒரே வியர்வை நாற்றம் என்பார்.

இந்நிலையில் அம்பிகா கர்ப்பமாவார். அதைக் கலைக்க முயற்சிப்பார். தாயாரும், ரஜினியும் தடுத்து விடுவார்கள்:

குழந்தைக்கு தாய்ப்பால் கூட கொடுக்க மாட்டார்.

### சலனம்

இந்நிலையில், அம்பிகா மீது அன்பு செலுத்திய பெரியவரின் மகனும், அவர் மனைவியும் மனப் பொருத்தம் இல்லாமல் பிரிந்து விடுகிறார்கள்.

உன் வாழ்க்கையும் வெற்றி பெறவில்லை. என் வாழ்க்கையும் வெற்றி பெறவில்லை. நீ என்னுடன் சென்னைக்கு வந்துவிட்டால், இருவரும் சேர்ந்து வாழலாம் என்று அம்பிகாவிடம் பெரியவரின் மகன் கூறுகிறார். ஒரு நிமிடத்தில் ஏற்படும் சலனத்தால், அவருடன் சென்னைக்கு செல்கிறார், அம்பிகா.

அங்கு சென்றதுமே அவர் மனம் மாறுகிறது. தன் தவறை உணருகிறார். மயக்கம் அடைந்து விழுகிறார். பிறகு, தீக்குளிக்க முயலுகிறார். சிறு காயத்துடன் தப்புகிறார்.

இதற்கிடையே ஓடிப்போன அம்பிகாவை, கிராமத்தை விட்டு பஞ்சாயத்து தள்ளி வைக்கிறது. ரஜினியின் துயரத்தைப் போக்க, ராதாவை அவருக்குத் திருமணம் செய்து வைக்கிறார்கள். அம்பிகாவின் குழந்தையை (மீனா) தன் குழந்தை போல ராதா வளர்க்கிறார்.


இந்த தகவல், அம்பிகாவை அழைத்துச்சென்ற பெரியவர் மகனுக்குத் தெரிகிறது. அதை அம்பிகாவிடம் கூறுகிறார். கிராமத்துக்கு வெளியே எனக்கு நிலம் இருக்கிறது. அதை உனக்கு எழுதித் தருகிறேன். அங்கே வீடு கட்டிக்கொண்டு நீ வசிக்கலாம் என்று கூறி அனுப்பி வைக்கிறார்.

### துறவு வாழ்க்கை

மனதில் சலனம் அடைந்தாலும், உடலில் களங்கப்படாத அம்பிகா, தன் கிராமத்துக்கு வெளியே ஒரு குடிசை போட்டுக் கொண்டு தன்னந்தனியே துறவி போல் வாழ்கிறார்.

இப்படியே 13 வருடம் ஓடுகிறது. தன் மகள் பருவப்பெண்ணாய் நடமாடுவதை தூரத்திலிருந்தே பார்த்து கண்ணீர் விடுகிறார், அம்பிகா.

நாளடைவில், உடல் நலம் குன்றி படுத்த படுக்கையாக இருக்கிறார். தாய்ப்பாசத்தால், அவரை பார்க்க வருகிறார், கமலா காமேஷ். "அம்மா! நான் ஒரு நிமிட சலனத்தால் வீட்டை விட்டு வெளியேறினாலும், உடலில் களங்கப்படாதவள் என்று கூறி, நடந்ததையெல்லாம் கூறுகிறார்.



ரஜினி- அம்பிகா படம்- எங்கேயோ கேட்ட குரல்

## ரஜினி நடித்த காவியம் "எங்கேயோ கேட்ட குரல்"

"நீ என் மகள்! நீ களங்கப்பட்டிருக்க மாட்டாய் என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டுக் கொண்டே இருந்தது என்பார், கமலா காமேஷ்.

"அம்மா! சாவதற்கு முன் அவரை (ரஜினி) ஒரு முறை நான் பார்க்க வேண்டும். மன்னிப்பு கேட்க வேண்டும்! என்று தாயிடம் கூறுகிறார், அம்பிகா.

### கடைசி ஆசை

அம்பிகா களங்கமற்றவர் என்பதை அறியும் ரஜினி, அவரை பார்க்கச் செல்வார். கணவரை பார்த்துக் கதறுவார, அம்பிகா.

"என் மனதில் நீண்ட காலமாக் ஒரு சுமை இருந்தது. நீ களங்கப் படவில்லை என்று அறிந்ததும், அந்த சுமை இறங்கி விட்டது. ஒரு சின்ன சபலம் கூட, ஒரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்கி விடும் என்பதற்கு உன் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு என்பார், ரஜினி.


"நான் அதிக நாளைக்கு உயிர் வாழமாட்டேன். நான் இறந்தால், எனக்கு செய்ய வேண்டிய சடங்குகளை நீங்கள் செய்ய வேண்டும். என்னை அனாதைப் பிணமாக விட்டு விடாதீர்கள். இதுதான் என் கடைசி ஆசை என்று கண்ணீருடன் யாசிப்பார், அம்பிகா.

உன் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவேன் என்று கூறி விட்டு நடப்பார், ரஜினி.

அடுத்த நிமிடமே, ரஜினி விட்டுச் சென்ற செருப்பருகே சுருண்டு விழுந்து உயிர் துறப்பார், அம்பிகா.

இதுபற்றி தகவல் தெரிந்ததும், ஊர் பஞ்சாயத்து கூடும். (பஞ்சாயத்து தலைவர் அம்பிகாவின் அப்பா தான்) அம்பிகா ஏற்கனவே கிராமத்தை விட்டு விலக்கி வைக்கப்பட்டவர் என்பதால், அவர் உடலை அனாதைப்பிணமாக கருதி தகனம் செய்வது என்று முடிவு செய்யப்படும். தகனச் செலவுகளுக்காக வெட்டியானுக்கு 36 ரூபாய் 50 பைசாவை பஞ்சாயத்து வழங்கும். இதை அறியும் ரஜினி, அம்பிகாவின் உடலை தான் தகனம் செய்யப போவதாக அறிவிப்பார்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 77

...இவ கதவு அடச்சது அடைச்சது தான்.

அதுக்குப் பெறகு தெறக்கவே இல்லையே.

ஏ ரெங்கம்மா அது ஒரு வழிக்கு நல்லதுன்னு நெனச்சுக்க.

அந்தக் கட்டையன் இப்ப அவ கூட இருந்தான்னு வச்சுக்க.

கருத்தக் கண்ணி கதையாகிப் போகும் கருவாச்சி கத.

எந்தக் கருத்தக் கண்ணி...?

நம்ம முத்தணம் பட்டிக் கருத்தக் கண்ணி.

அவளுக்கு எட்டு மாசம் முடிஞ்சு ஒம்போது பெறக்க அவ புருசன் ஊமச்சாமி சாரயம் குடிச்சுட்டுச் சாமியாடிட்டே வந்து எக்குத்தப்பாய் புடிச்சு அமுக்கி எடக்கு மடக்காப் பண்ணப் போக வகுத்துல கெடந்தபிள்ள குபுக்ன்னு நெஞ்சில ஏறிச் சம்மணங் கால் போட்டு உக்காந்திருச்சு.

மூச்சுப் போயிச் செத்துப்போனாளா இல்லையா? சுடுகாட்டுல தோட்டியும் சவரக்கபாரனும் சேந்துதான் நெஞ்சக் கீறிப் பிள்ளைய எடுத்து தாய் பிள்ளையை ஒண்ணுமேல ஒண்ணு வச்சு எரிச்சாங்க.

கட்டையன் இன்னைக்கிக் கூடயிருந்தா அந்தக் கூத்தாயிப் போயிரும் கருவாச்சிக்கு.

புண்ணியம் பண்ணுனவ பொழைச்சா.

இன்னும் கருவாச்சிதான் வாசத் தொளிக்கிறா.

தனியாப் போயிப் தண்ணிப்பான சொமந்து வாரா.

அவளாக் கஞ்சி காச்சிக் கொண்ண வாயனுக்கும் தூக்குச்சட்டியில குடுத்து விடுறா.

அந்தக் கூலிக்கும் அப்பப்பப் போயிட்டு வர்றா.

எட்டு முடிஞ்சு மாசம் ஒம்போது.

பிள்ள பெறப் போற ஒரு பிள்ளத்தாச்சி பாவட கட்டத்தெரியாத பள்ளிக்கூடத்துப் பிள்ள மாதிரி கேக்குறா.

சொல்லு ஆத்தா.



எனக்கு ஆம்பளப்பிள்ள பெறக்குமா? பொம்பளப் பிள்ள பெறக்குமா?

எந்தப் பிள்ள பெறந்தாலும் ஒன் சொந்த பிள்ளதான்.

ஆனாலும் சொல்றேன்...

ஒனக்கு ஆம்பளப்பிள்ளதான் பொறக்கும்.

எதவச்சு சொல்ற....?

உக்காந்த ஒரு பிள்ளத்தாச்சி எப்பவும் வலது கைய ஊண்டி எந்திரிச்சான்னா அவளுக்கு ஆம்பளப்பிள்ள.

எடது கைய ஊன்டி எந்திரிச்சான்னாப் பொம்பளப்பிள்ள.

நான் காத்த அளவுல நீ வலது கைய ஊன்டித்தான் எந்திரிக்கிறவ.

சக்கம்மா மேல சத்தியமாச் சொல்றேன் கருவாச்சி கருவுல சொமக்கிறது ஆம்பளப் பிள்ளதாண்டி அம்மா.

ஏழே நாள்ல நெஞ்சுமுட்டி நின்ன வயிறு ரெண்டு பக்கமும் சன்னஞ் சன்னமாச் சரிஞ்சு போச்சு.

தொப்புள் மலந்து போச்சு.

பாத்தவுடன சொல்லிட்டாளுக பெரிய பொம்பளைக ரெண்டு பேரும்.

ஒரு வாரமோ பத்து நாளோ பெத்துருவடியம்மா பிள்ள.

அந்த அங்காள ஈஸ்வரியும் ஆத்தா பெரியமூக்கியும் ஒங்கூடவேயிருப்பாக. கொறவராது.

பங்குனி கடைசி.

வரப் போற சித்திரை வறுத்தெடுக்கிறதுக்கு முன்னால பூமி குளிர ஒரு போடு போட்டுட்டு போயிடறேன்னு கூடி நிக்கிது கோடை மேகம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் விருப்பங்களை நிறைவேற்ற இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தவும்

## பிரதமர் மோடிக்கு கருணாநிதி கடிதம்



இலங்கைத் தமிழர்களின் விருப்பங்களை நிறைவேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்த வேண்டுமென கலைஞர் கருணாநிதி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது,

என்னுடைய வாழ்த்துகளை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். இலங்கையில் வாழும் தமிழர்களின் தொடர் இன்னல்கள் குறித்து என்னுடைய இந்தக் கடிதத்தை இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தங்களை டில்லியில் சந்திக்கவிருக்கும் வேளையில் அனுப்பியிருக்கின் றேன்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் பேராதரவைப் பெற்றே மைத்திரி இலங்கை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தாங்கள் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வரும் அரசியல் சட்டத்திற்குப் புறம்பான பாகுபாடு மற்றும் கட்டுப்பாடற்ற மனிதநேயமின்மை ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வருவார் என்று பெரிதும் நம்பியே இலங்கைத் தமிழர்கள் மைத்திரிக்கு விரும்பி வாக்களித்தார்கள். தேர்தலின் போது மைத்திரியும் அவருடைய கூட்டணிக் கட்சிக் காரர்களும் தமிழர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை உண்மையிலேயே நம்பினார்கள்.

தமிழர்கள் வாழும் பகுதிகளிலிருந்து இராணுவம் திரும்பப் பெறப்பட்டுவிடுமென்றும், இராணுவத்தினரும், சிங்களவர்களும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் வீடுகளை திரும்பப் பெற்று விடலாமென்றும், இனியும் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படமாட்டார்கள் என்றும், சுயமரியாதையோடும், கண்ணியத்தோடும் கூடிய அமைதியான வாழ்வுக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்றும், முப்பதாண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வரும் 13ஆவது திருத்தம் நேர்மையான முறையில் அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்றும், தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறுமென்றும் தமிழர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் நிகழ்வுகள் தமிழர்களைச் சோர்வடையச் செய்திருக்கின்றன. தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், செய்யப்பட்ட அறிவிப்புகளும் பல. ஆனால் இதுவரை நடைமுறைக்கு வந்தது ஒரு சிலவே. அல்லது எதுவும் நடைமுறைக்கே வரவில்லை என்று தான் கூற வேண்டும். ஒரு சில நாட்களிலே சாதித்துக் காட்டப் படக் கூடியனவை கூட இதுவரையில் நடைபெறவில்லை. ஒரு காலகட்டத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டியவைகளுக்கான அடையாளங்களும் தோன்றவில்லை.

தமிழர்கள் வாழும் பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவம் திரும்பப் பெறப்படவில்லை. தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகளும், நிலங்களும் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படவில்லை. தமிழர்களின் நடமாட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்கென்றே நிறுவப்பட்ட சோதனைச் சாவடிகள் அகற்றப்படவில்லை. தமிழர்களின் சுதந்திரமான வாழ்க்கை முறைகளை சிதைத்திடும் வண்ணம் ஏற்கனவே இருந்து வரும் இலங்கை அரசின் கண்காணிப்பு திரும்பப் பெறப்படவில்லை. இவற்றையெல்லாம் விட, மிக மோசமான காரியம் ஒன்று தற்போது நடந்திருக்கின்றது என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

## பொதுத் தேர்தலில் பசில் ராஜபக்ஷவை இணைக்கப்போவதில்லை-செனவிரட்ன

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தொடர்புபடமாட்டார் என முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். தேர்தல் நடவடிக்கைகளின் எந்தவொரு விடயத்திற்கும் பசில் ராஜபக்ஷவை இணைத்துக் கொள்ளப் போவதில்லை. கடந்த அரசாங்கத்தின் தோல்விக்கு பசில் ராஜபக்ஷவின் நடவடிக்கைகளும் ஏதுவாக அமைந்தது.


கடந்த காலத்தில் சில பௌத்த அமைப்புக்களின் நடவடிக்கைகளினால் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இழக்க நேரிட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக மகிந்த ராஜபக்சவையும் இணைத்துக் கொண்டு கட்சியை முன்னோக்கி நகர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜோன் செனவி ரட்ன தெரிவித்துள்ளார். சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100-140 | 130 | 150 | 200 |
| தக்காளி | 150-200 | 200 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 80 | 80 | 100 |
| கரட் | 200 | 140 | 160 | 150 |
| பூசணி | 100 | 100 | 70 | 100 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 70-110 | 100 | 100 | 130 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 | 80-100 |
| பாகற்காய் | 90 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 90 | 100 | 80 | 140 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 70 | 100 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 180 | 160 |
| முருங்கைக்காய் | — | 500 | — | — |
| போஞ்சி | 200 | 100 | 170 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 40 | 40 | — |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 30 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 60-100 | 120 | 110 | 120 |

## (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 282


சுஜி செல்வா




எஸ்.கௌமாறன்




கஸ்ரோ




அருணைதாஸ்




தவா




சர்மி சர்மிலா




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-34

# வெள்ளி விழா ஆண்டில் விவசாய பீடம்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இனியொரு பசுமைப்புரட்சியில் விவசாய பீடத்தின் பங்கு அளப்பரியது. இருபத்தைந்து ஆண்டுகளாக போரின் வடுக்களுடன் பயணித்து அதன் சுமையையும் தாங்கி ஆறுதலுக்கு சுமைதாங்கியாகவும் இருந்து தற்போது உயர்ந்தெழ வழிபிறந்திருக்கின்றது. விவசாய பீடத்தின் வரலாறு மறக்கத்தக்கதொன்றல்ல. அதில் நடந்த நிகழ்வுகள் ஒன்றும் நாடக மேடைக்கான ஒத்திகையுமல்ல. நிஜமான கனவுகளுடன் பயணித்த சராசரி மனிதர்கள் போல நினைத்து நினைத்து உயர்ந்தெழ துடித்த பீடம் இது. எங்களூர் பெரியவர் அடிக்கடி சொல்வது போல தம்பி பாய் போட்டு படுத்திருக்க நல்லாத்தான் இருக்கும், இன்னும் கூடியிருந்து குசும்பு பேசவும் வசதியாகவும் இருக்கும். ஆனால் ஓடியோடி உழைத்தால்தான் உருப்படமுடியும். பேச்சைக்குறை த்து செயலில் காட்டு. பெரியவர், முதியவர் அருளியது பொன்மொழிகள்! சிலேடையாக கூறினாலும் சிறிய மூளைக்கு அன்றே உறைத்தது. என்ன செய்வது? எங்கு செல்வது? ஒன்றுமே புரியாத காலங்களவை. பீடத்திற்குள் செயன்முறைக்காட்டுநராக 1990 இல் உள்நுழைந்த போது பீடத்தில் எதுவுமே இருக்கவிலலை. விவசாயத்தை மனம்நெகிழ்ந்து கற்று வந்தது விவசாயத்திற்கான பல்கலைக்கழகத்தில். அதனை செயலில் காட்டுவோம் என்றால் வழமையான எம்மவர்களின் எதிர்ப்புக்கள் உள்ளேயும் வெளியேயும் களைகட்டி கலகலப்பாக நகைத்தன. நல்லதை எங்கென்றாலும் எவரிடமென்றாலும் பெற்றுக்கொள்வதில் தப்பேது. இளவயது இள இரத்தத்தின் சூட்டில் பலவழிகளில் முனைந்தது, இருப்பினும் எடுத்த முயற்சிகள் அனைத்தும் பயன்தரவில்லை. அவ்வளவற்றையும் அடக்கி வைப்பதைத் தவிர வேறுவழியில்லை என்றாகி விட்டது.

விவசாய பீடத்தின் வாழ்க்கையின் ஆரம்பம் ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும் இன்னொரு புறம் துன்பங்கள் பல நிறைந்தன. துனபங்கள் என்றால் சொல்லொணா துன்பம் என்று பொருள். ஆனாலும் எமக்கான வசதிவாய்ப்புக்களை நாமே ஏற்படுத்திக்கொண்டோம். வசதியெதுவும் இல்லையென்று விவசாய பீடம் என்றைக்கும் போராட்டமோ அன்றி உண்ணா விரதமோ இருந்ததில்லை. அவவளவுகடு விபரமறிந்த பணியாளர்களள, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள். இங்கு படித்து பட்டதாரிகளான எம்மினிய மாணவர்கள் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை ஒழுக்கமாக இருந்து வாழ்ந்து இன்றும் அதற்கு சான்றாக இருப்பதைப் பார்த்து தலைவணங்குகின்றேன். ஒற்றுமை ஒன்றையே மூலதனமாக வைத்து மெல்ல மெல்ல வளரத்தொடங்கியது பசுமையின் பீடம். வருகைதந்த மாணவர்களுக்கு ஒரு பீடத்தின் உணர்வினையே கொடுக்க முடியாது அல்லற்பட்ட காலங்களவை. கற்பிப்பவருக்கும் பீடமொன்றில் பணிபுரிவதற்கான உணர்வில்லை. ஆரம்ப பாடசாலையொன்றின் வசதி கூட இல்லாது இயங்க ஆரம்பித்த விவசாய பீடம் முதலாம் வருட பட்டதாரிகளை வெளிவிட்ட போது மகிழ்ச்சிகொள்ள தொடங்கியது. [illegible]

சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன் நாம் தற்போது விரும்பும் அத்தனை மென்திறன்களுடனும் மிளிரும் போது உள்ளம் சிலிர்க்கின்றது. இது பீடம் கற்பித்ததனால் மட்டும் அவர்களுக்குள் வந்ததல்ல. அவர்களாகவே உணர்ந்து உள்வாங்கிக்கொண்ட திறன்களவை. இதைத்தான் இன்றும் மற்றைய மாணவர்களிடம் நடக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். மாணவர்கள் பல்துறையில் விற்பன்னராக விளங்கும் செய்திகளை முகப்புத்தகத்திலும் தொலைபேசியிலும் நேரிலும் கேட்கும் போது மனம் நிறைவடைகின்றது. அவர்களது உயர்வில் ஏதோ ஒருவகையில் எமக்கும் சிறிய பங்குண்டு என எண்ணும் போது மனம் உண்மையில் குளிருகின்றது. ஆசிரியரின் பணியின் உயர்வை எய்தியதாக ஒரு உணர்வு. பீடத்து உறுப்பினர்கள் ஒற்றுமையாக இருப்பது ஒன்று மட்டுமே எமது பலம். பலவீனங்கள் பலவிருப்பினும் விட்டுக்கொடுப்புகள் மட்டும்தான் உயர்வைத்தரும் என பெரியவர் கூறியது இன்றும் நினைவிலிருக்கின்றது. சொந்த நிலமோ சொந்த கட்டடமோ எதுவுமில்லாமல் தற்காலிகமாக இருபத்தைந்து வருடங்கள் வாழ்ந்த பீடத்தின் வரலாறு இடம்பெயர்ந்து தற்காலிக வீடுகளில் வாழ்ந்த எம்மவர்களின் சொந்த கதையாகவே இருப்பதைப் பார்க்கலாம். இருபத்தைந்து வருடங்களாக அதில் இராமர் வனவாசம் சென்றது போல பதினான்கு வருடங்களாக யாழ்ப்பாணத்தில் அதே வீடுகளில் துறைகளையும் இருந்த முன்வராண்டாவை செயன்முறைக்கான வகுப்புக்காகவும் அங்கிருந்த அடுக்களையை ஆய்வுகூடமாகவும் ஆக்கி அகதிகளாக வாழ்ந்த வரலாறு விரைந்து மறக்கத்தக்கதல்ல. விவசாயிகளின் விளைநிலத்தை எமது கற்பதற்கான ஆய்வுகூடமாக்கினோம். அதில் தானே பலவற்றை கற்றுக் கொண்டோம் கற்றும் கொடுத்தோம். என்றும் மருத்துவ பீடத்தின் உதவியை விவசாய பீடம் மறந்திட முடியாது. வந்தவர்களை வாழவைத்த அந்த நல்லிதயம் மருத்துவபீடத்திற்கிருந்தது. கட்டட உதவி, உபகரண உதவி இன்னும் பலவற்றை செய்து எமக்கு ஆறுதலாகவும் அனுசரணையாகவுமிருந்ததை எண்ணி மனம் நெகிழ்கின்றது.

விவசாயபீடத்தின் இந்த இருண்ட கால வாழ்க்கைக்குள்ளால் எமது கல்வியுயர்வும் பதவியுயர்வும் பின்னப்பிணைந்தே இருந்தது. இன்னும நிகழ்ந்தது. உயர்ந்தெழுந்த கட்டடங்களில் உள்ளமர்ந்து உலகளந்த உன்னதமான கல்விமான்களுக்கிணைவாக பீட உறுப்பினர்களும் உயர்ந்தெழ பலத்த இன்னல்பட வேண்டியதாயிற்று. வசதியில்லாத துறைகள், வசதிவாய்ப்பில்லாத ஆய்வுகூடம், மழைகாலத்தில் ஆறு குறுக்காக ஓடும் பாதைகள், பாலர் பாடசாலை கூட எண்ணிப்பார்க்காத வகுப்பறை கட்டடங்கள், மாணவர்கள் ஆறுவதற்குக்கூட இடமில்லாத இடைவெளிகள், மின்சாரத்தை ஒழுங்காக்கும் பாரிய டிரான்ஸ்போமரை நடுவே வைத்துக்கொண்டு தினமும் அச்சத்துடன் வாழ்ந்த வரலாறுற்றுடன் இவையனைத்தையும் உள்வாங்கி புலமையில் உயர்ந்தெழ வேண்டிய அவசியம் அனைவருக்கும் இருந்தது. ஒக்ஸ்போட்டும் கேம்பிரிச்சும் இவ்வாறான வசதிவாய்ப்புடனிருந்திருந்தால் போரின் பிடிக்குள் இவ்வாறு சிக்குண்டிருந்தால் இதைவிட எதை சாதித்திருக்க முடியும். ஆனாலும் இவ்வளவு வசதிகளுடனும் சமமாக சமகால வயதுடன் விரிவுரையாளர்களாக உள்ளார்ந்தவர்களைக் கொண்ட மற்றைய பீடங்களுடனும் பல்கலைக்கழகங்களுடனும் உயர்ந்தெழ நாமும் பீனிக்ஸ் பறவை போல உயிர்த்தெழ வேண்டியதாயிற்று. இவையனைத்தையும் உள்ளுணர்ந்த அனுபவித்த ஜீவன் என்பதால் உண்மையை உரைக்கலானேன். விவசாய பீடத்திலிருந்து வெளியேறும் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் எமது சொத்து. அவர்களின் உயர்வு எமது உயர்வு. அவர்கள் அனைவரும் விவசாய பீடத்தின் **அம்பாசடர்கள்.** அதாவது பீடத்தின உயர்வுக்கான உன்னத காட்சிப் பொருட்கள். மேலுயர்ந்தவர்களைக் காட்டி, **நிலாவைக்காட்டி பிள்ளைககு சோறூட்டியதைப் போல** புதிதாக இணையும் மாணவர்களுக்கு தெம்பு கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம். வசதிவாய்ப்பென எதைக்காட்டுவது? போட்டிப்பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகத்தினுள் உள்வரும் எந்த மாணவனுக்கும் மாணவிக்கும் விவசாய பீடம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இருந்த நிலை நிச்சயமாக மகிழ்ச்சியைத் தராது. சாதாரண பிரத்தியேக வகுப்புக் கூட வசதிவாய்ப்புக்கள் பலவுடன் இயங்கும் போது பீடம் பெயரை மட்டும் பலமாக கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றது.

கேட்பவர்கள் எவருமே உங்**களுக்கென்ன** என்பார்கள். இந்த **உங்களுக்கென்ன** என்பது எம்மைப் பொறுத்தவரையில் துன்பத்தை சுமந்த சொல் மட்டுமே. வளரத் துடித்தோம், உயர்ந்தெழ நினைத்தோம், உணர்வினை உள்ளீர்த்தோம், உயர்வே நினைப்பானோம். இப்போது பல்கலைக்கழகமாக உணர்வில், உயிரில், உதிரத்தில் கொண்டு ஒவ்வொரு கற்களாக கட்டி உயர்ந்தெழுந்த கட்டடத்தின் சொந்தக்காரனாக கால்பதித்துள்ளோம். இப்போது எமக்கொரு நிலமுண்டு, எமக்கொரு கட்டடமுண்டு, எமது பூமியில் இனி திட்டமிட்டு, தட்டமிட்டதை செயற்படுத்தி நிறைவு காண இன்னும் நிறையவே ஓட வேண்டியிருக்கின்றது. காணி நிலம் வேண்டும் பராசக்தி சொந்தமாக வேண்டும். அதில் நாம் உயிர்தந்து, உயர்ந்தெழுந்து உயிர் விட வேண்டும்.

எமது காலமனைத்தும் இடப்பெயர்வும் ஓட்டமுமாகவே முடிவடைந்திருக்கின்றது. ஆனால் தற்போது களைப்பின் கருக்கட்டத் தொடங்கியிருக்கின்றது. இருபத்தைந்து வயது பீடத்திற்கு தற்போது. ஆனால் இருபத்தைந்தில் நுழைந்த எமக்கு ஐம்பதாகின்றது. ஐம்பதிலும் ஆசை வரும் என்பார்கள். இது பீடத்தை முன்னோக்கி இன்னும் நகர்த்துகின்ற ஆசை. எமது பீடம் பாரெங்கும் விரிந்து இன்னல்பட்ட மக்களுக்கு சேவகம் செய்ய வேண்டும். போரின் கொடூரத்தினுள் உயிரை, உடலை, உணர்வை தொலைத்த மக்களுக்கு பீடம் கைகொடுக்க வேண் டும். வாழ்வாதாரத்து துணையாக இப்பீடத்து வளங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட வேண்டும். இதனை உணர்ந்தே கிளிநொச்சி நோக்கி பயணித்து பீடத்தை அமைத்துக்கொண்டோம. பொறியியல் பீடம் கிளிநொச்சியிலமைந்த தற்கும் காரணமுண்டு. அறிஞர்கள் பலர் சேர்ந்து மக்களின் குரலுக்கு செவிசாய்த்ததால் இரு பீடங்களும் கிளிநொச்சியிலமைந்தன. ஆனால் இதனை சுயநோக்கத்திற்காக யாழ்ப்பாணத்திற்கு நகர்த்துவதற்கும் முயற்சிகள் பலவாறாக பலகோணங்களில் எடுக்கப்பட்டன. எங்கிருந்தோ வந்து கூடியிருந்து அளவளாவிவிட்டு இன்னும் உணவருந்திவிட்டு மறுநாள் மறைமுக இலத்திரனியல் ஊடகங்களில் பீடத்தின் வள ர்ச்சி பற்றியும் வளர்ந்து வருப வர்கள் பற்றியும் தூற்றியெழுதிய கனவான்களையும் இப்பீடம் இனங்காண தவறவில்லை. அனைத்தையும் அறிந்து குறைகளை உள்வாங்கி சுமந்து சுமைதாங்கி களானதால் அதில் பலரும் தமது சுமைகளை தற்போதும் இறக்கிக் கொண்டிருக்கின்றார்கள். கண்ணதாசன் கூறியது போல இந்த சுமைதாங்கியும் சாய்ந்தால் சுமையென்னவாகும்? பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்பார் எம்மினிய பேராசான். பலமாக கட்டப்பட்டு உயர்ந்தெழுந்து காட்டிய சுமைதாங்கி இது என்றுமே சாயாது என திடமாக நம்பியிருப்போம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XX



இனியொரு பசுமைப்புரட்சியில் பீடத்தின் பங்களிப்பு மிக முக்கியமானது. பீடத்தின் வளர்ச்சியில் பலருடைய பங்களிப்பு உள்வாங்கப்பட்டிருக்கின்றது. இலைமறை காய்போல பலர் தமது பங்களிப்பை செய்திருக்கின்றார்கள். விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவும் விரிவாக்க பிரிவும் பீடத்துடனிணைந்து செயற்பட வேண்டும் என எதிர்பார்ப்பு அன்றிலிருந்து இன்றுவரை உண்டு. அதற்கு வழியும் இருந்தது, இருக்கின்றது. ஆனால் அதற்குள்ளும் ஒற்று மைக்கு பங்கமிருந்ததால் அது இது வரையும் முழுமை பெறவில்லை. இன்னலுற்ற மக்களுக்கான சிறந்த பணியொன்றில் நாமனைவரும் ஒன்றிணைய வேண்டும். இனியொரு பசுமைப்புரட்சி என்பது மக்களுடன் மக்களாக பயணிப்பதுடன் அவர்களை ஆற்றலுள்ளவர்களாக மாற்றி மீண்டும் இத் தேசத்தை அவர்களுக்கான தேசமாக வளமான பூமியாக வாழ மாற்றுவது ஒன்றாகத்தான் இருக்கும். கடமையொன்றே குறிக்கோள். குறைகளை கருத்துக்களை எம்முன் வையுங்கள். உங்கள் விமர்சனங்கள் என்றும் பீடத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகும்.

**வெள்ளிவிழா இலத்திரனியல் கருத்தரங்கு**

பீடத்தின் வெள்ளிவிழாவை முன்வைத்து இலத்திரனியல் கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கு பீடஅவை முடிவெடுத்திருக்கின்றது. அதனை நெறிப்படுத்துவதற்கு எழுதும் இக்கைகளுக்கு அன்புக் கட்டளையும் இடப்பட்டிருக்கின்றது. விரைவில் அது பற்றி அறியத் தருவோம். தனிப்பட்டவர்களை சாடுவதைத்தவிர்த்து ஆக்கபூர்வமாக இக்கருத்தரங்கு அமைய வேண்டும்என எதிர்பார்க்கின்றோம். விவசாய பீடம் இனி என்ன செய்ய வேண்டும்? எந்த திசை நோக்கி நகரவேண்டும்? எதனை உள்வாங்க வேண்டும். அதற்கான களம் உங்களுக்காக வருகின்றது விரைவில். அனைவரது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து உள்வாங்க முயல்கின்றோம். வாருங்கள் இது எங்கள் தேசம். இதனை நாம் வளமானதாக்கி இனிவரும் எமது சந்த திக்கு வளமான பூமியாக கையளிப் போம். இது வரலாற்றின் அன்பான வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாளாகிய த.தே.கூட்டமைப்பு



கிழக்கு மாகாணசபையில் மீண்டும் ஆட்சி அமைக்கும் விவகாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் த.தே.கூட்டமைப்பினதும் அணுகுமுறைகள் கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளன. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே ஏற்பட்டுவிட்ட அரசியல் சூழலினால், கிழக்கு மாகாணத்தில் ஆட்சியிலிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்டது. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர், கிழக்கு மாகாணசபையில் புதிய ஆட்சி அமைக்க த.தே.கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"ம் கடுமையான பிரயத்தனங்களில் ஈடுபட்டன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"டன் மட்டுமே கூட்டணி வைத்து, ஆட்சி அமைப்போம் என்ற உறுதியான நிலைப்பாட்டில் த.தே.கூட்டமைப்பு இருந்தது. ஆனால், முதலமைச்சர் பதவியை யாருக்கும் விட்டுக் கொடுக்க அது தயாராக இருக்கவில்லை. அதேவேளை, த.தே.கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைக்க முஸ்லிம் காங்கிரஸ் விரும்பினாலும், முதலமைச்சர் பதவி தமக்கு வேண்டும் என்று அடம்பிடித்தது. தொடர் பேச்சுக்கள் தோல்வி அடைய, த.தே.கூட்டமைப்பை கைவிட்டு, முன்னர் ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணியுடன் செய்து கொண்ட பழைய உடன்பாட்டை புதுப்பித்துக்கொண்டு, அதனுடன் சேர்ந்து ஆட்சி அமைத்துள்ளது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

முதலமைச்சராக ஹாபீஸ் நஸீர் அஹமட நியமிக்கப்படும்வரை, அது பற்றி எந்தக் கட்சியுடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆலோசனை நடத்தவில்லை. எல்லாவற்றையும் தன்னிச்சையாக செய்துவிட்டு, கடந்த ஞாயிற்றுக்கிழமை தாருஸ்ஸலாமில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், எல்லாக் கட்சிகளையும் கிழக்கு மாகாண அரசில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

கிழக்கில் முன்னுதாரணமான தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க அழைப்பு விடுத்த அவருக்கு, அதற்கு முன்னதாக எல்லாக் கட்சிகளுடனும் கலந்தாலோசித்து முதலமைச்சரை நியமிக்கவேண்டும் என்ற அரசியல் நாகரிகம் தெரியாமல்போயுள்ளது. த.தே.கூட்டமைப்பு, முதலமைச்சர் பதவி விடயத்தில் விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டதாகவும் அதனாலேயே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து ஆட்சி அமைத்துள்ளதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தார்.

ஆனால், இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்றதொரு கட்சி இருக்கிறதா என்பது முதல் கேள்வி. ஏனென்றால், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் தேசிய சுதந்திர முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி உள்ளிட்ட 16 கட்சிகளை உள்ளடக்கியதொரு கூட்டணி. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசி மட்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கைக்கு வந்துள்ளதே தவிர, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்னமும் பெரும்பாலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவே இருந்துவருகிறது.

தேசிய சுதந்திர முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பாலான கட்சிகள், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக போட்டியிட வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. இந்த நிலையில், காலாவதியாகிப்போன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமைய, முதலமைச்சராக ஹாபீஸ் நஸீர் அஹமட் பொறுப்பேற்றதாக முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளமை அபத்தமானது.

முதலமைச்சர் விவகாரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எந்தளவுக்கு விட்டுக்கொடுக்க மறுதததோ, அதே அளவுக்கு த.தே.கூட்டமைப்பும விட்டுக்கொடுக்க மறுத்தது. அதுபோலவே, முதலமைச்சராக தமது கட்சியினரே வரவேணடும் என்று முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த அத்தனை நியாயங்களும் த.தே.கூட்டமைப்புக்கும் பொருந்தக்கூடியது. த.தே.கூட்டமைப்பு பிடிவாதம் பிடிப்பதாகவும் விட்டுக்கொடுப்புக்கும் ஓர் எல்லை உண்டு என்று செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளியிட்ட கருத்து மிகவும் குதர்க்கமானது.

அதாவது, 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபை தேர்தலுக்கு பின்னர், முஸ்லிம காங்கிரஸ்"க்கு முதலமைச்சர் பதவியை கூட விட்டுக்கொடுக்க தயாராக இருந்தது த.தே.கூட்டமைப்பு. அவ்வாறு விட்டுக்கொடுப்பின் உச்சத்துக்கு சென்றிருந்த த.தே.கூட்டமைப்பு தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டமை, அவரது அரசியல் நேர்மையை கேள்விக்கு உள்ளாக்கியது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி, பல முஸ்லிம் தலைவர்களும் கூட, அமைச்சர் ரவூப் ஹக்கீம் முதுகில் குத்தி விட்டதாக அப்பட்டமாக கொதித்திருந்தார்கள்.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் வரலாறு தனியே பதவிகளை அடிப்படையாக கொணடது. அதற்காக யாருடனும் கூட்டுச்சேரத் தயாராக இருக்கும் என்பது பொதுவான குற்றச்சாட்டாக இருந்துவருகிறது. இப்போது ஒரு பக்கத்தில், மத்தியில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துடன் இருக்கிறது. அடுத்த பொதுத தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடப்போகிறது. ஆனால், கிழக்கு மாகாணசபையில் மைத்திரிபால சிறிசேனவை தலைவராக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவுடன் ஆட்சியில் இருக்கிறது. இது, எங்கு எப்படி பதவிகளை பெறமுடியுமோ, அவ்வாறு தமது கொள்கையை மாற்றிக்கொள்ளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பண்பை வெளிப்படுத்துகிறது. 2012 ஆம் ஆண்டு கிழக்கில் த.தே.கூட்டமைப்புடனும் மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனும் இணைந்து ஆட்சி அமைக்க முன்வராத முஸ்லிம் காங்கிரஸ், இப்போது அதேபோன்றதொரு முரண்பாடுகளை கொணட முறையில் ஆட்சியமைத்திருக்கிறது.

அதிக ஆசனங்களை கொண்ட கட்சிகளை ஓரம் கட்டிவிட்டு, எப்படி குறுக்கு வழியில் ஆட்சியை பிடிக்கலாம் என்று புதிய வழியை காட்டியிருக்கிறது முஸ்லிம் காங்கிரஸ். அது மட்டுமன்றி, கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக வர வேண்டும் என்பது போலவும் அதுவே நியாயம் என்றும் உரிமை என்றும் வாதிட்டிருந்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம். கிழக்கில் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக்குவோம என்று கூறியே வாக்கு கேட்டதாகவும் மக்களின ஆணையை மீறமுடியாது என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நியாயப்படுத்தினார். ஆனால், 2012 ஆம் ஆண்டு மாகாணசபை தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை எதிர்ததே முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடடது. ஆனாலும், யாரை எதிர்த்து வாக்குகளை கேட்டதோ, அவர்களுடனேயே கூட்டணியை வைத்துக்கொண்டது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். அப்போது, கிழக்கு மக்கள் அளித்த ஆணை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு நினைவு இருக்கவில்லை. இப்போது மட்டும் அது நினைவுக்கு வந்திருக்கிறது.

கிழக்கு மாகாணசபையில் புதிய அரசாங்கத்தை அமைக்கும் விடயத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல அரசியல் தர்மங்களை மீறியிருக்கிறது. இது மூவின மக்களும வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் நல்லிணக்கச் சூழலை உருவாக்குவதற்கு சவாலான விடயமாகவே இருக்கப்போகிறது. அதேவேளை, இன்னொரு பக்கத்தில் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்கும் விவகாரத்தில், முஸ்லிம காங்கிரஸ் மீண்டும் ஒருமுறை துரோகம் இழைத்துள்ளதாக குற்றஞ்சாட்டிய த.தே.கூட்டமைப்பு, இப்போது மெல்ல மெல்ல சமரசத்துக்கு இணங்கியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைக்கும் விவகாரத்தில் த.தே.கூட்டமைப்பு முற்றிலும் நியாயமாக நடந்துகொண்டுள்ளது. தமிழ மக்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாஷைகளையும் கருத்திற்கொண்டு செயற்பட்டுள்ளது என்று கருதுவதற்கில்லை. கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"டன் இணைந்து ஆட்சி அமைக்கவே த.தே.கூட்டமைப்பு முயற்சி எடுத்திருந்தது. முதலமைச்சர் பதவியை த.தே.கூட்டமைப்பு தனக்கு வைத்துக்கொண்டு அமைச்சர் பதவிகளை முஸ்லிம் காங்கிரஸ்"க்கு வழங்குவது குறித்து பேசப்பட்டது. ஆனால், இரண்டு தரப்புமே முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுக்க முன்வரவில்லை.

2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையில் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரத்தை துடைத்தெறிய வேண்டும் என்பதற்காக, முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ்"க்கு வழங்கவும் தயாராக இருந்தது த.தே.கூட்டமைப்பு. ஆனால், இப்போது மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதால், அதே த.தே.கூட்டமைப்பு முதலமைச்சர் பதவிக்காக அடம்பிடித்தது. கடந்தமுறை நல்லெண்ணத்துடன் விட்டுக்கொடுக்க முனைந்த முதலமைச்சர் பதவியை, இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்டுக்கொடுக்க தயாராக இருக்கவில்லை.

இம்முறை முதலமைச்சர் பதவியை தாம் விட்டுக்கொடுக்க முடியாது. அதுவே நியாய மான கோரிக்கை என்று கூறிய தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு, 2012 ஆம் ஆண்டு அந்த நியாயமான கோரிக்கையை ஏன் புறந்தள்ளி யது என்ற கேள்விக்கு எவ்வாறு பதிலளிக்க முடியும்?

த.தே.கூட்டமைப்பை பொறுத்தவரையில், கிழக்கு மாகாணசபையில் தனித்து ஆட்சியமைக்க ஆணை தாருங்கள் என்றே தமிழ் மக்களிடம் கோரியது. ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை விட, சுமார் 6,500 வாக்குகளை குறைவாக பெற்றுக் கொண்டதால், அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. என்றாலும், த.தே.கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"டன் மட்டுமே கூட்டணி ஆட்சி அமைப்போம் என்ற பிடிவாதத்தில் இருந்தது சரியா என்ற கேள்வியும் இருக்கிறது. தேசிய அளவில் இணக்க அரசியல் நடத்தும் அளவுக்கு த.தே.கூட்டமைப்பு தாராண்மைக் கொள்கையை கடைப்பிடிக்க தொடங்கியுள்ளது.

கடந்தமுறையும் இந்தமுறையும் ஜனாதிபதி தேர்தலில் த.தே.கூட்டமைப்பு பெரும்பான்மையின வேட்பாளருக்காக வாக்கு கேட்டது. அமைச்சர் பதவியை பெற்றுக் கொள்ளாவிடினும், புதிய அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து ஆதரவு கொடுத்து வருகிறது. அப்படியான நிலையில், கிழக்கு மாகாண சபையில், முஸ்லிம் காங்கிரஸ் அல்லாத கட்சிகளை இணைத்து ஆட்சியமைக்க கூட்டமைப்பு முயற்சித்திருக்கலாம். அது ஒரு வேளை, கூட்டமைப்புக்கு முதலமைச்சர் பதவியை பெற்றுத்தந்திருக்கக்கூடும். அந்த வாய்ப்பை த.தே.கூட்டமைப்பே உதறித் தள்ளியது. அதுமட்டுமன்றி, கிழக்கு மாகாண முதல்வராக ஹாபீஸ் நஸீர் அஹமட் பதவியேற்றதும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மககளின் ஆணையை மீறிவிட்டதாக த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதனை முஸ்லிம் காங்கிரஸின் துரோகம் என்று வர்ணித்தனர். அவ்வாறானவர்கள், கிழக்கு மாகாண சபையில் அமைச்சர் பதவிக்காக பேரம் பேச முனைந்திருக்கக்கூடாது. முதலமைச்சர் பதவி கிடைக்காத நிலையில், கிடைத்த அமைச்சர் பதவிகளையாவது பெறுவோம் என்ற வகையில் இந்தப் பேரம்பேசல்கள் கருதப்பட்டன. முதலமைச்சர் பதவியை தட்டிப பறித்த முஸ்லிம் காங்கிரஸ்"க்கு, அதன் தவறை உணர்த்துவதற்கு அமைச்சர் பதவிகளையும் ஏற்காமல் ஒதுங்கியிருப்பதே ஒரே வழி.

வெளியிலிருந்து ஆதரவு தருகிறோம். எஞ்சிய காலத்துக்கு ஆட்சி செய்யுங்கள் என்று பெருந்தன்மையோடு ஒதுங்கியிருக்கவேண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. முதலமைச்சர் பதவி தட்டிப்பறிக்கப்பட்ட பின்னரும், அமைச்சர் பதவிகளுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரம் பேசுவதற்கு இறங்கிப் போனது அருவருக்கத்தக்க செயலாக பார்க்கப்படுகிறது. அதைவிட முதலமைச்சர் பதவியை இப்போது கைவிட்டு, கிடைத்த அமைச்சர் பதவியை ஏற்பது குறித்து ஆலோசிக்க தயாராகியுள்ள த.தே.கூட்டமைப்பு, ஆரம்பத்திலேயே முதலமைச்சர் பதவிக்காக முரண்டுபிடிக்காமல் விட்டுக்கொடுத்திருக்கலாம.

அப்போது விட்டுக்கொடுத்திருந்தால், அதுவே முஸ்லிம்கள் மத்தியில் த.தே.கூட்டமைப்பு குறித்த நல்லெண்ணத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆனால், முதலமைச்சர் பதவிக்காக இழுபறிப்பட்டு விட்டு, இதனால், இரு சமூகங்களும் முட்டி மோதிக்கொண்ட நிலையில், எட்டாத பழம் புளிக்கும் என்ற வகையில் ஒதுங்கிக்கொள்வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அவமானம்.

த.தே.கூட்டமைப்பு ஒரே நேரத்தில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் முஸ்லிம் மக்களின் நல்லெண்ணத்தையும் பெறுவதற்கு எதிர்பார்க்கிறது. ஆனால், கிழக்கின் இனவாத அரசியல் சூழல் அத்தகையதொரு ஏது நிலையை இன்னமும் ஏற்படுத்தவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில், தனது அரசியல் உத்திகளை மாற்றிக் கொள்ளாவிடின், எப்போதுமே இதுபோன்று தானும் ஏமாந்து தமிழ் மக்களையும் ஏமாற்றிக்கொள்ள நேரிடும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் கடத்தலை தடுக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டுக்குள் போதைப் பொருள் கடத்தப்படுவதனை தடுக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதனை தடுக்க விமான நிலையம் மற்றும் துறைமுகத்தை மையப்படுத்தி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக மக்களையும் நாட்டையும் பிரச்சினையில் ஆழ்த்தி வரும் போதைப் பொருள் கடத்தல் பிரச்சினைகளுக்கு புதிய அரசாங்கம் தீரவு வழங்க நடவடிக்கை எடுக்கும்.

போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க கடந்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதிலும் சில காரணங்களால் போதைப்பொருள் கடத்தல்களை தடுக்க முடியவில்லை.

எனினும் புதிய அரசாங்கம் கடுமையான அர்ப்பணிப்புடன் போதைப் பொருள் கடத்தல்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.

போதைப்பொருள் பயன்பாட்டை தடுக்கும் சட்டங்களை கடுமையாக்குவதுடன் கடத்தல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விமான நிலையம் மற்றும் துறைமுகத்தை மையப்படுத்தி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதைப் பொருள் ஒழிப்பு குறித்த சந்திப்பில் இதனை தெரிவித்தார். (இ-5)

## துமிந்தவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்தன



பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட 'பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அஜித் ரோஹண கூறியுள்ளார். போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய வெலே சுதா என்பவர் வழங்கிய தகவலின் அடிப்படையில், துமிந்த சில்வாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 3 நாட்கள் சுமார் 20 மணித்தியாலங்கள் இவ் விசாரணைகள் இடம்பெற்றன. துமிந்த சில்வாவிடம் அடிக்கடி விசாரணைகள் நடைபெற்ற போதும் அவர் கைது செய்யப்படாமை குறித்து, மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர அண்மையில் அதிருப்தி வெளியிட்டார்.

எது எவ்வாறு இருப்பினும் சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தினால், உரிய சாட்சிகள் இல்லாவிடில் அவர் பிணையில் வெளியில் வரமுடியும் என அஜித் ரோஹண சுட்டிக்காட்டினார்.

எனவே போதுமான சாட்சிகளுடன் சந்தேக நபரை கைதுசெய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்திய பின்னர் நீண்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர் குற்றவாளியா? அல்லது நிரபராதியா? என தீர்மானிப்பதே முக்கியம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## அமெரிக்காவில் வீதி ஒன்றுக்கு இலங்கையரின் பெயர் வைப்பு

அமெரிக்காவில் உள்ள வீதி ஒன்றுக்கு இலங்கையர் ஒருவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள வீதியொன்றுக்கு கல்யாண ரணசிங்க எனப் பெயரிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றிய இலங்கையரே இந்த கல்யாண ரணசிங்க ஆவார்.

ஓராண்டு காலத்திற்கு முன்னதாக கல்யாண ரணசிங்க திடீர் விபத்தொன்றில் உயிரிழந்தார்.

குறித்த வீதிக்கு கல்யாண ரணசிங்க என பெயரிடப்பட்டுள்ளதாக குறித்த நகரின் முதல்வர் பில் டி பிலேசியோ, ரணசிங்கவின் மனைவி தம்மிக்கா கன்னங்கர மற்றும் மகள் திமுது ரணசிங்க ஆகியோரிடம் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வாழ்ந்த இலங்கையர் ஒருவரின் பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட முதலாவது வீதி இதுவென சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# மரணதண்டனை நிறைவேற்றும் சட்டத்தை திருத்த வேண்டும்

மரண தண்டனை வழங்குவதற்கு ஜனாதிபதியின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற சட்டத்தைத் திருத்துவதன் மூலம் மரண தண்டனைக்கு காத்திருக்கும் குற்றவாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திர ரத்ன பல்லேகம தெரிவித்தார்.

சந்தேகநபர் ஒருவருக்கு நீதிமன்றத்தில் நீதிபதி மரண தண்டனை விதித்தாலும், ஜனாதிபதியின் அனுமதியுடன் தூக்கிலிடுமாறே நீதிமன்றம் அறிவிக்கும்.

இதனால் தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதியின் அனுமதியைப் பெறுவதற்காக நீண்டநாட்கள் காத்திருக்கவேண்டி ஏற்படும். இது தொடர்பான சட்டம் திருத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் அனுமதி இன்றி நீதிமன்றமே தூக்கிலிடுமாறு உத்தரவிட்டால் சிறைச்சாலைகளில் காணப்படும் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆயிரம் பேர் சிறையில் உள்ளனர்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக பதவியேற்ற பின்னர் நேற்று முன்தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை இன்னமும் காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் அங்குனுகொலபலஸ் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டதும் இடப்பற்றாக்குறையை தீர்க்க முடியும் என நினைக்கின்றோம்.

அதேநேரம், சிறைச்சாலைகள் ஆணையாளராக இருந்த காலத்தில் பணியாளர்களுக்கான வளங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தேன்.

புதிய அரசாங்கத்தின் ஊடாக சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு 50 பேருந்து வண்டிகளும், 10 லொறிகளும், 8 தண்ணீர் பவுசர்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்தவாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு புதிதாக ஆயிரத்து 300 பேர் உள்வாங்கப்படவுள்ளனர்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இதன் மூலம் உள்வாங்கப்படவுள்ள [illegible] (இ-5)

## இன்று ஒரு தகவல்

### அடைக்கலம்

வளமான மரங்கள் நிறைந்த ஒரு காட்டில் ஒரு ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தில் ஒரு கொக்கு இருந்தது. அது தெய்வீக கொக்கு. தேவலோகமெல்லாம் சர்வசாதாரணமாக போய்விட்டு வரக்கூடிய ஒரு கொக்கு.

அதே காட்டில் சிறிது தூரத்தில் ஓர் அரக்கன் இருந்தான். அந்தக் கொக்கு தினமும் மாலை வேளையில் புறப்பட்டு நேராக அந்த அரக்கனிடம் போகும். சிறிது நேரம் பேசிக் கொண்டு இருக்கும்.

அதன்பின்னர் திரும்பி தன்னுடைய கூட்டுக்கு வந்து விடும். தினமும் இப்படிச் செய்யும்.

ஒருநாள் இரவு.... அந்தக் காட்டு வழியாக ஒரு வழிப்போக்கன் வந்தான்.

காட்டு விலங்குகள் எல்லாம் கத்த ஆரம்பித்து விட்டன. இவன் பயந்து போய் அந்தக் கொக்கு இருக்கும் மரத்தடிக்கு ஓடி வந்தான்.

"உன்னைச் சரணடைந்து விட்டேன். என்னைக் காப்பாற்று" என்று கத்தினான்.

கொக்குக் கீழே இறங்கி வந்தது. "நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். கவலைப்படாதே" என்றது.

அவ்விடத்தில் உட்காரச் சொல்லிவிட்டு பறந்து போய் பழங்கள் எல்லாம் கொண்டு வந்து கொடுத்தது.

அதன்பின்னர் அந்தக் கொக்கு சொல்லியது.

"இதோ பார் நீ இந்த மரத்தடியிலே படுத்துக் கொள். நானும் உனக்குத் துணையாக படுத்துக் கொள்கிறேன். காலையில் எழுந்து உனக்கு ஒரு கடிதம் தருகிறேன். சிறிது தூரத்தில் ஒரு அரக்கன் இருக்கிறான். அவனிடம் கடிதத்தைக் கொடு உனக்கு வேண்டியதைச் செய்வான்" என்றது.

விடிந்ததும் அந்தக் கொக்கு ஒரு பனை மரத்து ஓலையை எடுத்தது. தனது அலகால் ஒரு கடிதம் எழுதியது. அதை அவனிடம் கொடுத்தது.

அவன் அதை வாங்கிக் கொண்டு போனார்.

அரக்கனிடம் கொடுத்தான். அவன் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்று ஒரு பானை நிறைய பவுண் காசுகளைக் கொடுத்தான்.

வழியில் திருடர் பயம் என்பதால் பாதுகாப்புக்கு ஒரு கத்தியையும் கொடுத்தான். இவன் அதை வாங்கிக் கொண்டு மீண்டும் கொக்கு இருந்த மரத்தடிக்கு வந்தான். இருட்டி விட்டதால் படுத்துத் தூங்கினார். பக்கத்தில் அந்தக் கொக்கு படுத்து இருந்தது.

நள்ளிரவு நேரம் இவனுக்கு பசி வாட்டி எடுக்கத் தொடங்கியது. எழுந்தான். பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த கொக்கைப் பார்த்தான். அதை ஓங்கி வெட்டினான். அரை வாசியைச் சாப்பிட்டான். மீதியை அடுத்த வேளைக்கு உதவுமே என்று வைத்திருந்தான். உடனே அங்கிருந்து புறப்பட்டான்.

மறுநாள் மாலை நேரம் அந்த அரக்கன் கொக்கு வரும் நேரம் ஆச்சே.... இன்னும் வரவில்லையே என்று யோசித்தான்.

தேவேந்திரனும் அதேபோன்று யோசித்தான்.

இரண்டு பேரும் கொக்கு இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்து பார்த்தால் கொக்கைக் காணவில்லை. கீழே சில துளி இரத்தத்தை கண்டனர். சரி யாரோ கொக்கைக் கொன்றிருக்கிறார்கள். தேடிப் பார்ப்போம் என்று அந்தப் பாதை வழியாக ஓடினார்கள். அந்த ஆள் மாட்டிக் கொண்டான்.

"நான் அந்தக் கொக்கைக் கொல்லவில்லை. இது வேறு கொக்கு" என்றான்.

இந்திரன் உடனே தேவலோகம் சென்று கொஞ்சம் அமிர்தத்தை ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு வந்தான். கொக்கின் மேல் தெளித்தான். அது முழு உருவம் பெற்றது.

"உன்னை அடித்துக் கொன்றது யார்?" என்று கேட்டார்கள். அது சொல்லியது. நான் தூங்கிக் கொண்டு இருந்தேன். அப்பொழுது ஒரு கத்தி என்னைத் தாக்கியது. எனது உடம்பு இரண்டானது. அந்தச் சமயத்தில் இவனைத் தவிர வேறு யாரும் அங்கு இல்லை என்றது.

அவனும் உண்மையை ஒத்துக் கொண்டான். உடனே இந்திரன் வஜ்ராயுதத்தை ஓங்கி அவனை கொல்ல முயற்சித்தான். இந்தச் சமயத்தில் அந்தக் கொக்கு சொல்லியதாம்.

"இவனைக் கொல்லாதீர்கள். இவன் என்னிடம் வந்து சரணம்" என்றான். நம்முடைய பகைவனாக இருந்தால்கூட அவன் நம்மிடம் வந்து சரணடைந்து விட்டதால் அவனைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை. அப்படிக் காப்பாற்றவில்லையானால் அவனுடைய பாவத்தை அனுபவிக்க வேண்டும் என்றது.

உடனே அந்த மூன்று பேரும் சேர்ந்து அவனைக் காப்பாற்றி பத்திரமாக அவனுடைய வீட்டுக்கு கொண்டு போய் விட்டிட்டு வந்தார்கள். அது மட்டுமல்ல பவுண் நிறைந்த பானையையும் அவனிடம் ஒப்படைத்தார்கள்.

அதன்பின் மனம் திருந்தி தன்னிடம் இருந்தவற்றையெல்லாம் மற்றவர்களிடம் கொடுத்து விட்டு சந்நியாசி ஆகி விட்டான் என்று ஒரு கதை உண்டு. நம் ஊரில் சில மாப்பிள்ளைகள் மாமனார் வீடே சரணாகதி என்று ஆகி விடுவதுண்டு.

மாமனார்களும் சரணாகதி என்று வந்து விட்டவர்களை காப்பாற்ற வேண்டியது கடமை என்று அவர்களை ஏற்றுக் கொள்வதுண்டு. ஒரு மாமனார் சொல்லிக் கொண்டு இருந்தார். "என் வீடு தேடி வந்து அடைக்கலம் ஆகிவிட்ட என் மாப்பிள்ளையிடம் இதை உங்கள் வீடாக நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன்; அதுதான் தப்பாப் போச்சு!" என்றார்.

"ஏன்" என்று கேட்டேன்?

"இப்பொழுது அவர் என்னிடம் வாடகை கேட்க ஆரம்பித்து விட்டார்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நிகழ்ந்தது இனஅழிப்பே

## வட மாகாண சபையின் தீர்மானத்திற்கு தமிழகத்தலைவர்கள் பெரும் வரவேற்பு

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலை நடத்தப்பட்டது என்றும், இதுகுறித்து சர்வதேச விசாரணைக்கு ஐநா பாதுகாப்பு சபையில் உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தி, இலங்கையின் வடக்கு மாகாண சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'இலங்கையில் நிகழ்த்தப்பட்டது இன அழிப்பே எனக் கூறும் இந்தத் தீர்மானம், இலங்கையில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களை உலகுக்கு தெரிவிக்கும் தீர்மானம்' என்று வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

இந்தத் தீர்மானம் இலங்கை அரசியலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், வடக்கு மாகாண கவுன்சிலை உடனடியாக இலங்கை ஜனாதிபதி கலைக்க வேண்டும் என்ற கோரிக்கை அங்கு வலுப்பெற்று வருகிறது.

சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள அந்தத் தீர்மானம் குறித்து தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த கருத்துகள் விபரம்

### மு.க.ஸ்டாலின் (திமுக பொருளாளர்)



இலங்கை வடக்கு மாகாண சபையில் தீர்மானத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம் இனப் படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை உடனடியாக நடை பெற வேண்டும் எனக் கோரிக்கை விடுகின்றோம்

### ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் (தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்)




இலங்கை வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானத்தை வரவேற்கிறோம். இலங்கையில் இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேதான் போர் நடைபெற்றது. எனவே, இனவாத அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு, சமூக நல்லிணக்கத்துக்கும் ஜனநாயக உணர்வுகளுக்கும் முன்னுரிமை கொடுத்து, அங்கு அமைதியை உருவாக்க உரிய தருணம் வந்து விட்டது.

### பழ.நெடுமாறன் (தமிழர் தேசிய முன்னணி தலைவர்)



தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் முன்மொழிந்த தீர்மானத்தை முதல்வர் விக்னேஸ்வரன் நிறைவேற்றியுள்ளார். தமிழர் பகுதியில் இயல்பு நிலை திரும்பியுள்ளது என்றும், தமிழர்களை மீண்டும் குடியேற்றுவதற்கு இலங்கை அரசு பல உதவிகளைச் செய்து வருகிறது என்றும் முன்பு மகிந்த ராஜபக்ஷ அரசும், இப்போது மைத்திரிபால சிறிசேன அரசும் செய்த பிரசாரங்கள் பொய்யானவை என்பது அம்பலமாகிவிட்டது. இந்தத் தீர்மானத்தை ஒட்டு மொத்த ஈழத் தமிழர்களின் விருப்பமாகக் கருதி, இலங்கையில் விசாரணை மேற் கொள்ள ஐநா முன்வர வேண்டும் என்றார்.

### டி.ராஜா (இந்திய கம்யூனிஸ்ட் தேசியச் செயலர்)



2009இற்குப் பிறகு இலங்கை தமிழர்கள் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதையே இந்தத் தீர்மானம் உணர்த்து கிறது. இந்த விவகாரத்தில் மகிந்த ராஜபக்ஷ வைப்போல, மைத்திரிபால சிறிசேனவும் நடந்து கொள்ளக் கூடாது. இந்தியாவுக்கும் இதில் தார்மீக பொறுப்பு இருக்கிறது.

### தமிழிசை சவுந்தரராஜன் (பாஜக மாநிலத் தலைவர்)




இலங்கையில் நடைபெற்றது இனப் படுகொலைதான் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது சரியான முடிவாகும். தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் இதை வைத்து அரசியல் செய்யக் கூடாது. இலங்கை தமிழர்களின் நிலை உயர தேவையான நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசிடம் தமிழக பாஜக வலியுறுத்தும்.

### ஜி.ராமகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர்)



வடக்கு மாகாண சபையின் கோரிக்கை புதிதல்ல. இனப் படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று ஏற்கனவே ஐநா.மனித உரிமை ஆணையம் கூறியுள்ளது. சர்வதேச விசாரணைக்கு புதிதாக அமைந்துள்ள இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும். இதற்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசும் நாடாளுமன்றமும் தமிழக அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது என்றார்.

### பீட்டர் அல்போன்ஸ் (தமாகா)



இலங்கை வடக்கு மாகாண சபை தீர்மானத்தை வரவேற்கிறோம். இலங்கையில் தமிழர்களுக்கு இணக்கமான சூழல் நிலவ வேண்டும். இலங்கையில் மீண்டும் துயரச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க ஐ.நா முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

### கவிஞர் காசி ஆனந்தன்



போர்க் குற்றம் மனித உரிமை மீறல் என்ற வகையில் மட்டுமே சொல்லப்பட்ட ஈழத் தமிழர் படுகொலையை இன அழிப்பு நடவடிக்கை என்று கூறி சர்வதேச விசாரணை வேண்டும் என்று இலங்கை வடக்கு மாகாண சபை கொண்டுவந்த தீர்மானத்தை இந்திய-இலங்கை நட்புறவு மையம் முழுமையாக வரவேற்கிறது. இந்தத் தீர்மானத்தை இலங்கையிலுள்ள மத்திய மைத்திரிபால சிறிசேன அரசு ஏற்க மறுத்துள்ளது. இந்தப் போக்கு முன்பிருந்த மகிந்த ராஜபக்ஷ அரசின் போக்கை ஒத்ததே. இலங்கையில் ஆட்சி மாறியதால் தமிழர்கள் வாழ்வில் மாற்றம் வரும் என் பது பொய்யான நம்பிக்கை என்றார் அவர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு உக்ரைனில் யுத்த நிறுத்தம்

**உக்ரைனில் தொடரும் உள்நாட்டு மோதலை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக நடைபெற்ற பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதையடுத்து கிழக்கு உக்ரைனில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருகிறது.**



உக்ரைனில் உள்ள தன்னாட்சி பிராந்தியமான கிரிமியா பொது வாக்கெடுப்பு நடத்தி ரஷ்யாவுடன் இணைந்து. இதேபோல் கிழக்கு உக்ரைனிலும் ரஷ்ய ஆதரவு கிளர்ச் சியாளர்கள், ரஷ்யாவுடன் இணைய விரும்பி ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முக்கிய நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ள கிளர்ச்சியாளர்களுக்கும் ராணுவத்தினருக்குமிடையே கடும் மோதல் நடந்து வருகிறது. கடந்த 10 மாதங்களாக நடைபெற்று வரும் இந்த மோதலில் சுமார் 5 ஆயிரத்து 300 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த மோதல் போக்கை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் கூடி ஆலோசனை நடத்தினர். 16 மணி நேர பேச்சு வார்த்தைக்குப் பிறகு நேற்று முன்தினம் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ரஷ்ய ஜனாதிபதி புடின், கிழக்கு உக்ரைனில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும், அது ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலுக்கு வரும் என்றும், எல்லைப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப் பாட்டில் உள்ள பிராந்தியங்கள், மாகாணங்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் விவகாரம் மற்றும் மனிதநேய பிரச்சினைகள் குறித்தும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அதேசமயம் கிழக்கு உக்ரைனுக்கு தன்னாட்சி உரிமை வழங்கும் ஒப்பந்தம் எதுவும் கையெழுத்தாகவில்லை என்று உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரா ஷென்கோ திட்டவட்டமாக தெரிவித்தார். (இ-5)

# மோடி கோவில் இடிப்பு

குஜராத்தில் பிரதமர் மோடிக்காக கட்டப்பட்ட கோவிலும், சிலையும், அவர் கண்டனம் தெரிவித்ததை அடுத்து முழுமையாக இடித்து அகற் றப்பட்டு விட்டது. குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் பிரதமர் நரேந்திர மோடிக்காக அவரது ஆதரவாள ர்கள் கோவில் ஒன்றை கட்டினர். அங்கு அவரது உருவ சிலை அமை க்கப்பட்டு, நாளை 15 ஆம் திகதி திறந்து வைக்கப்படும் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்ட மோடி, இது இந்தியாவின் பாரம்பரியத்துக்கு எதிரானது எனவும், இதுபோன்ற கோவில்களை அமைக்குமாறு நமது கலாசாரம் கூறவில்லை என்றும், இந்த செய்தி வருத்தமளிப்பதாகவும் கூறினார். இதையடுத்து ராஜ்கோட்டில் நிறுவப்பட்ட மோடி கோவில் இடிக்கப்பட்டு, அந்த இடத்தில் பாரத மாதாவுக்கு கோவில் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கோவில் நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பாடசாலையின் மீது மர்ம நபர்கள் தாக்குதல்

டில்லியில் கிறிஸ்தவ பாடசாலை மீது மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தெற்கு டில்லியில் வசந்தவிஹார் பகுதியில் உள்ளது ஹோலி ஆக்ஸிலியம் பாடசாலை. இந்தப் பாடசாலைக்குள் நேற்று அதிகாலை நுழைந்த சில மர்ம நபர்கள் பாடசாலை முதல்வரின் அறையை சூறையாடியுள்ளனர்.

முன்னதாக, பாடசாலை வளாகத்தில் இருந்த சிசிடிவி கமராக்களை அவர்கள் உடைத்து நொறுக்கியுள்ளனர். பாடசாலை தாக்கப்பட்டதை, டில்லி கத்தோலிக்க திருச்சபையின் பாதிரியார் சவரிமுத்து சங்கர் உறுதி செய்துள்ளார்.

பாடசாலை தாக்குதலுக்குள்ளான விடயம் தெரியவந்த பிறகு பாடசாலைக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பொலிஸ் அதிகாரி கூறும்போது, "சம்பவம் குறித்த தகவலறிந்தவுடன் பொலிஸ் உயர் அதிகாரிகள் பாடசாலை வளாகத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொண்டு தடயங்களை சேகரித்துள்ளனர். மர்ம நபர்கள் சிசிடிவி கமராக்களை அடித்து நொறுக்கு முன்னர் பதிவான காட்சிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்றார்.

டில்லியில் அண்மைக் காலமாக தேவாலயங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுவந்தது. குறுகிய கால இடைவெளியில் 5 தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவ்விவகாரம் உலகளவில் கண்டனத்தை பெற்றுள்ள நிலையில், தற்போது கிறிஸ்தவ பாடசாலைமீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (இ-5)

# நவாஸ் ஷெரீப்புடன் பராக் ஒபாமா பேச்சு

## இந்திய பயணம் குறித்து ஆலோசனை

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்புடன் பேசிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, தனது இந்திய பயணம் குறித்து ஆலோசனை நடத்தினார் என்று அமெரிக்காவின் வெள்ளை மாளிகை தகவல் வெளியிட்டுள்ளது.

பராக் ஒபாமா இருதரப்பு நட்புறவு மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்தும் ஆலோசித்துள்ளார். ஜனாதிபதி பராக் ஒபாமா தனது இந்திய பயணம் குறித்து ஆலோசனை நடத்தினார், இரு நாடுகளும் (இந்தியா - பாகிஸ்தான்) தங்களது நட்புறவை மேம்படுத்த அனைத்து வழிகளிலும் அமெரிக்கா ஆதரவு அளிக்கும்." என்று கூறினார் என்று வெள்ளை மாளிகை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் இடையிலான நட்புறவு மேம்படவும் ஒபாமா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரத்தில் பாகிஸ்தானின் நடவடிக்கைக்கு பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு தலைவர்களும் அமெரிக்கா- பாகிஸ்தான் நட்புறவை வலுப்படுத்த தொடர்ந்து இடைவிடாது பணியாற்ற ஒப்புக் கொண்டுள்ளனர். என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (இ-5)

# அர்விந்த் கெஜ்ரிவாலுக்கு காய்ச்சல்

ஆம் ஆத்மி கட்சி தலைவர் அர்விந்த் கெஜ்ரிவால் காய்ச்சலால் அவதிப்படுவதாக கூறப்படுகின்றது.

டில்லி சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை வெற்றி பெற்றதையடுத்து டில்லி முதல்வராக ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அர்விந்த் கெஜ்ரிவால் பதவியேற்க உள்ளார். அதையொட்டி பிரதமரை அவரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலையில் கெஜ்ரிவால் சந்தித்தார்.

காலை சுமார் 10.30 மணிக்குத் தொடங்கிய அந்தச் சந்திப்பு 15 நிமிடங்களுக்கு நீடித்தது. அப்போது கெஜ்ரிவாலுடன் மணிஷ் சிசோடியாவும் இருந்தார். இதற்கிடையில் காய்ச்சலால் அவதிப்பட்ட கெஜ்ரிவாலுக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர். சிகிச்சையில் அவருக்கு 101 டிகிரி காய்ச்சல் இருந்தது தெரியவந்தது. (இ-5)

# ரயில் தடம் புரண்டதில் 12 பயணிகள் உயிரிழப்பு



ஓசூர் அருகே பெங்களூர்- எர்ணாகுளம் இடையே செல்லும் இன்டர்சிட்டி பயணிகள் ரயில் (ரயில் எண்: 12677) நேற்று காலை 7.40 மணியளவில் தடம் புரண்டதில் 12 பேர் பலியாகினர்.

மேலும், 60 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெங்களூரில் இருந்து கோயம்புத்தூர் வழியாக எர்ணாகுளம் வரையில் செல்கின்ற இன்டர்சிட்டி விரைவு ரயில் ஓசூரில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆனைக்கல் என்ற இடத்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

பெங்களூரிலிருந்து வந்து கொண்டிருந்த அந்த ரயில் ஆனைக்கல் பகுதியினை கடக்கும் போது திடீரென்று டி-8, டி-9 மற்றும் எஞ்சின் உட்பட நான்கு பெட்டிகள் தடம் புரண்டன. இதில் இரண்டு பொதுப் பெட்டிகளும், 2 ஏசி பெட்டிகளும் அடக்கம்.

சம்பவ இடத்துக்கு தமிழகம் மற்றும் கர்நாடகா ரயில்வே அதிகாரிகள் விரைந்துள்ளனர். மேலும் இரு மாநிலங்களில் இருந்தும் 10 அம்புலன்ஸ் வாகனங்களும் மீட்புப் பணிக்கு விரைந்துள்ளன.

D-9 பெட்டிதான் அதிக அளவில் பாதிப்படைந்துள்ளது எனவும், பயணிகள் தடம் புரண்ட பெட்டிகளுக்குள் மாட்டிக் கொண்டுள்ளதால் அதிகளவில் உயிரிழப்பும் ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிக்குளம் பிரதேசத்தையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

(மன்னார்)

கடந்த 11 வருடங்களுக்கு மேலாக மன்னார், முள்ளிக்குளம் கிராம மக்கள் இடம்பெயர்ந்து தற்போது காடுகளுக்குள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர். கடந்த 11 வருடத்துக்கு முன்னர் இராணுவத்தினரால் அந்த மக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் தற்போது குறித்த கிராமத்தை கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

அந்த மக்களை அவர்களின் சொந்த மண்ணில் மீள்குடியேற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "முள்ளிக்குளம் கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் அக்கிராமத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கடந்த அரசாங்கத்திடம் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எதும் ஏற்புடையதாக இருக்கவில்லை.

இந்நிலையில் தற்போதைய அரசு இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீண்டும் மீள்குடியேற்றப் போவதாக தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது.

அந்த அடிப்படையிலே முள்ளிக்குளம் மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களிலே மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கை சார்ந்த விபரங்களை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளோம்.

யாழ்ப்பாணம் பலாலி உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட சுமார் ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்காகவே இந்த காணிகள் விடுவிக்கப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச் சரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன முன்வைத்த அமைச்சரவை பத்திரத்துக்கே அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்திருக்கின்றார்.

குறித்த காணிகள் விடுவிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறும் அதே பட்சத்தில் முள்ளிக்குளம் மக்களின் காணிகள் கடற்படையினரிடம் இருந்து விடுவிக்கப்பட்டு அந்த மக்களை சொந்த மண்ணிலே குடியேற்றுவதற்கான முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் தொடர்ந்தும் வழியுறுத்தி வருகின்றோம்.

ஆகவே, அரசாங்கம் அதனை கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதே எமது பிரதான நோக்கமாக உள்ளது. நிலங்களை விடுவிக்கின்ற போது சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக கவனத்தை செலுத்த வேண்டும் என்பதே எனது கருத்து. ஆயிரம் ஏக்கர் விடுவிப்பது என்பது வரவேற்கத்தக்க விடயம். எனவே முள்ளிக்குளம் மக்களை தமது சொந்த நிலத்தில், அவர்களுடைய சொந்த வீட்டில் வாழ வைக்கப்பட வேண்டும்.

அவர்கள் காட்டிற்குள் எவ்வித அடிப்படை வசதியும் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலை மாற்றப்பட்டு சொந்த இடங்களிலே அவர்கள் மீளக்குடியேற்றப்பட வேண்டும் என்பதனை நாங்கள் ஜனாதிபதியிடம் கூறி வருகின்றோம்.

இச்சந்தர்ப்பத்திலும் நான் கடிதத்தினூடாக இவ்விடயத்தை வழியுறுத்தியுள்ளேன்.

அந்த வகையிலே முள்ளிக்குளம் கிராம மக்களை தமது சொந்த மண்ணில் மீள்குடியேற்ற உடனடியான நடவடிக்கைக்கு ஜனாதிபதியும், பிரதமரும் கவனம் எடுக்க வேண்டும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

## நெத்தலி ஆறு புனரமைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சபையின் குறித் தொதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபா நன்கொடை நிதியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நெத்தலி ஆறு புனரமைக்கப்பட்டுள்ளது. இதனூடாக நான்கு கதவுகள் கொண்ட சீராக்கி நெத்தலியாற்றுக்கு குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது.

முற்றாக சிதைவடைந்திருந்த சீராக்கி முழுமையாக மீள்நீர்மாணம் செய்யப்பட்டு கழிவு நீர் மற்றும் கல்மடு குளத்து நீரை மறித்து புளியம்பொக்கணை பகுதியில் உள்ள வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கால போகத்தில் 200ஏக்கர் விஸ்தீரணத்திற்கான நீர் விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து 125 விவசாயக்குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளனர்.

(அ-2)




## வவுனியா பிரதம தபாலகத்தில் ஆளணி பற்றாக்குறை நிலவுகிறது

(குருமன்காடு)

வவுனியா பிரதம தபாலகத்தில் ஆளணி பற்றாக்குறையால் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாகவும் வடமாகாண பிரதம தபால் அலுவலகம் இதுவரையும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இந்நிலையில் ஆளணி பற்றாக்குறை காணப்படுவதனால் மூன்று பேர் ஆற்ற வேண்டிய கடமையை ஒருவரே மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் பொதுமக்களும் பல மணி நேரங்கள் காத்து நிற்க வேண்டியிருப்பதோடு வேறு அரச தனியார் நிறுவனங்களில் கடமை புரியும் அலுவலர்களும் தபாலக சேவைகளை பெறுவதற்கு பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றது.


அஞ்சல் திணைக்களத்தில் கடமை புரியும் அலுவலர்கள் மேலதிகமாக கடமையை மேற்கொள்ள வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இதனால் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகாலை 5 மணிக்கு கடமையாற்ற செல்லும் ஒருவர் இரவு எட்டு மணி வரை கடமையாற்ற வேண்டியுள்ளதாக இருக்கின்றது. அத்துடன் முத்திரை கருமபீடத்தில் கடமையாற்றும் ஒருவர் காலை ஏழு மணியிலிருந்து இரவு எட்டு மணிவரையும் கடமையாற்ற வேண்டும். இதனால் தொடர்ந்து கடமையாற்றுவ தனால் உளரீதியான பாதிப்பினை எதிர் நோக்குவதாகவும் மக்களுக்குரிய சேவைகளை வழங்க முடியாதுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

வவுனியா நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் வசிக்கும் பெண் உத்தியோகத்தர்கள் காலையில் கடமைக்குச் சென்று இரவு எட்டு மணிக்கு கடமையை முடித்து வீடு செல்வதனால் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக பிள்ளைகள் உள்ள தாய்மார்கள இதனால் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவி க்கப்படுகிறது. (அ-2-250)

## தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கு குளிரூட்டி



(கிளிநொச்சி)

கிளி. முருகானந்தா கல்லூரியின் மஹிந்தோதய தொழில்நுட்ப் ஆய்வுகூடத்திற்கான குளிரூட்டி வழங்கும் நிகழ்வு நேற்று அதிபர் தி.வரதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான குளிரூட்டி தொகுதியினை பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளார். (அ-2)

### முள்ளந்தண்டுவடம்

## பாதிப்புக்குள்ளானோரின் பிள்ளைகளுக்கு உதவிகள்



(முல்லைத்தீவு)

வவுனியா மாவட்டத்திலுள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்க ப் பட்டோருக்கான அமைப்பான உயிரிழை நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் காந்தன் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வைத்து 85 மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட பயனாளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

கனடா வாழ் புலம்பெயர் தமிழரால் வழங்கப்பட்ட நிதியினை வலிகாமம் மீள்குடியேற்றத்தலைவரும், உதவும் இதயங்கள் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதியுமாகிய எஸ்.சஜீவன் எடுத்துச் சென்று வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக சமூகசேவைகள் அலுவலர் எஸ் தசரதன், வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். அங்கு வலிகாமம் மீள்குடியேற்றத் தலைவர் கூறுகையில்,

இதில் கலந்து கொண்ட பயனாளிகள் வன்னிப்பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது முல்லைத்தீவுப்பகுதியில் மிகமோசமாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்திற்கே பெரிதும் துன்பகரமான நிலையில் உள்ளவர்களுக்கு அவர்களின் பிள்ளைகளின் கல்வித்தரத்தை உயர்த்த தாம் தொடர்ந்தும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களு உதவவுள்ளோம் என்றார்.

(அ-2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி அமைச்சின் நிதியொதுக்கீட்டில் ஐம்பது ஆயிரம் வீடுகள் அமைக்க முடிவு

(கிளிநொச்சி-1)

**வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் நிதியனுசரணையுடன் புதிய அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தினூடாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் நாடளாவிய ரீதியில் தொகுதி ஒன்றிற்கு 100 வீடுகள் வீதம் 50 ஆயிரம் வீடுகள் அமை ப்பதற்கு சலுகை அடிப்படையில் கடனுதவி வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஏ.எம். இப்ராகிம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் முதல் கட்டமாக 75 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை , கரைச்சி பூநகரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் தலா 25 வீடுகள் வீதம் 75 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவ் வீடுகள் காணிமற்றும் நிரந்தர வீடுகள் அற்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கே வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வீடுகள் அமைப்பதற்கு கையிருப்பில் சிறுதொகை பணம் ஆயத்தமாகவுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இதற்கமைய கரைச்சி பிரதேச செயலக பிரிவில் அறிவியல் நகர் பகுதியிலும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் புளியம்பொக்கணை முசுரம்பிட்டி பூநகரி பிரதேச செயலக பிரிவில் பள்ளிக்குடா தெளிகரை பகுதியிலும் இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பயனாளிகளுக்கும் 230 சதுர அடிகொண்ட வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடுகள் அமைப்பதற்கும் 2 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியானது நீண்டகால கடன் அடிப்படையிலும் குறைந்த வட்டி வீதத்திலும் (3.7 வீதம்) வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால்பயனாளிகளுக்குவழங்கப்படவுள்ளது.

வீடமைப்பதற்கான மேலதிக பணத்தை தமது சொந்த பணத்திலோ அரச சார்பற்ற நிறுவனங்களிலோ பெற்று அமைக்க முடியும். (அ-2-277)

## திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஐந்து இலட்சம் மக்கள் கூடுவர்

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் திருக்கேதீஸ்வர ஆலய வசந்த மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது, சிவராத்திரியை முன்னிட்டு மாவட்டத்தில் பல கிராமங்களிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் சுமார் ஐந்து இலட்சம் பக்தர்கள் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு வருவர் என்று எதிர்பார்ப்பதால் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

இதற்கமைய இலங்கை போக்குவரத்து சபையின் 45 பேருந்துகளையும் தனியார் போக்குவரத்து சங்கத்தின் 50 பேருந்துகளையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அத்துடன் ஏனைய வசதிகள் குறித்தும் ஆராயப்பட்டு, சம்பந்தப்பட்ட துறையினரிடம் பொறுப்புக்கள் பகிரப்பட்டன.

இந்தக் கலந்து ரையாடலில், திருக்கேதீஸ்வர ஆலய முக்கியஸ்தர்களான தவயோகராஜா, புலவர் திருநாவுக்கரசு, எஸ்.எஸ். இராமகிருஷ்ணன், வீ.கந்தசாமி, திருமதி. கைலாசப்பிள்ளை, எஸ்.ராகவன், வைத்தியகலாநிதி மு.கதிர்காம நாதன் உட்பட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரச, அரசு சார்பற்ற நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ-2)




# விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவ பரிசோதனை

(மல்லாவி)

மத்தியரசின் சுகாதார கல்வி, விளை யாட்டுத்துறை அமைச்சுகள் இணைந்து பாட சாலைகளில் மாணவர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு முன்னதான மருத்துவ சான்றிதழ் வழங்கும் மருத்துவ முகாம்கள் பாடசாலை தோறும் நடத்தப்படவுள்ளன.

எனவே போட்டிகளில் பங்கேற்கவுள்ள மாணவர்களின் விபரங்களையும் மருத்துவ முகாம் நடைபெறவுள்ள இடங்கள் தொடர்பான விபரம் திரட்டும் சுற்றுநிரூபம் ஒன்று வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு முன்னர் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தி மருத்துவ சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் மாணவர்கள் உடல் உள ரீதியான பாதிப்புக்களில் இருந்து முற்கூட்டியே விலகிக் கொள்வதுடன் எதிர்பாராத உயிரிழப்புக்களில் இருந்தும் காப்பாற்றிக் கொள்ளமுடியும் என அச்சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனுப்பப்பட்டுள்ள மாணவர்கள் மருத்துவ பரிசோதனைகளுக்கான தகுதிகாண் விபரப்படிவத்தை பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்து மாணவர்களிடம் இருந்து தரவுகளை உடன் சேகரிக்குமாறு வலயக் கல்வி அலுவலகங்களிடம் கோரப்பட்டுள்ளது.

இத்தரவு சேகரிப்பின் பின்னர் வலயக் கல்வித் திணைக்களங்களின் ஊடாக மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளதாகவும் மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-15)



முள்ளியவளை சுதர்சனின் எழுத்து இயக்கம் நடிப்பில் உருவாகிய அனுபவி ராசா எனும் குறும்பட வெளியீடு அண்மையில் மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்ற போது... (படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)

## வடமாகாணத்தில் 85 பாடசாலைகள் இயங்காத நிலையில் உள்ளன

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழுள்ள 12 கல்வி வலயங்களில் ஆயிரத்து 80 பாடசாலைகள் உள்ள போதிலும் இவ்வாண்டின் புள்ளி விபரங்களின்படி 995 பாடசாலைகள் மட்டும் இயங்கி வருவதையும் 85 பாடசாலைகள் பல்வேறு காரணங்களால் ஆரம்பிக்கப்படாதுள்ளதாகவும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களில் அறிய முடிகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வடமாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் உள்ளன.

இவ்வலயங்களில் மாகாண பாடசாலைகள் ஆயிரத்து 54 உள்ள நிலையில் 969 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

வடமாகாணத்திலுள்ள இருபது தேசிய பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

இதேவேளை இங்குள்ள ஆறு தனியார் பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 57 பாடசாலைகளுள்ள நிலையில் 54 பாடசாலைகளும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 109 பாடசாலைகளுள்ள நிலையில் 101 பாடசாலைகளும் இயங்குகின்றன.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 92 பாடசாலைகள் உள்ள நிலையில் 89 பாடசாலைகளும் மடு கல்வி வலயத்தில் 54 பாடசாலைகள் உள்ள நிலையில் 53 பாடசாலைகளும் மன்னார் கல்வி வலயத்தில் 92 பாடசாலைகள் உள்ள நிலையில் 90 பாடசாலைகளும் இயங்குகின்றன.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 112 பாடசாலைகள் உள்ள நிலையில் 103 பாடசாலைகளும் தீவக கல்வி வலயத்தில் 77 பாடசாலைகள் உள்ள நிலையில் 61 பாடசாலைகளும் தென்மராட்சி கல்வி வலயத்தில் 69 பாடசாலைகள் உள்ள நிலையில் 61 பாடசாலைகளும் வடமராட்சி கல்வி வலயத்தில் 87 பாடசாலைகள் உள்ள நிலையில் 82 பாடசாலைகளும் இயங்குகின்றன.

வலிகாமம் கல்வி வலயத்தில் 154 பாடசாலைகள் உள்ள நிலையில் 138 பாடசாலைகளும் இயங்குகின்றன.

யாழ்ப்பாணக்கல்வி வலயத்தில் 116 பாடசாலைகளுள்ள நிலையில் 102 பாடசாலைகளும் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 61 பாடசாலைகளும் இயங்குகின்றன.

ஆகவே பாடசாலைகள் அனைத்தும் இயங்குகின்ற கல்வி வலயமாக வடமாகாணத்தில் துணுக் காய் கல்வி வலயம் அமைந்துள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (அ-2-15)

# பறங்கியாற்றிலிருந்து வவுனிக்குளத்துக்கு நீர்

## நடவடிக்கை எடுப்பார் அமைச்சர் றிசாத்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பாண்டியன்குளம் ஆகிய இரு பிரதேச செயலகங்க ளுக்கும் உட்பட்ட பறங்கியாற்றிலிருந்து வவுனிக்குளத்திற்கு நீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதியிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் உறுதியளித்ததாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மகாலிங்கம் தயானந்தன் தெரிவித்துள்ளார்.

குறித்த இரு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட விவசாய மக்கள் சிறுபோகம் மற்றும் பெரும் போகம் என்பவற்றை மேற்கொள்வதற்கு நீரில்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகினறனர். இது குறித்து பிரதேசங்களிலுள்ள விவசாயம், கமக்கார அமைப்புக்கள், மக்கள் ம.தயானந்தன் முறையிட்டனர்

வவுனிக்குளத்திற்கு பறங்கி யாற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு அம்மக்களின் கோரிக்கைக்கு அமைய கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதனின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இவ்வாறு பறங்கியாற்றை மறைத்து வவுனிக்குளத்திற்கு நீரை கொண்டு செல்வதன் மூலம் 40 சிறிய குளங்களும், 2 பெரிய குளங்களிலும் நீர் நிறைந்து காணப்படும். இதனால் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 30இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனவும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதுகுறித்து ஜனாதிபதியுடன் நேரடியாக கலந்துரையாடி விரைவில் தீர்வைப் பெறுக்கொடுப்பதாக அமைச்சர் வாக்குறுதியளித்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2015-14.03.2015



**வரவும் செலவும் சமமாகும் நேரம்! விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு என்று சொல்லும் மேட இராசி நேயர்களே!**

# வரவும் செலவும் சமமாகும் நேரம்

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் ராசிநாதன் செவ்வாய் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும்கூட. குருவின் பரிபூரண பார்வை அதன்மீது பதிகின்றது. எனவே தொட்ட காரியங்களில் கடைசி நேரத்தில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வாய்ப்புகள் அலைமோதும்.

குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வதில் சில தடுமாற்றங்கள் ஏற்படலாம். சூரியபலம் நன்றாக இருக்கிறது. தனாதிபதி சுக்ரன் லாப ஸ்தானத்தில் இருக்கிறார். சூரிய சுக்ர சேர்க்கையின் விளைவாக பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம்.

சகோதர ஸ்தானாதிபதி புதன். தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சகோதர வழி ஒத்துழைப்புகள் தொழிலுக்கு கைகொடுத்து உதவலாம். என்ன இருந்தாலும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் அல்லவா நடக்கின்றது. எனவே. ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதோடு அலைச்சல்களை குறைத்துக் கொள்வதும் நல்லது.

சனியின் நட்புக் கிரகங்களின் திசா புத்தி உங்கள் ஜாதகத்தில் நடைபெற்றால் உங்கள் உடல்நலம் சீராக இருக்கும். உங்களைச் சார்ந்தவர்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினர்களின் உடல் நலத்தைக் கருதி ஒரு சிறு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். மாதத் தொடக்கத்தில் சந்திராஷ்டமம் வருவதால் முதல் வாரத்தில் விரயங்கள் ஏற்படலாம்.

**உச்ச சுக்ரனின் பலன்கள்!**

இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து வந்த சுக்ர பகவான் பெப்ரவரி 17 ஆம் திகதி மீன ராசியில் உச்சம் பெறப் போகிறார். தனாதிபதி விரய ஸ்தானத்தில் உச்சம் பெறுவதால் தனவிரயம் ஏற்படுமே என்று நீங்கள் நினைக்க வேண்டாம். சப்தமாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். இது போன்ற காலங்களில் ஆலயத் திருப்பணிகள் மற்றும் அன்னதான கைங்கரியங்களில் செலவிட்டால் நல்ல பலன்கள் இல்லம் தேடி வந்து சேரும்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

இதுவரை மகரத்தில் சஞ்சரித்து வந்த புதன் மார்ச் 4 ஆம் திகதி கும்ப ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக உத்தியோக சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஊதிய உயர்வு. எதிர்பார்த்தபடி வந்து சேரும். புதிய வேலைக்காக முயற்சி செய்திருந்தால் அது கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். மாமன். மைத்துனர் வழி ஒத்துழைப்போடு மகிழ்ச்சிக்குரிய சம்பவங்களைச் சந்திக்கும் நேரமிது. சேமிப்பு உயரும்.




**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 13 ஆம் திகதி சுக்ரன் மேஷ ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். தன சப்தமாதியான சுக்ரன் உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

மனதளவில் நினைத்த காரியங்களை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி வைப்பு நிதிகளையும் வங்கிகளில் சேமிக்க முற்படுவீர்கள். கடன் சுமை குறையும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவராத்திரியன்று விரதமிருந்து சிவபெருமானை வழிபடுவதன் மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொடக்கத்தில் விரயங்கள் ஏற்பட்டாலும் மாதத்தின் மையப் பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். மேஷத்தில் சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது மிகச் சிறப்பான பலன்களை காணப்போகிறீர்கள். குடும்ப பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குரு பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால் குடும்பத்தில் தடைப்பட்ட சுபகாரியங்கள் இப்பொழுது கைகூடிவரும். இடம். பூமி வாங்குவதில் எண்ணம் செலுத்துவீர்கள். கட்டடம் கட்டும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நட்பு முறையில் உள்ளவர்கள் கைகொடுத்து உதவுவர். சிவன் வழிபாடு சிறப்புகளை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**தொழில் வளம் மேலோங்கும் மாதம்! உழைக்கவும், பிறருக்கு உதவவும் பிரியப்படும் இடப இராசி நேர்களே!**

# தொழில் வளம் மேலோங்கும் மாதம்

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் சுக்ரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு இணைந்து சூரியனும் சஞ்சரிக்கின்றார். எனவே. தொழில் வளம் மேலோங்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்வர்.

5 இல் ராகு வீற்றிருக்க அதற்கு அதிபதியான புதனும் 9 இல் இருப்பதால் பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். வாங்கிய சொத்தை விற்று விட்டுப் புதிய சொத்துக்கள் வாங்க முற்படுவீர்கள்.

அதே நேரத்தில் கண்டகச் சனியின் ஆதிக்கம் கொஞ்சம் மேலோங்கி இருக்கிறது. சனியின் பார்வை முழுமையாக உங்கள் ராசியில் பதிகிறது என்பதால் இதுவரை கனிவாக பேசியவர்கள் இனி கறாராக பேசுவார்கள். இனிமையாகப் பேசியவர்கள் இனி உங்களை விட்டு விலகலாம். பணிவாகப் பேசியவர்கள் இம்மாதத்தில் எடுத்தெறிந்து பேசலாம். எனவே. நீங்கள் அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

அதுமட்டுமல்லாமல் சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. அஷ்டமாதிபதி குரு வக்ரம் பெற்றிருப்பது நன்மைதான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கேற்ப சில காரியங்கள் எதிர்பாராத விதத்தில் வெற்றியைத் தேடித் தரும். வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து தென் முகக் கடவுளை வழிபட்டு வந்தால் தித்திக்கும் வாழ்க்கையில் திருப் பமும் ஏற்படும்.

**உச்ச சுக்ரனின் ஆதிக்கம்!**

நடக்கும் நாட்களை நல்ல நாட்களாக்கிக் கொடுக்க வரப்போகிறது உச்ச சுக்ரனின் ஆதிக்கம். பெப்ரவரி 17 ஆம் திகதி முதல் மீனச்சுக்ரனால் தேன் போல் வாழ்க்கை அமையும். செல்வ நிலை உயரும். வீணான நேரங்களையும். விரயங்களையும் எண்ணிக் குழம்பிய நீங்கள் இனி பொழுதெல்லாம் பணம் சம்பாதிக்கப் போகிறீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டே இருக்கும்.

விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்ந்து உங்கள் தொழிலுக்கு உறுதுணை புரியப் போகிறார்கள். சுக்ரன் உங்கள் ராசிநாதனாக இருப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். நோயில் திளைத்தவர்கள் இனி மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொண்டு உற்சாகத்தோடு பணிபுரியப் போகிறீர்கள்.

**கும்ப புதனின் ஆதிக்கம்!**

கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கும் பொழுதும். தன பஞ்சமாதிபதியான புதன் 10 இல் சஞ்சரிக்கும் பொழுதும் தொழில் வளம் சிறப்பாக அமையும். புதிய தொழில் தொடங்கும் எண்ணம் கைகூடிவரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு நினைத்த இடத்திற்கு மாறுதலும் நிம்மதியும் கிடைக்கும். ஒரு சிலருக்கு பதவி உயர்வில் இருந்த தடை அகலும்.

அரசியல்வாதிகளால் அனுகூலம் கிடைக்கும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் சூழ்நிலை உண்டு.




**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மேஷ ராசியில் சுக்ரன் மார்ச் 13 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு விழிப்புணர்ச்சி தேவைப்படும் காலமாகும். விரயங்கள் கூடுதலாக இருக்கும். அரைகுறையாக இருந்த பணிகள் மீதியும் முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் சிறு. சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். மருத்துவச் செலவு உண்டு.

வாங்கல். கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள பெரும் பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் உங்களுக்கு உறுதுணை புரிய முன்வருவர். 6 இற்கு அதிபதி 12 இல் மறைந்து விபரீத ராஜ யோகம் செயற்படும் நேரம் இது. எனவே நீண்ட நாட்களாக நடை பெறாத ஒரு சில காரியங்கள் திடீ ரென நடைபெறும். இம்மாதம் சனிக் கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவராத்திரியன்று சிவாலய வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொடக்கத்திலேயே நல்ல பலன்கள் உங்களுக்கு இல்லம் தேடி வரப்போகிறது. வரவு இருமடங்காக இருக்கும். உத்தியோகத்தில் நீங்கள் செய்ய நினைத்த மாற்றங்கள் தானாகவே வந்து சேரும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கணவன்-மனைவிக்குள் பாசமும். நேசமும் அதிகரிக்கும்.

சனிக்கிழமை தோறும் சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவராத்திரியன்று சிவபெருமான் வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். மாதக்கடைசியில் பழைய பாக்கிகள் வசூலாகும். ஆபரண சேர்க்கை உண்டு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்டு சுவை கண்டவனும் உணர்ச்சி இன்பம்
கண்டவனும் எளிதில் அவற்றை விடான்.
-சித்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எந்தையும் தாயும் அவர் முந்தையரும் வாழ்ந்த மண்

பேரன்புக்குரிய சிங்கள மக்களுக்கு வணக்கம். உங்களையும் எங்களையும் பிரித்தாளும் இனவாத சக்திகளை முறியடிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒருபோதும் நேரடியாக முரண்பட்டது கிடையாது.

மிக அன்னியோன்யமான உறவு இருதரப்பிடமும் இருந்துள்ளது. ஆயினும் இந்த நாட்டை ஆண்ட சிங்களப் பேரினவாதிகள் தங்களின் ஆட்சி நிலைப்பிற்காக தமிழர்களை விரோதிகளாகக் காட்டிக் கொண்டனர். அதனை நீங்களும் நம்பினீர்கள். போதாக்குறைக்கு தென்னிலங்கை ஊடகங்கள் இனவாதத்தை ஊதிப் பெருக்க வைத்தன.

அரசியல்வாதிகளின் பதவி ஆசையும் ஊடகங்களின் உழைப்பும் இனவாதத்தை வளர்ப்பதன் ஊடாக அடையப்பட்டன.

இதனால் காலத்துக்குக் காலம் இனக் கலவரங்களை ஏற்படுத்தி தமிழ்-சிங்கள உறவு பிரித்தாளப்பட்டது. இத்தகையதோர் சூழ்நிலையில்தான் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ முடியாது என்று தமிழ் இனம் முடிவு செய்தது. அந்த முடிவில் தமிழ் இளைஞர்கள் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். வெறி கொண்ட பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழர்களை எப்படியும் கொன்றொழிக்கலாம் என்று தீர்மானித்தனர். அதன் விளைவு இலட்சக்கணக்கில் அப்பாவி தமிழ் மக்கள் உயிரிழந்து போயினர். இதனிடையே இலங்கைக்கு வந்த இந்திய அமைதிப் படையும் தமிழ் இனத்தைச் சங்காரம் செய்து தாயகம் திரும்பியது.

ஆக, இலங்கைத் தமிழ் மக்கள் இத்துணை பேரழிவுகளைச் சந்திப்பதற்கு அவர்கள் செய்த குற்றம் தான் என்ன? தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்தழிவுகள் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்திருப்பீர்களா? என்பது நமக்கு தெரியாதாயினும் உங்களிலும் சிலர் எங்களின் அவலம் பற்றி சிந்தித்தனர் என்ற உண்மையையும் இவ்விடத்தில் சொல்லித்தானாக வேண்டும்.

எங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை உங்களில் பலர் அறியாமலும் இருந்திருக்கலாம். அல்லது எங்கள் இழப்புகள் பற்றி உங்களுக்கு வேறுவிதமான காட்சிகள் காட்டப்பட்டிருக்கலாம். என்ன செய்வது! உலகமயமாதல் என்பதற்குள் தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டம் இருள் மயத்திற்குள் அமிழ்ந்து போக, தற்போது சம்பந்தர்; மைத்திரி என்று சொல்ல, நாங்கள் புள்ளடி போட்டு விட்டு இருக்கிறோம்.

அட, எங்களின் புள்ளடிக்கு நாங்கள் வாழ்ந்திருந்த ஆயிரம் ஏக்கர் காணியை மீளத்தருவதாக மைத்திரி ஐயா கூறியிருப்பதாக அறிகிறோம். வந்த மனுசன் ஆயிரம் ஏக்கர்களைத் தந்தார் என்று நிம்மதி அடையலாம் என்றால், அந்த ஆயிரம் ஏக்கரும் ஏற்கனவே மகிந்தனார் விடுவதற்குச் சம்மதித்த இடமாம். ஓகோ! ஜனாதிபதி மைத்திரியும் எங்களை ஏமாற்றுகிறாரோ தெரியவில்லை.

என்ன செய்வது! நம்பி ஏமாந்த தமிழினம் என்பதால், நாடு கேட்ட எங்களுக்கு எந்தையும் தாயும் அவர் முந்தையரும் வாழ்ந்த நிலத்தை தந்துவிட, எங்கள் அரசியல் தலைமைகளும் நாங்கள் கதைத்தோம்; அவர் சிரித்தார்; ஆயிரம் ஏக்கர் தருவதாகக் கூறினார்; மகிழ்ந்தோம்; இன்னும் முயற்சிப்போம். இப்படியாக எங்கள் அரசியல் தலைமை கூற, அதை நாங்கள் நம்பி காலன் வரும் வரை எங்கள் காலம் போகிறது.

அன்புக்குரிய சிங்கள மக்களே! இந்த ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவித்தது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ நிச்சயம் மாற்றுப் பிரசாரம் செய்வார். தன்னைப் பிரதமராக்கினால் ஆயிரத்தோடு ஐயாயிரம் சேர்த்து தமிழர்களின் ஆறாயிரம் ஏக்கர் நிலத்தை இன்னும் பிடிப்பேன் என்று மகிந்த கூறுவார். இது நடக்கும் சத்தியம் என்று விமல்வீரவன்ச முறுகுவார்.

தயவுசெய்து இதைநம்பிவிடாதீர்கள். சிங்களப்படை குண்டு எறிந்த போது நாங்கள் விட்டுவந்த எங்கள் வீட்டுநிலத்தைதிரும்பப்பெறுவதையும் புரட்டிப்பிரசாரம் செய்வோர் மீது காறி உமிழ்ந்து விடுங்கள். அப்போது தான் தமிழ்-சிங்கள உறவு தழைக்கும்.

# மனிதவுரிமைகள் ஆணையாளருக்கு தமிழ் சிவில் சமூக அமையம் கடிதம்

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கும் எதிர்வரும் மார்ச் மாத ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டதொடர் தொடர்பில் தங்களிற்கு தமிழ் சிவில் சமூக அமையம் சார்பில் இம்மடலை வரைகின்றோம்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் செயற்படுகின்ற 100க்கு மேற்பட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் வலையமைப்பாகிய தமிழ் சிவில் சமூக அமையமானது, இலங்கையில் நேர்மையான சமாதானத்திற்காகவும் நீதிக்காகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அமைப்பாகும். மனித உரிமை ஆணையாளார் அலுவலத்தினால் நடத்தப்படும் இந்த விசாரணையில் எமது அமையத்தின் பங்களிப்பு தாங்கள் அறிந்ததே. அந்த வகையில் அவ்விசாரணையின் முடிவுகளை அறிந்து கொள்வதில் நாம் ஆர்வமாக உள்ளோம்.

இலங்கையில் அரசாங்கம் மாறியிருக்கின்ற போதிலும், இலங்கையின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலமாக செயற்பாட்டிற்கு வந்திருக்கும் சர்வதேச பொறிமுறையானது தொடர்ந்து அடுத்த கட்டத்திற்கு தாமதமின்றி நகர்த்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்குடன் இம்மடலை வரைகிறோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனவரி 9 2015 அன்று பொறுப்பேற்றுக்கொண்ட புதிய அரசாங்கம், யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களை விசாரிக்க உள்நாட்டுப்பொறிமுறை ஒன்றை உருவாக்கும் தனது எண்ணத்தை அண்மையில் வெளிப்படுத்தி இருக்கிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைபேரவையின் கூட்டத்தொடரில் வெளிவர இருக்கும் அறிக்கையை அல்லது அதன் தொடர்ச்சியாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை பிற்போடும் நோக்குடனேயே, இந்த உள்நாட்டு விசாரணை பொறிமுறை என்ற கருத்து தீர்ப்பு வெளிவந்திருக்கின்றது என நாம் கருதுகிறோம்.

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை சர்வதேச தரத்துடன் உருவாக்க இருக்கிறோம் என்கிற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் நிரந்தரமாகவே, சர்வதேச பொறிமுறை ஒன்றிற்கான கோரிக்கையை செயலிழக்கச் செய்யலாம் என இந்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஆனால், இலங்கையில் உருவாக்கப்படும் எந்த வொரு உள்ளகப் பொறிமுறையும் தீர்க்க மான பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதற்கு உதவப்போவதில்லை என் பதற்கு 2 பிரதான காரணங்களினை நாம் முன்வைக்க விரும்புகிறோம்.

1.தற்போதைய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட, இன்றைய அரசின் முக்கிய பங்காளிகள் முன்னைய அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகள் இலங்கை அரசாங்கம் "தூய்மையான ஒரு யுத்தத்தையே" நடத்தியது என்று வலியுறுத்தி வருபவர்கள். அத்தோடு தற்போதைய மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் பங்காளிகளான சில மிக முக்கிய பிரமுகர்கள், இறுதிப் போரில் நேரடியாக முக்கியமான பங்கு வகித்தவர்கள். முன்னைய அரசாங்கத்தில் எதிர்கட்சியில் இருந்து தற்போது அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் பொறுப்புக் கூறல் விடயத்தை வெறுமனே ஒரு வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சினையாகப் பார்ப்பவர்கள். எனவே இவ் அரசாங்கத்திடமிருந்து பொறுப்புக்கூறலை எதிர்பார்க்க முடியாது.

2.தென்னிலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் சிங்கள பௌத்த தேசியவாத அரசியலுக்கான தங்களது கடப்பாட்டை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்ற நிலையிலும், அந்த சிங்கள பௌத்த தேசியவாத அரசியலை பாதுகாக்கும் பெருமைக் குரியவர்களாக இலங்கை இராணுவத்தை சிங்கள தேசியவாத அரசியல் போற்றுகின்ற நிலையிலும், இலங்கை இராணுவத்திற்கெதிரான நம்பத்தகுந்த உள்ளக விசாரணைப் பொறிமுறை இலங்கையில் ஒரு போதும் உருவாக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை.

மேற்கூறிய காரணங்களால், இலங்கைக்கான உள்ளக விசாரணை சம்பந்தமான எந்தவொரு கோரிக்கையையும் மிகுந்த அவதானத்துடன் அணுகப்படவேண்டும் எனத் தங்களை மிகுந்த வினயத்துடன் கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக இவ்விடயம் தொடர்பில் காத்திரமான முன்வைப்புக்கள் எவையுமற்ற நிலையில் கூடுதல் அவதானம் தேவையானது என நாம் கருதுகிறோம்.

வெறுமனே காலத்தை கடத்துவதற்கும் தமக்கான ஓர் அரசியல் வெளியை உருவாக்குவதற்குமான ஏற்பாடுகளே இந்தக்கோரிக்கையின் ஒரே ஒரு நோக்கமாகும். எங்களைப் பொறுத்தவரையில், இலங்கை அரசாங் கத்துக்கு மேலும் கால அவகாசத்தை வழங்குவதானது, நீதியை தாமதிக்கச்செய்துவிடுவது மட்டுமல்லாது, நிரந்தரமாகவே மறுதலிக்கவும் செய்துவிடும். இந்தப் பின்னணியில், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்களும்நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவானது எவ்வாறு ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக இருந்தது என்பதையும் அது யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த பாரதூரமான குற்றங்களை வேண்டுமென்றே உதாசீனம் செய்தது என்பதையும் சர்வதேச முன்னெடுப்புக்களை வேண்டுமென்றே தாமதப்படுத்தியது என்பதையும் நாம் ஞாபகப்படுத்துகிறோம். இன்னுமொரு கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவுக்கு நேரம் வழங்குவதற்கு தமிழ் மக்கள் தயாரில்லை.

எனவே, தங்கள் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கையை வெளியிடுமாறும் அதன் வழி சர்வதேச செயன்முறையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமாறு தங்கள் அலுவலகத்தை மரியாதையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

இவ் விசாரணை அறிக்கை மூலம் பாரதூரமான குற்றங்கள் இடம்பெற்றமை கண்டறியப்படுமிடத்து தக்க சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளை எடுப் பதற்கான ஒழுங்குகளை ஆரம்பிக்குமாறு உரிய ஐ.நா அமைப்புகளையும் மற்றும் உறுப்பு நாடுகளையும் தங்கள் அலுவலகம் கேட்டுக்கொள்ள வேண்டும் எனவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம் என இணைப் பேச்சாளர்களான குமாரவடிவேல் குருபரன், எழில்ராஜன் ஆகியோர் கையொப்பம் இட்டு ஐ.நா.ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



பெற்றோருக்கான செய்தி

ஒரு ராஜாவிடம் கடும் சொற்களைப் பேசமுடியாது. முரட்டுத்தனமாக நடத்தலாகாது. மிகவும் பணிவாக இருத்தல் வேண்டும். இந்த நாடு முழுவதும் இவ்வாறு செய்ய முடிந்தால் இதுஒரு உண்மையான நாடாக மாறிவிடும். ஒரு மகத்தான நாடாக மாறிவிடும். நம் குழந்தைகளை வளர்க்கும் முறை நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். நீங்கள் கருத்தரிக்கும் முன்னரே சில முக்கியமான நிகழ்ச்சிகளில் நீங்கள் பங்கேற்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இன்று ஒரு டாம், டிக் மற்றும் ஹரியார் வேண்டுமானாலும் குழந்தையைப் பெற்றுக்கொள்கிறார்கள், வளர்க்கிறார்கள், ஒரு பயங்கர உலகை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் இவைகளின் மேல் உங்கள் கவனத்தைச் செலுத்தி உழைக்கவேண்டும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நல்லவனாக இரு



❖ பெரிய உழைப்பு என்னும் விலை இல்லாமல் அரிய செயல்கள் எதையும் செய்து விட முடியாது.

❖ பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. நன்மையும், தெய்வ பக்தியுமே நமக்கு போதுமானது.

❖ நற்செயல்களில் நாம் முழுமூச்சுடன் ஈடுபட்டால் கடவுளின் துணை நிச்சயம் கிடைக்கும்.

❖ எந்த வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்பவனே அறிவாளி.


❖ நல்லவனாக இரு. பிறருக்கு நன்மையை மட்டுமே செய். இது தான் ஆன்மீக வாழ்வின் அடிப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ICC World Cup 2015



# உலகக்கிண்ணம் -2015
## கோலாகலமாக இன்று ஆரம்பம்



நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றுவரும் உலகக் கிண்ணத் தொடரானது நேசிக்கும் நெஞ்சங்களை சிலிர்க்கவைத்து, பிரமிக்கவைத்து, பெருமை கொள்ள வைத்துள்ளதோடு இம்முறையும் அதேநிலை நீடிக்கும் என்பது நிச்சயம்.

மனித வாழ்வுடன் ஒன்றிப்போன விளையாட்டுக்களில் ஒன்றாக காணப்படும் கிரிக்கெட்டின் உணர்வுமிக்க உலகக்கிண்ண கிரிக்கெட் திருவிழாவின் 11 ஆவது அங்கம் இம்முறை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் இடம்பெறவுள்ளது.

பரபரப்பு, விறுவிறுப்பு குறைவில்லாத பலப்பரீட்சைகள் ரசிகர்களின் பசிக்கு விருந்தளிக்கவுள்ளதோடு சாதனைகளுக்கு குறைவில்லாததைப்போன்று எதிர்பார்ப்புக்கள் சிதையும் பட்சத்தில் வேதனைகளும் ஏற்படும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

இரண்டு குழுக்களில் 14அணிகள், 14 மைதானங்களில் 49 போட்டிகள், அவுஸ்திரேலியாவின் பரந்த மைதானங்களில் துடுப்பாட்ட வீரர்களின் போராட்டம், நியூசிலாந்தின் சிறிய மைதானங்களில் பந்துவீச்சாளர்களின் திண்டாட்டம், பந்து எல்லைக்கோடுகளை தொட்டுவிடமுதல் காற்றாய் பறந்து கட்டுப்படுத்துவது எப்படி? அதே பந்து புற்றரைகளை முத்தமிடுவதற்கு முன்னர் காப்பாற்றுவது யார்? அனைவருக்கும் ஒரே கனவு, ஒரே இலக்கு, அதனை அடைவதற்காய் ஒவ்வொரு நொடியும் மையங் கொள்ளும் அழுத்தங்கள், யாரை யார் வெல்வது? எவரெவரை எப்படி வீழ்த்துவது? ஒவ்வொரு அணுவிலும் ஓடிக்கொண்டிருக்கும் சிந்தனை, இறுதிவரையில் விட்டுக்கொடுப்பற்ற ஒரு பலப்பரீட்சையில் மோதிக்கொள்ள அனைவரும் இத்தருணத்திலேயே தயார்!

ஆம் பெரும் ஏற்பாட்டில் பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய இரண்டு நாடுகளில் 11 ஆவது உலகக் கிண்ணத்தொடர் ஆரம்பமாகின்றது.

இத்தொடரில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை, நடப்புச் சம்பியனான இந்தியா, இங்கிலாந்து, மேற்கு இந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாவே ஆகிய சர்வதேச டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகளும் அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய கத்துக்குட்டி அணிகளும் பங்கேற்கின்றன.

11 ஆவது உலகக் கிண்ணத்தை தம்வசமாக்கி முத்தமிடுவதற்காக உள்ளங்கள் இணையும் காதலர் தினமாம் இன்று பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29 ஆம் திகதி வரை துடிப்புடன் மிடுக்காக போட்டியிடவுள்ள 14 அணிகளும் ஏ,பி. என இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. குழு ஏ யில் 7அணிகளும் குழு பி யில் 7அணிகளும் உள்வாங்கப்பட்டதுடன் ஒவ்வொரு அணியும் குழு நிலையில் மற்றைய அணிகளுடன் தலா ஒவ்வொரு தடவை மோதவுள்ளன. குழு நிலையில் இடம்பெறவுள்ள 42போட்டிகளும் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளன.

அதனடிப்படையில் குழு நிலையில் முதலிரு இடங்களுக்கு முன்னேறும் அணிகளுக்கிடையில் காலிறுதிச் சுற்று இடம்பெறவுள்ளது.

மார்ச் மாதம் 18, 19, 20, 21 ஆம் திகதிகளில் முறையே முதலாவது காலிறுதிப் போட்டி சிட்னி மைதானத்திலும் இரண்டாவது போட்டி மெல்பேர்ன் மைதானத்திலும் மூன்றாவது போட்டி அடிலெய்ட்டிலும் நான்காவது போட்டி வெலிங்டனிலும் இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து மார்ச் 24ஆம் திகதி ஒக்லண்டில் முதலாவது அரையிறுதிப் போட்டியும் மார்ச் 26 ஆம் திகதி இரண்டாவது அரையிறுதிப் போட்டி சிட்னியிலும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றிவாகை சூடும் இரு அணிகள் மெல்பேர்ன் மைதானத்தில் மார்ச் 29ஆம் திகதி இடம்பெறும் 11ஆவது உலகக் கிண்ணத்தொடரின் கிண்ணம் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் தீர்க்கமான இறுதிப்போட்டியில் பங்கேற்கவுள்ளன.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன், சிட்னி, அடிலெய்ட், பேர்த், ஹோபாட், பிறிஸ்பேர்ன், கன்பரா ஆகிய மைதானங்களில் இறுதிப் போட்டி உள்ளடங்கலாக 26 போட்டிகளும் நியூசிலாந்தின் ஒக்லண்டில், கிறிஸ்ட்சேர்ச், வெலிங்டன், நேப்பியர், ஹமில்டன், ருனெடின், நெல்சன் ஆகிய மைதானங்களில் 23 ஆட்டங்களும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெருமுனையிலும் பாடசாலை நேரங்களின் இடையே திருட்டுத்தனமாக கிரிக்கெட் விளையாடும் சிறுவர்கள் முதல், விடுமுறை நாட்களில் மைதானத்திலும் வெற்றுக்காணிகளிலும் விரைவாக விளையாடும் இளைஞர்கள் முதல் உலகில் வாழும் மக்கள் தொகையால் நேசிக்கப்படும் இரண்டாவது பெருவிளையாட்டான கிரிக்கெட்டின் உலகமே ஒன்றிணைந்து கொண்டாடும் திருவிழா கோலாகலமாக இன்று ஆரம்பமாகின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பகமான...

காலமாக மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் நடவடிக்கைகளில் தோல்வி கண்ட நிலையில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை முக்கியத்துவம் பெறுவதாக பெண்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உண்மையைக் கண்டறிவதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் ஐ.நாவின் விசாரணை அறிக்கை அவசியமானது என்று தாங்கள் நம்புவதாகவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 28-வது கூட்டத் தொடரில் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும் என்றும் அந்த மகஜரில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் நடந்த உரிமை மீறல்கள், காணாமல்போதல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பாக உள்ளூரில் விசாரணை பொறிமுறை ஏற்படுத்தப்படும் என்ற புதிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனால், ஐ.நா மனித உரிமை பேரவையின் நிபுணர்கள், சர்வதேச நீதித்துறை நிபுணர்கள், காணாமல்போனோர் தொடர்பான விவகாரங்களுக்கான ஐ.நாவின் நிபுணர்கள் போன்றோரின் பங்களிப்புடன் இந்த உள்ளூர் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான பெண்கள் உள்ளூரில் நியமிக்கபட்ட பல ஆணைக்குழுக்களின் முன்னிலையிலும் பல்வேறு விசாரணைகளிலும் சாட்சியளித்துள்ளனர்.

எனினும், அவர்களுக்கு இதுவரையில் நீதி வழங்கப்படவில்லை என்றும் ஐ.நா மனித உரிமை விசாரணை அலுவலகத்தின் அறிக்கை ஐ.நா மனித உரிமைப் பேரவை கூட்டத தொடரில் வெளியிடப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். (செ-11)

## உள்நாட்டு...

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரசார இயக்குநர் ஜோன் சிவ்டன் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்ற செயல்களுக்கான தண்டனையை குற்றவாளிகளுக்கு பெற்று கொடுப்பதில் சர்வதேசத்தின் பொறுப்பு காத்திரமானது.

போர்க்குற்ற விசாரணையை என்றும் இலங்கை அரசு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மூலம் தீர்க்க முயற்சிப்பதாக கூறுகின்றது.

இவ்விடயத்தில் முற்று முழுதாக உள் நாட்டு விசாரணைப் பொறிமுறை என்பது நீதியான தீர்வை தேடுவதில் சவால்களை தோற்றுவிக்கும். சாத்தியமற்றதும் கூட. முழுமையான பலனை கொடுக்க முடியாத உள்நாட்டுப் பொறிமுறையை நம்புவதை விட சர்வதேச விசாரணையை வலுவுடன் முன்னகர்த்தி செல்ல வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை குறித்த விசாரணை அறிக்கையை சற்று தாமதமாக வெளியிடுவதனால், இன்னும் சிறந்த அறிக்கையை தயாரிக்கலாம், பொறுப்புக்கூறுதல் குறித்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு குறித்து இணக்கப்பாட்டிற்கு வரலாம் என கருதினால் அறிக்கையை தாமதிப்பதை தாங்கள் எதிர்க்கப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச பணியாளர்கள் வெறுமனே பார்வையாளராக இல்லாமல் விசாரணைகளை மேற்கொள்வதற்கும், சாட்சியங்களை செவிமடுத்தல், உட்பட அதிகாரங்கள் வழங்கப்பட்டவர்களாக காணப்படும் பொறிமுறையே பலனளிக்கும் முற்றுமுழுதான உள்நாட்டு விசாரணைபொறிமுறை பலனளிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## நொதேர்ன்...

காலிகமாக மூட மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இந்த தீர்ப்புக்கு எதிராக குறித்த நிறுவனம் யாழ்.மேல் நீதிமன்றில் முறையீடுசெய்தது. இந்த மேன்முறையீடு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நொதேர்ன் பவர் நிறுவனம் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்குமாறும், குறித்த நிறுவனத்தை மீண்டும் திறக்க அனுமதிக்க வேண்டும் என்றும் கோரி விண்ணப்பம் செய்திருந்தனர். பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணியான மணிவண்ணன் கடுமையான ஆட்சேபனையை முன்வைத்தார். இதனையடுத்து மல்லாகம் நீதிவான் நீதிமன்ற வழக்கேட்டினை மேல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு உத்தரவிட்ட மேல்நீதிமன்ற நீதிபதி, தடையுத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று உத்தரவிட்டார். (செ-4)

## கடற்படை...

துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்றைய தினம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு சென்றிருந்தார்.

அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் பல கெடுபிடிகளுக்கு பின்னர் உள்ளே செல்லி அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது காங்கேசன்துறை முழுவதும் கடற்படையினரால் பலத்த கண்கா ணிப்பிற்கு உட்படுத்ததப்பட்டுள்ள கடற்படையின் தேவைக்கு உட்டுபத்தப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

சிறியளவு யுத்தக் கப்பல்கள், இந்திய மீனவர்களின் றோலர் படகுகள் பாரிய கடற்படை படகுகள் என்பனவும் காங்கேசன்துறை முகத்தில் தரித்து நிறுத்தப்பட்டுள்ளன.

கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள காங்கேசன்துறை முகம் பார்வைக்கு விறுவிறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பது போல காட்சியளித்தது.

படையினருக்கான வெதுப்பகம், நூலகம், சிற்றூண்டிச்சாலை என அனைத்து வசதிளும் ஏற்படுத்தப்பட்டு சிறுநகர் போல் குறிப்பாக இராணுவ குடியிருப்பு போன்று அவ் இடம் தோற்றமளித்தது.

மேலும் கடற்படையினரின் இவ் கட்டமைப்புக்களினை படம் பிடித்த ஊடகவியலாளர்களினை கடற்படையினர் தடுத்ததோடு கண்காணிப்பிற்கும் உட்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மைத்திரியை...

ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்த இந்தியப் பிரதமர், மைத்திரிபால சிறிசேனவின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் இந்தியா - இலங்கை நல்லுறவுக்கு புதிய அணுகுமுறையாக அமையுமெனவும் குறிப்பிட்டார். இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். நடைபெறவிருக்கும் உலக கிண்ண போட்டியில் கலந்து கொள்கின்ற இலங்கை கிரிக்கெட் அணிக்கு தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்ட இந்திய பிரதமர், 1996ஆம் ஆண்டு போன்று இம்முறையும் இலங்கை அணி உலக கிண்ணத்தை வெற்றிகொள்வதற்கு வாழ்த்துத் தெரிவித்தார். இந்திய கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று நாளை 15-ம் திகதி முதல் 18 வரை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியையும் சந்திப்பார். அத்துடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சுக்களில் ஈடுபடுவார். மேலும், ஜனாதிபதி அரசியல் கட்சித் தலைவர்களையும் ஏனைய பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய விஜயத்தின் போது புத்தகயா விஹாரைக்கும் திருப்பதிக்கும் சென்று தரிசனம் மேற்கொள்வார். மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதி பதவியை ஏற்றதன் பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும். (செ-11)

# நெடியகாடு இளைஞர் கழக உதைபந்தாட்ட தொடர்

## விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி



நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் ஜெப்னா சலஞ்சர்ஸ் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்று தொடரில் நேற்று மாலை (13.02.2015) நடைபெற ஆட்டத்தில் ரேஞ்சர்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய விண்மீன் விளையாட்டு கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. விண்மீன் அணி சார்பில் எட்டாவது நிமிடத்தில் உதயயாஸ் ஒரு கோலினையும் 41 நிமிடத்தில் அருள்தாசன் ஒரு கோலினையும் ரேஞ்சர்ஸ் அணி சார்பில் சதீஸ் 43 நிமிடத்தில் ஒரு கோலினையும் பெற்றுக்கொடுத்தனர்.

இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து கழுகுகள் விளையாட்டு கழகம் மோதவுள்ளது. (க)

## விதிமுறையை மீறி பாகிஸ்தான் வீரர்கள்; அப்ரிடி, ஷேசாத் உட்பட 8 பேருக்கு அபராதம்



பாதுகாப்பு விதிமுறையை மீறியதற்காக பாகிஸ்தானை சேர்ந்த முன்னாள் அணித் தலைவர் அப்ரிடி, தொடக்க வீரர் ஷேசாத் உட்பட 8 வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் 14 நாடுகளை சேர்ந்த வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் பாகிஸ்தானை சேர்ந்த 8 வீரர்கள் இரவில் நண்பர்களுடன் விருந்து சாப்பிட்டு அரட்டை அடித்து விட்டு 45 நிமிட நேரம் தாமதமாக ஹோட்டலுக்கு திரும்பி உள்ளனர்.

இதனையடுத்து அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இதே மாதிரி மீண்டும் விதிமுறைகளை மீறினால் போட்டியில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று அணி நிர்வாகம் எச்சரித்துள்ளது.

ஒழுக்க விதிமுறைகளை மீறியதற்காக அவர்கள் மன்னிப்பு கேட்டுள்ளனர். அதோடு தாங்கள் அதே மாதிரியான தவறை மீண்டும் செய்ய மாட்டோம் என்றும் உறுதி அளித்துள்ளனர். (க)

## பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் பௌர்ணமி விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஜெயச்சந்திரன் கலையரங்கில் தலைவர் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கிராம அலுவலர் டி.எம்.வேதாபரணம் கலந்து கொள்ளவுள்ளார்.

புற்றுநோய் ஓர் பார்வை என்னும் தலைப்பில் சிறப்பு விளக்கவுரையை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் கலாநிதி எம்.வாசுதேவன் வழங்கவுள்ளார்.

மேலும் வரலாற்றுக் காதல் வாழ்விழந்து போனதேனோ என்னும் தலைப்பில் காதலர் தின சிறப்புக் கவியரங்கம் கவியரங்க தலைவர் சி.பாலமுரளி தலைமையில் நடை பெறவுள்ளது. (செ-11)

## குணரட்ணத்தை 18-ம் திகதி வரை நாடு கடத்த தடை விதிப்பு

(கொழும்பு)

முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல் பிரிவு உறுப்பினர் குமார் குணரட்னத்தை 18-ம் திகதி வரையில் நாடு கடத்தக் கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் தம்மை நாடு கடத்த அரசாங்கம் முயற்சிப்பதாக குமார் குணரட்ணம் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணைகள் மீளவும் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

[illegible]த்தை 13-ம் திகதி வரை [illegible]வோ அல்லது கைது செய்யவோ கூடாது என இதற்கு முன்னதாக உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

விசா காலாவதியாகியதன் பின்னர் நாட்டில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக குமார் குணரட்னம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய பிரஜையான குமார் குணரட்ணம் 30 நாள் சுற்றுலா வீசா அடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

குமார் குணரட்ணம் அரசியலில் ஈடுபட அனுமதியளிக்க வேண்டுமெனவும் இலங்கையில் தங்கியிருக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் முன்னிலை சோஷலிச கட்சி உள்ளிட்ட சில தரப்பினர் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாவிடம் தொடர்...

தொடர்பான உத தியோகபூர்வ அறிவித்தலை பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று நள்ளிரவுவரை வெளியிட வில்லை.

இராணுவப் புரட்சிக்கு முயற்சிகளை மேற்கொண்டமை தொடர்பான குற்றச் சாட்டுகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவரையும் விசாரணை செய்வதற்கான ஆலோசனையை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து பெறுவதற்கு காத்திருப்பதாக பொலிஸார் நேற்று முன்னதினம் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் தற்போது முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் விசாரணை ஆரம்பிக்கப் பட்டுள்ளதோடு, சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக இந்த விசாரணை இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

மேலும் காலி துறைமுகத்தில் கப்பலுக்குள் கண்டு பிடிக்கப்பட்ட எவென்ட் காட் தனியார் பாதுகாப்பு பிரிவின் ஆயுதங்கள் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மீட்கப்பட்ட ரத்னா லங்கா பாதுகாப்பு பிரிவுக்கான ஆயுதங்கள் போன்றவை தொடர்பில் கோத்தபாயவிடம் வாக்குமூலம் பெறப் பட்டுள்ளது. ஏற்கெனவே இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தொடரச்சியாகவே கோத்தபாயவிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பசிலின் மோசடிகள்...

நாட்டில் இடம் பெற்ற மிகப் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

பாரிய நிதி மோசடிகளுடன் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின் நிறைவைத் தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளார்.

இந் நிலையில் பசில் ராஜபக்ஷ விற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு தவிர்ப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (செ-11)

## வட மா...

பட்டுள்ளது.

வடமாகாணசபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானமானது தேசிய நல்லிணக்கத்திற்கு தடையாகவே கருதப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு விவகாரங்களில் தளர்வு ஏற்படுவது கடும்போக்கு வாதம் தலைதூக்க வழியாக அமைந்து விடக் கூடாது.

கடும்போக்குவாதமோ அல்லது பிரிவினைவாதமோ தலைதூக்க சந்தர்ப்பம் வழங்கப்பட முடியாது.

இராணுவத்தினர் பிழை செய்திருந்தால் அது குறித்து விசாரணை நடத்த உள்ளக விசாரணைப் பொறி முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விசாரணைகளின் மூலம் எந்தவொரு இலங்கையரையும் சர்வதேச நீதிமன்றின் முன்னிலையில் நிறுத்த இடமளிக்கப பட முடியாது என வர்ணசிங்க நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (செ-11)


## கையெழு...

னிலை சோஷலிச கட்சியினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

நாடளாவிய ரீதியில நடைபெற்று வரும் போராட்டமானது நேற்று யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு பின்புறமாகவும் மற்றும் பலாலி வீதி பரமேஸ்வராச் சந்திக்கருகிலும் நடைபெற்றது.

குறித்த போராட்டத்தினை ஒழுங்கு செய்திருந்த முன்னிலை சோஷலிச கட்சியினரால் குமார குணரட்ணத்தின் அரசியல் உரிமையைப் பறிக்காதே, காணாமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்களுடைய விபரங்களை உடனடியாக புதிய அரசாங்கம்வெளியட வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கய துண்டுப்பிரசுரங்களும் பொதுமக்கள் மத்தியில் விநியோகிக கப்பட்டிருந்தது. (செ-4)

# மரண அறிவித்தல்கள்



## வீரசிங்கம் சகாதேவசங்கரி

(ஓய்வுபெற்ற பதில் முகாமையாளர் மக்கள் வங்கி - கன்னாதிட்டி 2 ஆவது கிளை - யாழ்ப்பாணம்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி சிவன் கோயில் தெற்கு வீதியையும், சில ஆண்டுகள் லண்டனையும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சகாதேவசங்கரி 10.02.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் இரத்தினம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை கமலாம்பிகை தம்பதியினரின் மருமகனும், கமலநேத்திரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியை - சங்கரி மிஸ்) அவர்களின் பாசமிகு கணவரும், கஜதேவசங்கரி (லண்டன்), யாதவசங்கரி (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், Dr.காவேரி (லண்டன்), தர்சினிமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரஹஷ்மி, வித்தியாஷ்மி, சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தருமசங்கரி, கணேசசங்கரி, ராஜசங்கரி, மங்கையற்கரசி, ஞானசங்கரி, துருவசங்கரி மற்றும் ஆனந்தசங்கரி, மதியாபரணம், பரதசங்கரி, லோகநாயகி, திருநல்நாயகி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கனகநாயகி, மங்களேஸ்வரி, ஞானசம்பந்தன், ஜெயசீலன் மற்றும் வசந்தா, சற்குணவதி, ரூபவதி, இந்திரபூபதி, தம்பித்துரை, கதிர்காமசோதி, லோகராணி, விமல இந்திரா, நிமலசோபிதா, அம்பிகதாஸ், விப்ரதாஸ், சிவகலா, சிவபிரேமா, சுசீலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன்கோவில் தெற்கு வீதி,
திருநெல்வேலி.
தொலைபேசி : 021 222 2289 (9495)

தகவல் : ச.கஜதேவசங்கரி (மகன்)
ச.யாதவசங்கரி (மகன்)

## கதிரவேலு முருகேசு

(ஓய்வுபெற்ற திறைசேரி உத்தியோகத்தர்)



காரைநகரைச் சேர்ந்தவரும், மலேசியாவைப் பிறப்பிடமாகவும், 2 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு - முருகேசு நேற்று முன்தினம் (12.02.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வநாயகி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா வேலுப்பிள்ளை - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை நாவலர் மகா வித்தியாலயம்) பாசமிகு கணவரும், பாலமுரளி (லண்டன்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லதா (லண்டன்), சத்தியரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், நாகராஜேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற மகேஸ்வரி (யாழ்ப்பாணம்) மற்றும் தியாகராஜா (அவுஸ்திரேலியா), புவனேஸ்வரி (அவுஸ்திரேலியா), நடராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைச் சகோதரனும், கிருஸ்ணா (லண்டன்), விதுசன் (லண்டன்), சரிகா (கனடா), சாரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7737

தகவல் : குடும்பத்தினர்

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்..
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 895 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 320 2973
(9503)
No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
No.181, 1st Floor, Main Street, Nelliady.
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். யாரும் படிக்கலாம். மொழிபெயர்ப்புகள்... யாழ், வன்னி, வவுனியா, & மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWISS... செல்கிறார்கள்.
DELF A1 International Diploma : வகுப்பு ஆரம்பம் Feb 14.
பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 3500 ஏனையோருக்கு 9000
உடன் அழைத்து பதிவுசெய்யுங்கள்..
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட் → AF
(9503)

Dutch, Deutsch, French

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.
* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
Vivekananda Academy
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
(Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393
(C-107)

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்....
STUDENT VISA - WORK VISA - MIGRATION / PR
UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Singapore உள்ளிட்ட எந்தவொரு நாட்டுக்கும்

| | |
|---|---|
| O/L or A/L உடன் | பகுதிநேர வேலைவாய்ப்புடன் மாணவர் விசா & PR |
| பட்டதாரிகளுக்கு | வேலைவாய்ப்புடன் நிரந்தர குடிரிமை (PR) |
| தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு | வெளிநாட்டு வேலையுடன் குடியுரிமை (PR) |

மற்றும் Visit Visa, Parent Visa, Dependent Visa & Visa Rejection Appeals
(C-110)
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி பொருத்தமான வாய்ப்புக்களை அறிந்துகொள்ளுங்கள்
FREE Assesment
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org